வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu வார மலர்

மாருதி
MARUTHI MONEY EXCHANGE
Money Exchange (Pvt) Ltd.
இல.390. ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
MoneyGram. மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER ரியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேன் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : news@eelanadu.lk
மலர் : 06
02.02.2025 ஞாயிற்றுக்கிழமை
இதழ் : 33
பக்கங்கள் : 16

# அரசினால் தூசு தட்டப்படும் சொத்துக்குவிப்பு வழக்குகள்!

## முன்னாள் அமைச்சர்கள் சிலர் கைதாகுவர்

கொழும்பு, பெப்ரவரி 02

**கடந்த அரசாங்கங்களின் காலத்தில் நடைபெற்ற மோசடி, சட்டவிரோத சொத்துக்குவிப்பு விடயங்களுடன் தொடர்புடைய சில வழக்குகள் தற்போதைக்குத் தூசு தட்டப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.**

இதன்படி, முன்பு நடைபெற்ற ஊழல், மோசடி மற்றும் சட்டவிரோத சொத்துக் குவிப்பு விடயங்கள் தொடர்பில் வழக்குகள் பதியப்பட்டு, பின்னர் விசாரணைகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வழக்குகளையே மீண்டும் முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் நான்கு வழக்குகளின் விசாரணைகளை நிறைவு செய்துள்ள குற்றப் புலனாய்வுப் பிரிவு பொலிஸார், சட்ட மா அதிபரின் ஆலோசனைக்காக அவற்றை அனுப்பி வைத்துள்ளனர்.

மேலும் நான்கு வழக்குகள் தொடர்பான கோப்புகள் இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. மேலும் மூன்று வழக்குகள் தொடர்பிலும் துரிதமான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இவ்வழக்குகள் தொடர்பில் முன்னைய அரசின் ஐந்துக்கும் மேற்பட்ட முன்னாள் அமைச்சர்கள் கைது செய்யப்படலாம் என்று தெரிய வந்துள்ளது.

இந்நிலையில் நிலுவையில் உள்ள நில வழக்குகளை விரைந்து தீர்ப்பதற் கான புதிய திட்டத்தை

15



## மாவைக்கு நாமல் இறுதி அஞ்சலி

யாழ்ப்பாணம், பெப். 02

பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் அமரர் மாவை சேனாதிராசாவுக்கு மாவிட்டபுரத்தில் உள்ள அவரது இல்லத்துக்கு சென்று இறுதி அஞ்சலி செலுத்தினர்.

இதன்போது பொதுஜன பெரமுனவின் வடக்கு அமைப்பாளர் கீதநாத் காசிலிங்கமும் உடனிருந்தார்.

மாவிட்டபுரத்தில் உள்ள மாவை சேனாதிராசாவின் இல்லத்துக்கு சென்ற நாமல் ராஜபக்ஷ

15

# மாவை சேனாதிராசாவின் இறுதி நிகழ்வு இன்று!



கொழும்பு, பெப். 02

மறைந்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசாவின் இறுதிக் கிரியை இன்று நடைபெறவுள்ளது.

அதன்படி இன்று காலை 8 மணிக்கு மாவிட்டபுரத்தில் உள்ள அவரது இல்லத்தில் சமய கிரியைகள் நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து முற்பகல் 10 மணிக்கு அஞ்சலி உரைகள் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பின்னர் பிற்பகல் 3 மணியளவில் மாவிட்டபுரம் தச்சன்காடு இந்து

15

# இந்திய மீனவர் எல்லை தாண்டினாலும் துப்பாக்கிச்சூடு நடத்த முற்படக்கூடாது

## கூறுகிறார் வாசுதேவ நாணயக்கார

கொழும்பு, பெப். 02

"இந்திய மீனவர்கள் எல்லைத் தாண்டினாலும், அவர்களை கைது செய்யவேண்டுமேதவிர, துப்பாக்கிச்சூடு நடத்த முற்படக்கூடாது. அவ்வாறு செய்வது பாரதூரமான விடயமாகும்." என்று ஜனநாயக இடதுசாரி முன்னணியின் முக்கியஸ்தரும், முன்னாள் அமைச்சருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இது தொடர்பில் இந்திய தரப்பில் கடும் விமர்சனம் முன்வைக்கப்பட்டுள்ளது. துப்பாக்கிச்சூடு நடத்தி நட்புறவைக் கட்டியெழுப்ப முடியாது. துப்பாக்கிச்சூடு நடத்த வேண்டிய கட்டாய சூழ்நிலை ஏற்பட்டிருந்தால், அதற்கான காரணங்களை உரிய வகையில் முன்வைத்தால் இப்படியான விமர்சனங்கள் வராது.

இந்திய

15

# சட்டத்துக்கு மதிப்பளித்து மகிந்த வீட்டை விட்டு வெளியேறவேண்டும்

## பொதுமக்கள் பாதுகாப்பு பிரதி அமைச்சர்

கொழும்பு, பெப். 02

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரச உத்தியோகபூர்வ இல்லத்தில் இருந்து வெளியேறுமாறு கடிதம் அனுப்பப் போவதில்லை. வெகுவிரைவில் புதிய சட்டம் இயற்றப்படும். சட்டத்துக்கு மதிப்பளித்து வீட்டை விட்டு அவர் வெளியேறவேண்டும் என பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகாரங்கள் பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்தார்.

கிளீன் சிறிலங்கா செயற்திட்டத்துக்கமைய கொழும்பு கோட்டை ரயில் நிலையம் மற்றும்

15

# 76 வேலைத்திட்டங்களை ஆரம்பிக்கவுள்ளது சீனா!

## ஜனாதிபதி அநுரகுமார உறுதி

கொழும்பு, பெப். 02

சீன அரசாங்கம் இலங்கையில் 76 வேலைத் திட்டங்களை ஆரம்பிக்க உறுதியளித்துள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

தமது அரசாங்கம் நாட்டை பொறுப்பேற்கும் போது நாடு வங்குரோத்து நிலையிலிருந்தது எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி,

நாடு வங்குரோத்து நிலையிலிருந்ததால் யாரும் கடன் கொடுக்கவில்லை எனவும்,

15

# பல கட்சிகளுடன் கூட்டணி அமைப்பதற்கு பேச்சுக்கள்!

## மொட்டு கட்சி தீவிர நகர்வு

கொழும்பு, பெப். 02

பல கட்சிகளுடன் கூட்டணி அமைத்து, வரவிருக்கும் தேர்தலில் போட்டியிடுவது குறித்து மொட்டு தரப்பு பேச்சு நடத்தியுள்ளதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சஷீந்திர ராஜபக்ஷ தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் அரசியல் குழு நேற்று முன்தினம் பிற்பகல் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் விஜேராமவில் உள்ள இல்லத்தில் கூடியது.

இதன்போது எதிர்வரும் தேர்தல்களில்

15

# எங்கள் கடல் வளத்தை பாதுகாக்க விசேட வேலைத்திட்டம் விரைவில்!

## அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.02

எமது நாட்டுக்குரிய கடல் வளம் நிச்சயம் பாதுகாக்கப்படும் எனவும், அதற்கான விசேட வேலைத்திட்டமொன்று உருவாக்கப்படும் எனவும் கடற்றொழில் மற்றும் நீரியல்வளைத்துறை அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

அல்லைப்பிட்டி பகுதியில் வெண்புரவி புனித அந்தோனியார் கடற்றொழில் கிராமிய அமைப்பின் ஏற்பாட்டில், அமைச்சருக்கான வரவேற்பு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்நிகழ்வில் பங்கேற்றிருந்த அமைச்சருக்கு மக்களால் அமோக வரவேற்பு

15

# மக்களால் கட்டியெழுப்பப்பட்ட அரசை எதிரிகளிடமிருந்து பாதுகாக்கவேண்டும்

## அமைச்சர் பிமல் ரத்நாயக்க கோரிக்கை

கொழும்பு, பெப். 02

இலங்கை வாழ் மக்கள் இந்த நாட்டில் புதிய அரசியல் வரலாறொன்றை எழுத ஆரம்பித்துள்ளனர். நாடு முன்னோக்கிப் பயணிக்க ஆரம்பித்துள்ளது. மக்களால் கட்டியெழுப்பப்பட்ட இந்த அரசாங்கத்தை எதிரிகளிடமிருந்து பாதுகாக்க வேண்டும். எமது இலக்கை அடையும் வரை நாம் அனைவரும் ஒன்றாக பயணிக்க வேண்டுமென போக்குவரத்து நெடுஞ்சாலைகள் துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கை

15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடமாற்றம் செய்ய வைத்திய நிபுணர் யாழுக்கு மீள அழைக்கப்பட வேண்டும்

## ஜனாதிபதி முன் சிறீதரன் எம். பி. கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப்.02

விசேட வைத்திய நிபுணர் ஒருவர் மாற்றீடு ஆளணி எது வும் இன்றி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்ட மையால் சிகிச்சை பெற்றுவந்த நோயாளர்களின் நிலை பெரும் கவலைக்குரியதாகவும் சவாலா கவும் மாறியுள்ளது.

இவர்களுக்கான சிகிச்சை களில் ஏற்படும் காலதாமதம் அச் சிகிச்சைகளின் பலனை கேள்விக்குறியாக்கும் என பாரா ளுமன்ற உறுப்பினர் சிவ ஞானம் சிறீதரன் தெரிவித்துள் ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸ நாயக்க தலைமையில் யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட் டத்தின்போதே அவர் மேற் கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். போதனா மருத்துவ மனையில் பல் முக சீராக்கல் பிரிவின் விசேட வைத்திய நிபு ணர் ஒருவரே உள்ளார். அவ ருடை சிறந்த சேவையினூடாக இதுவரை காலமும் காணப் பட்ட நீண்ட காத்திருப்போர் நோயாளர் பட்டியல் அவரது சேவைக் காலத்தில் இல்லா தொழிக்கப்பட்டுள்ளது.

நோயாளர்களின் நன்மை கருதி கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையிலும் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்க ளில் உள்ள நோயாளர்களை பார்வையிட்டு சிகிச்சை அளித்து வந்துள்ளார்.

இதில் பெரும்பான்மையாக அவரது சேவையை பெறுபவர் களாக பாடசாலை மாணவர்கள் காணப்படுகின்றனர்.

மேலும், அவர் எந்தவொரு தனியார் மருத் துவமனைகளி லும் சேவை யாற்றுவதில்லை.

இவருடைய திடீர் இடமாற் றத்தால் சிகிச்சை பெற்றுவந்த நோயாளர்களின் நிலை பெரும் கவலைக்குரியதாகவும் சவா லாகவும் மாறியுள்ளது.

இவர்களுக்கான சிகிச்சை களில் ஏற்படும் காலதாமதம் அச் சிகிச்சைகளில் பலனை கேள்விக்குறியாக்கும் எனவும்

எனவே, உடனடியாக அவரை யாழ். போதனா மருத் துவமனைக்கு மீள அழைக்க உதவ வேண்டும் அல்லது மாற்று ஆளணியை நியமிக்க வேண்டும் என வலியுறுத்தி னார். (எ-05)



## வடமராட்சி கிழக்கு கடற்பகுதியில் இறந்து கரையொதுங்கும் ஆமைகள்

யாழ்ப்பாணம், பெப்.02

வடமராட்சி கிழக்கு கடற் பகுதியில் சில நாட்களாக ஆமைகள் இறந்த நிலையில் கரையொதுங்கி வருகின்றன.

இந்த நிலையில் வடம ராட்சி கிழக்கு நாகர்கோவில் பகுதியில் நேற்றுக் காலை மூன்று ஆமைகள் இறந்த நிலை யில் கரையொதுங்கின.

கடல் கொந்தளிப்பாக காணப்படுவதால் காயமடைந்த ஆமைகள் உயிரிழந்து கரையொதுங்குவதாக அப் பகுதி மீனவர்கள் தெரிவித் தனர்.

ஆமைகளை பிடிப்பதும், இறைச்சிக்காக பயன்படுத்து வதும் சட்டவிரோதம் என்ப தால் கரையொதுங்கிய ஆமை கள் கைவிடப்பட்ட நிலையில் துர்நாற்றம் வீசக்கூடிய நிலை யிலும் உருக்குலைந்தும் காணப் படுகின்றன. (எ-05)



யாழ்ப்பாணம், சுன்னாகம் - தாளையடி பூரணை புஷ்கலை சமேத சிறீ அரிகரபுத்திர ஐயனார் தேவஸ் தான மகா கும்பாபிஷேகம் நேற்று முன்தினம் நடைபெற்றது. பெருந்திரளான பக்தர்கள் புடைசூழ மங் கள வாத்தியங்கள் முழங்க யானைகள், குதிரைகள் பவனியாக கும்பங்கள் எடுத்து வந்து மகா கும்பா பிஷேகம் நடைபெற்றது. கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 48 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெற வுள்ளது. (படங்கள்:- கஜிந்தன்)

# இரட்டைக் கொலை வழக்கு ஒத்திவைப்பு

வவுனியா, பெப்.02

வவுனியா, தோணிக்கல் பகுதியில் இடம்பெற்ற இரட் டைக் கொலைச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட டவர்களுக்கான விளக்கமறி யலை நீடித்து வழக்கு விசார ணையை வவுனியா நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.

கடந்த வருடம் யூலை மாதம் 23 ஆம் திகதி அதி காலை வீடு புகுந்து தாக்குதல் நடத்தி பெற்றோல் ஊற்றி எரியூட்டப்பட்ட சம்பவத்தில் கணவன் மற்றும் மனைவி ஆகிய இருவர் உயிரிழந்தனர். இந்த இரட்டைக் கொலை சம்பவத்துடன் தொடர்புபட்ட சந்தேகத்தில் ஏழு பேர் கைது செய்யப்பட்டிருந்ததுடன், அவர்களிடம் குற்றப் புலனாய் வுத் திணைக்களத்தின் விசார ணைப் பிரிவினர் விசார ணைகளை முன்னெடுத்திருந் ததுடன், அவர்கள் நீதிமன்ற உத்தரவுக்கமைய தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த வழக்கு விசாரணை வவுனியா நீதிமன்றில் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள் ளப்பட்ட போது, சம்பவம் தொடர்பில் கைது செய்யப் பட்டுள்ள பிரதான சந்தேக நபர் மேல் நீதிமன்றில் பிணை கோரி விண்ணப்பித்துள்ளார். இதன் வழக்கு விசாரணை வரவுள்ள தால் விளக்கமறியலை நீடித்து வழக்கை எதிர்வரும் பெப்ரவரி 18 ஆம் திகதிக்கு ஒத்திவைப்ப தாக வவுனியா நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. (எ-10)

## ஸ்கந்தா ஆரம்ப பாடசாலையில் திறன் வகுப்பறை திறப்பு விழா





யாழ்ப்பாணம், பெப். 02

யாழ்ப்பாணம், வலிகாமம் பிரதேசத்தில் அமைந்துள்ள ஸ்கந்தா ஆரம்பப் பாடசாலை யில் மறைந்த ஜனாதிபதி சட் டத்தரணி சாந்தா அபிமன்சிங் கம் ஞாபகார்த்தமாக அமையப் பெற்ற திறன் வகுப்பறையின் புதிய கட்டடத் தொகுதி நேற்று முன்தினம் வெள் ளிக்கிழமை திறந்து வைக்கப் பட்டது. பாடசாலையின் அதிபர் சிவசுப்பிரமணியம் நேதாஜி தலைமையில் நடை பெற்ற இந்த நிகழ்வில்

சாந்தா அபிமன்சிங்கம் அறக்கட்டளையின் சார்பில் அ. உதயகுமார் உள்ளிட்ட விருந்தி னர்கள் கலந்து கொண்டனர். 25 மில்லியன் ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட நான்கு திறன் பலகைகளைக் கொண்ட வகுப்பறை - புதிய கட்டடத் தொகுதி மாணவர்களின் பாவ னைக்காக கையளிக்கப்பட் டது. (எ)

# சுதந்திர தினத்தை முன்னிட்டு வவுனியாவில் வாகன பேரணி

## வன்னி மக்கள் ஒன்றியம் அழைப்பு

வவுனியா, பெப்.02

77 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு வவுனியாவில் வாகனப் பேரணி நடத்த அனை வரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று வன்னி மக்கள் ஒன்றியத்தின் தலைவர் சிவ ஞானம் தெரிவித்துள்ளார்.

வவுனியா, கோவில்குளம் பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகச் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப் பிட்டார். அவர் மேலும் தெரி விக்கையில்,

"சுதந்திர தினத்தை முன்னிட்டு வவுனியாவில் வாழ் கின்ற தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் நல்லிணக்கத்தை ஏற் படுத்தும் முகமாக கடந்த ஆண்டைப் போன்று இம் முறையும் வவுனியாவில் வாக னப் பேரணி ஒன்றை நடத்த வுள்ளோம். இது அரசியல் கலப்படம் இல்லாமல் சமூகமாக இணைந்து இதனை




நடத்தி வருகின்றோம். இதற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு வாகனங்கள், ஒட்டோக்கள், லொறிகள் என்பன தேவையாக வுள்ளன.

ஓட்டோ சங்கம், பாரவூர்தி சங்கம், பஸ் சங்கம், வர்த்தக சங்கம், சிறு வியாபாரிகள் சங்கம், சர்வமத அமைப்பு என்பனவற்றின் ஒத்துழைப் புடன் இதனை நடத்தி வரு கின்றோம். இந்த வருடமும் இந் தப் பேரணியை வெற்றிகரமாக நடத்த அனைவரும் ஒத்துழைப் பையும் வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்"- என்றார். (எ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனவரி மாதத்தில் மட்டும் விபத்துகளால் 156 பேர் பலி!

கொழும்பு,பெப்.02

**ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் 29 ஆம் திகதி வரை நாடளாவிய ரீதியில் 149 வாகன விபத்துகள் பதிவாகியுள்ளதுடன், 156 பேர் உயிரிழந்ததாக கொழும்பு போக்குவரத்து பிரிவு பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மனோஞ் ரனகல தெரிவித்தார்.**

வாகன விபத்துகள் தொடர்பில் பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இலங்கை மருத்துவர் சங்கத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட விசேட ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கடந்த 2024ஆம் ஆண்டு வரை நாட்டில் 84 இலட்சம் 54, 513 வாகனங்கள், மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றில் அதிகளவானவை மோட்டார் சைக்கிள்களாகும்.

விபத்துகளால் 2022ஆம் ஆண்டு 2,540 மரணங்களும், 2023ஆம் ஆண்டு 2,241 உயிரிழப்புகளும், 2024ஆம் ஆண்டு 2,381 மரணங்களும் பதிவாகின.

அத்தோடு, கடந்த ஐந்து வருட காலப்பகுதியில் பாரதூரமான சேதங்களை ஏற்படுத்திய 33, 259 விபத்துகள் பதிவாகியுள்ளன.

இந்த விபத்துகள் யாவும் விபத்துக்குள்ளானவர் உடல் அவயங்களை இழந்ததும் மற்றும் எழுந்து நடமாட முடியாத நிலைக்கு தள்ளப்பட்டதுமான விபத்துகளாகும்.

இதேவேளை, 2024ஆம் ஆண்டு 843 பாதசாரிகள், 738 மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்கள், 157 வாகனங்களில் பின்னால் அமர்ந்து பயணித்தோர், 167 சாரதிகள், 309 பயணிகள், 160 துவிச்சக்கர வண்டி செலுத்துநர்கள் மற்றும் ஏனையோர் 6 பேர் என விபத்துகளால் உயிரிழந்ததாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

விபத்துகளின் அதிகரிப்பைக் கருத்தில் கொண்டு அவற்றை குறைக்கும் நோக்குடன் பதில் பொலிஸ் மா அதிபரின் பணிப்புரையின் கீழ் சிறப்பு போக்குவரத்து கண்காணிப்பு செயல்திட்டங்கள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

2025 ஜனவரி மாதம் கடந்த 29ஆம் திகதி வரை நாடளாவிய ரீதியில் 149 வாகன விபத்துகள் பதிவாகியுள்ளதுடன், 156 பேர் உயிரிழந்தனர்.

இதேவேளை, கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 49 விபத்துகளையும் 46 உயிரிழப்புகளையும் குறைத்துக் கொள்ள முடிந்துள்ளது- என்றார்.(எ)

# சட்டவிரோத தொழிலில் கட்டைக்காடு மீனவர்கள்

யாழ்ப்பாணம்,பெப்.02

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு மீனவர்களுக்கு சட்டவிரோத தொழிலில் ஈடுபட வேண்டாமென நீரியல் வளத்துறை திணைக்களத்தால் அறிவிக்கப்பட்ட போதும் அவர்கள் சட்டவிரோத தொழிலில் தொடர்ந்து ஈடுபடுவது தெரியவந்துள்ளது.

கடந்த நான்கு நாட்களாக சட்டவிரோத தொழிலாளர்கள் பல்லாயிரக்கணக்கான சிறிய மீன்களை பிடித்ததுடன், பாவனைக்கு உதவாதென கூறி பெரும் தொகையான சிறிய மீன்களை கடலில் வீசிவிட்டு வருவதாகவும் தெரியவருகிறது.

கடந்த வருடமும் வடமராட்சி கிழக்கில் சுருக்குவலை தொழில் தலைதூக்கிய போதும் சட்டவிரோத சுருக்குவலை தொழிலாளர்களை அரசாங்கம் கட்டுப்படுத்தவில்லை.

புதிய அரசாங்கத்தில் வடமராட்சி கிழக்கில் மீண்டும் சட்டவிரோத சுருக்குவலை தொழில் அதிகரித்துள்ளதால் மீன்பிடித்துறை அமைச்சர் விரைந்து செயல்பட்டு இவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டுமென அப்பகுதி மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-05)

# கொள்கலன் நெரிசலை தீர்க்க 4 நாள் விசேட வேலைத்திட்டம்

கொழும்பு, பெப்.02

கொள்கலன் நெரிசலை முடிவுக்குக் கொண்டுவருவதற்காக இலங்கை சுங்கம் 4 நாட்கள் விசேட வேலைத்திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளதாக இலங்கை சுங்க ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

இதேவேளை, கொள்கலன் நெரிசலை தீர்க்க, நாட்டின் 29 முன்னணி வர்த்தக சபைகள் குறுகிய கால மற்றும் நடுத்தர கால தீர்வுகள் உள்ளிட்ட முன்மொழிவை அரசாங்கத்திடம் சமர்ப்பித்துள்ளன.

கொழும்பு துறைமுகத்தில் உள்ள கொள்கலன் முனையங்களில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட கொள்கலன்களை அகற்றி விடுவிப்பதில் ஏற்பட்ட தாமதங்கள் காரணமாக பல வாரங்களாக ஏற்பட்டுள்ள கொள்கலன் வாகனங்களின் வரிசை நேற்று முன்தினம் பிற்பகலிலும் காணப்பட்டது.

இத்தகைய சூழலில், கொழும்பு துறைமுகத்தில் உள்ள கொள்கலன் நெரிசலை தீர்ப்பதற்காக 29 முன்னணி வர்த்தக சபைகள் கூட்டு அறிக்கை மூலம் அரசாங்கத்திடம் ஒரு முன்மொழிவை சமர்ப்பித்துள்ளன. இதன்படி, 4 நாட்கள் விசேட வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

(எ)

# நாட்டை பழைய பாதையில் அழைத்துச்செல்ல முடியாது

## அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.02

நாட்டில் உள்ள அனைத்து மக்களும் நிம்மதியாக வாழக்கூடிய சூழலை ஏற்படுத்தி கொடுப்பதே எமது இலக்காகும். அந்த இலக்கை நோக்கியே நாம் பயணித்துக் கொண்டிருக்கிறோம்.

மீண்டும் இந்த நாட்டை தோல்வியடைந்த பழைய பாதையில் அழைத்துச் செல்ல முடியாது என கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தலைமையில் யாழ். வல்வெட்டித்துறையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற மக்கள் சந்திப்பு கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"யுத்தம் நிறைவடைந்து 30 வருடங்கள் கடந்துள்ளன. எனினும், எமது மக்களின் பிரச்னைகள் இதுவரை தீர்க்கப்படவில்லை. இந்த மக்கள் பெரும் துன்பத்துக்கு மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இந்த நாட்டில் வறுமைக் கோட்டில் வாழும் மக்களை கொண்ட மாகாணமாக வட மாகாணம் உள்ளது. குறிப்பாக முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்து வருகின்றனர்.

அன்று எமது ஜனாதிபதிஅநுரகுமார திஸநாயக்க, இந்த மக்களை மீட்டெடுப்பதே தனது நோக்கம் எனக் குறிப்பிட்டிருந்தார்.

இந்த மக்களுக்கு வளமான வாழ்க்கையை உருவாக்கிக் கொடுப்பதே தனக்கும் மக்களுக்கும் இடையே உள்ள பிணைப்பு எனக் கூறியிருந்தார்.

வட பகுதியில் தற்போது போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ளது. வாள்வெட்டு சம்பவங்களும் அதிகரித்துள்ளன.

சுதந்திரமாக வாழமுடியாத சூழ்நிலை உள்ளதாக தேர்தலுக்கு முன்னதாக என்னை சந்தித்த மக்கள் கூறினர். இதற்கு நிரந்தரத் தீர்வை பெற்றுத் தருமாறு கோரினார்கள்.

நாட்டில் உள்ள அனைத்து மக்களும் நிம்மதியாக வாழக் கூடிய சூழலை ஏற்படுத்தி கொடுப்பதே எமது இலக்காகும். அதுவே எமது கனவாகும். அந்த இலக்கை நோக்கியே நாம் பயணித்துக் கொண்டிருக்கிறோம்.

இரண்டு பிரதான தேர்தல்களிலும் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்த மக்களுக்கு நாம் கடமைப்பட்டுள்ளோம்.

எமக்கு வாக்களிக்காத மக்களையும் இதில் இணைத்துக் கொண்டு ஒன்றாக பயணிக்க நாம் தயாராகவே உள்ளோம். மீண்டும் இந்த நாட்டை தோல்வியடைந்த பழைய பாதையில் அழைத்துச் செல்ல முடியாது" - என்றார்.

(எ)

# பேருந்தும் வானும் மோதி கோர விபத்து, இருவர் பலி

## 35 பேர் காயத்துடன் மருத்துவமனையில்

ஹபரணை, பெப்.02

பேருந்தும் வானும் நேருக்கு நேர் மோதி இடம்பெற்ற கோர விபத்தில் சிக்கி இருவர் பலியாகினர். இதேவேளை, காயமடைந்தவர்களின் எண்ணிக்கை 35 ஆக அதிகரித்துள்ளது.

திருகோணமலை - ஹபரணை வீதியில் கல்மலை பகுதியில் நேற்று மதியம் 12 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றது.

இந்த விபத்தில் வானின் சாரதி உள்ளிட்ட இருவர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# பாலியல் தொல்லை கொடுத்த பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி கைது!

பொலநறுவை, பெப்.02

பொலநறுவை, மெதிரிகிரிய பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி கைது செய்யப்பட்டுள்ளார்.

பெண் பொலிஸ் அதிகாரி ஒருவருக்கு பாலியல் தொல்லை கொடுத்த குற்றச்சாட்டின் பேரில் சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கைது செய்யப்பட்டுள்ளார்.

சிறுவர் மற்றும் மகளிர் பணியகத்துக்கு கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட விசாரணையைத் தொடர்ந்து சந்தேகத்துக்குரிய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கைது செய்யப்பட்டுள்ளார்.

(எ)

# மலிவு விலையில் அரிசி வழங்கும் திட்டத்தை அரசு வகுக்க வேண்டும்

## எதிர்க்கட்சி தலைவர் சஜித் வலியுறுத்தல்

காலி, பெப்.02

நாட்டில் நிலவும் அரிசி தட்டுப்பாட்டை நீக்குவதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். நுகர்வோருக்கு மலிவு விலையில் அரிசி வழங்கும் வேலைத்திட்டத்தை வகுக்க வேண்டும் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

காலியில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

"நாடு என்ற ரீதியில் பொருளாதார வீழ்ச்சியிலிருந்து மீள்வதற்கு நாட்டு மக்கள் ஒற்றுமை, நல்லிணக்கம், சகோதரத்துவம், நட்பை மனதில் கொண்டு ஒன்றுபட வேண்டும்.

நாட்டினது முன்னோக்கிய அபிவிருத்தியில் கிராமங்களின் பங்களிப்பு இன்றியமையாதது. இந்த நாட்டு மக்கள் வாழ்வதே சவாலாக உள்ள வேளையில் அவர்களது நலனுக்காக உழைப்பது அனைவரதும் கடமையாகும்.

தற்போது நாட்டு மக்கள் பல பிரச்னைகளுக்கு முகம் கொடுத்து வரும் வேளையில் அவர்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு ஆட்சியாளர்களிடம் உள்ளது.

தற்போது ஏற்பட்டுள்ள அரிசி தட்டுப்பாட்டினால் மக்கள் அசௌகரியமடைந்துள்ளனர். எனவே, அரிசி தட்டுப்பாட்டை நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். நுகர்வோருக்கு மலிவு விலையில் அரிசி வழங்கும் வேலைத்திட்டத்தை வகுக்க வேண்டும்.

நாட்டு மக்கள் அரிசியின்றி இருக்கும் தருணத்தில், தமது விளைபொருட்களுக்கு நிலையான விலை கிடைக்காததால் விவசாயிகள் மேலுமொரு வகையில் நிர்க்கதிக்கு ஆளாகியுள்ளனர்.

இது தொடர்பில் அரசாங்கம் இதுவரை எந்தவொரு ஏற்பாடுகளையும் செய்யவில்லை. வாய் பேச்சோடு நிற்கின்றனர். நடவடிக்கைகள் ஏதும் இல்லை. ஒரு பக்கம் விவசாயிகளை பாதுகாத்து கொண்டு மறுபக்கம் நுகர்வோரையும் பாதுகாக்கும் வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப்பட வேண்டிய தேவை வெகுவாக எழுந்துள்ளது"- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எடை குறைந்த குழந்தை பிறப்பு வீதம் அதிகரிப்பு

## ஒரு வயதை அடைய முன்பே வருடாந்தம் 2, 500 குழந்தைகள் உயிரிழக்கும் அவலம்

கொழும்பு, பெப்.02

**இலங்கையில் எடை குறைந்த குழந்தைகளின் பிறப்பு வீதம் அதிகரித்துள்ளதுடன் வருடாந்தம் பிறந்து ஒரு வயதை அடைவதற்கு முன்னரே சுமார் 2, 500 குழந்தைகள் உயிரிழப்பதாக சமூக மருத்துவ நிபுணர்கள் சங்கத்தின் தலைவர், மருத்துவ நிபுணர் கபில ஜயரத்தன தெரிவித்தார்.**

இலங்கை மருத்துவ சங்கத்தில் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"வருடாந்தம் 3 இலட்சத்து 13 ஆயிரம் தாய்மார்கள் கர்ப்பம் தரிப்பதுடன், 2 இலட்சத்து 50 ஆயிரம் குழந்தைகள் பிறக்கின்றன. எனினும், அவ்வாறு பிறக்கும் அனைத்துக் குழந்தைகளும் நல்ல தேகாரோக்கியத்துடன் பிறப்பது இல்லை.

ஆண்டு தோறும் 5 வயதுக்கும் குறைந்த 3,300 குழந்தைகள் உயிரிழக்கின்றன. கடந்த வருடங்களுடன் ஒப்பிடும் போது பிறப்பு வீதம் குறைவடைந்து செல்வதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

நாட்டில் கர்ப்பம் தரிக்கும் தாய்மார்களில் சுமார் 26 ஆயிரம் பேருக்கு கர்ப்ப காலத்தின் ஆரம்ப பகுதியில் கரு கலைவதும் அவதானிக்கப்பட்டுள்ளது.

அதாவது கர்ப்பம் தரித்ததிலிருந்து 3 தொடக்கம் 4 மாதங்களுக்குள் பல்வேறு கா ணங்களால் தாய்மார்களுக்கு கரு கலைவதாக தெரியவந்துள்ளது.

பொருளாதார சுமை, கருத்தரித்தல் தொடர்பில் போதியளவான தெளிவின்மை, வாழ்க்கைச் சூழல் போன்றன இதற்கு காரணமாக உள்ளன.

மேலும், இந்த நாட்டின் சுகாதார சேவையின் தரம் வீழ்ச்சி கண்டிருப்பதும் இதில் தாக்கம் செலுத்தியுள்ளது. இலங்கையர்களின் சராசரி ஆயுட்காலம் அதிகரித்துள்ளது.

அதாவது ஆண்களின் வயதெல்லை 73 ஆகவும் பெண்களின் வயதெல்லை 80 ஆகவும் உயர்வடைந்துள்ளது. நோய் நிலைமைக்கு ஆளாகியதன் பின்னர் சிகிச்சைகளை பெறுவதை விட நோய்களில் இருந்து எம்மை பாதுகாத்துக் கொள்வது அவசியம்.

இலங்கையர் என்ற ரீதியில் நாம் பொறுப்புணர்வுடன் செயல்பட வேண்டும். நாட்டில் உள்ள 30 சதவீதமான சிறுவர்கள் அதிக உடல் பருமனால் பாதிப்புக்குள்ளாகியுள்ளதுடன், குறிப்பிட்ட ஒரு பகுதியினர் போஷாக்கு இன்மையால் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்"- என்றார். (எ)

# கடலில் மூழ்கிக் காணாமல்போன இளைஞனின் சடலம் நேற்று மீட்பு

திருகோணமலை, பெப்.02

திருகோணமலை கடற்கரையில் நீராடிக் கொண்டிருந்த போது நீரில் மூழ்கி காணாமல் போன இளைஞனின் சடலம் நேற்றுக் காலை மீட்கப்பட்டது.

திருகோணமலை நகர் கடற்பகுதியில் நான்கு நண்பர்கள் கடலில் குளித்துக்கொண்டிந்த போது கடல் அலையில் சிக்கி அள்ளுண்டு போயினர்.

இதில் மூவர் பாதுகாப்பாக மீட்கப்பட்டதுடன் காணாமல் போன இளைஞனை தேடும் பணி முன்னெடுக்கப்பட்டு வந்தது.

இந்த நிலையிலேயே குறித்த இளைஞனின் சடலம் கடலில் மிதந்த நிலையில் நேற்றுக் காலை மீட்கப்பட்டது.

மீட்கப்பட்டவர் திருகோணமலை - சீனக்குடா பகுதியைச் சேர்ந்த 20 வயது இளைஞன் ஆவார்.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை திருகோணமலை துறைமுக பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# நேற்று கோர விபத்தில் சிக்கியது ஜனாதிபதி பாதுகாப்பு டிபென்டர்

## நால்வர் படுகாயம், இருவர் நிலை கவலைக்கிடம்

கொழும்பு, பெப்.02

தலாவ பகுதியில் நேற்று அதிகாலை ஒரு மணியளவில் ஜனாதிபதி செயலகத்துக்கு சொந்தமான டிபென்டர் வாகனம் ஒன்று விபத்துக்குள்ளானதில் நான்கு பேர் படுகாயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.


ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் கலந்து கொண்டு விட்டு கொழும்புக்குத் திரும்பும் போது அவரின் பாதுகாப்புக்கு சென்ற வாகனமே விபத்தில் சிக்கியது.

விபத்தில் காயமடைந்தவர்கள் அவர்களுடன் வந்த மற்றொரு வாகனத்தில் தலாவ மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட பின்னர், மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர்.

காயமடைந்தவர்களில் இருவரின் நிலைமை மோசமாக உள்ளதால், அவர்கள் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளதாக அநுராதபுரம் மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

காயமடைந்தவர்களில் சாரதி ஜனாதிபதி செயலகத்தைச் சேர்ந்தவர் என்றும், மற்றவர்கள் பொலிஸில் பணிபுரியும் ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் அதிகாரிகள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விபத்து குறித்து தலாவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (எ)



# நாட்டின் வானிலையில் இன்று முதல் மாற்றம்

கொழும்பு, பெப்.02

நாட்டில் தற்போது நிலவும் மழையுடனான வானிலை இன்று முதல் மாறும் என எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இதேவேளை, ஊவா மாகாணத்திலும் மட்டக்களப்பு, அம்பாறை, மாத்தளை, நுவரெலியா மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் மிதமான மழை பெய்யக்கூடும்.

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும், காலி, மாத்தறை மற்றும் கண்டி மாவட்டங்களிலும் மாலை அல்லது இரவில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

மேற்கு, சப்ரகமுவ, மத்திய, வடமேற்கு மற்றும் தெற்கு மாகாணங்களில் சில இடங்களில் காலை வேளையில் பனி மூட்டமான நிலை காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் பலத்த காற்று வீசக்கூடும். மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றனர். (எ)

# குஷ் போதைப்பொருள் கடத்திய இருவர் கட்டுநாயக்காவில் கைது



கொழும்பு,பெப்.02

குஷ் போதைப்பொருளுடன் விமானம் மூலம் நாட்டுக்கு வந்த சந்தேக நபர் ஒருவரும் மற்றும் குறித்த கடத்தலுக்கு உதவிய மற்றும் துணை போன நபர் ஒருவரும் கட்டுநாயக்காவில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவின் விமான நிலையப் பிரிவினரால் நேற்று முன்தினம் இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தாய்லாந்தின் பாங்கொக்கில் இருந்து 2 கிலோ கிராம் குஷ் போதைப்பொருளுடன் விமானம் மூலம் இலங்கைக்கு வந்த சந்தேகநபரும் அவருக்கு உதவிய மற்றுமொரு சந்தேக நபருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 31 மற்றும் 36 வயதுடைய ஹங்வெல்ல மற்றும் உடுகம்பல பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாவர்.

இது தொடர்பில் விமான நிலைய போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# கப்பல்துறை தடாகத்தில் தவறி விழுந்தவர் மரணம்

கொழும்பு,பெப்.02

கொழும்பு துறைமுக வளாகத்தில் உள்ள கப்பல் துறையில் துணை ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிந்த ஒருவர் கப்பல் பழுதுபார்க்கும் பணிக்காகப் பயன்படுத்தப்படும் தடாகத்தில் விழுந்து உயிரிழந்தார்.

சுழியோடிகள் மூலம் அவர் வெளியே எடுக்கப்பட்டு கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று முன்தினம் காலை நிகழ்ந்தது.

உயிரிழந்தவர் பரகஹவிட்ட பகுதியைச் சேர்ந்த 37 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விசாரணையில், உயிரிழந்த நபர் கப்பல்துறையில் உள்ள ஒரு துணை ஒப்பந்ததாரர் நிறுவனத்தில் பணிபுரிந்தவர் என்பதும், காலை உணவுக்குப் பிறகு கைகளைக் கழுவுவதற்காக கப்பல் பழுதுபார்க்கும் பணிக்காகப் பயன்படுத்தப்படும் தடாகத்துக்குச் சென்று திரும்பி வரும் வழியில் தடாகத்தில் விழுந்து உயிரிழந்ததாக தெரியவந்துள்ளது. (எ)

# நாட்டை உலுக்கிய ஆசிரியை கொலை

## தாயும் சகோதரனும் கைது

கொழும்பு,பெப்.02

கொழும்பு, கம்புறுபிட்டிய பொலிஸ் பிரிவில் உள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் அதிகாலை பெண் ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் உயிரிழந்த பெண்ணின் தாயை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இதன்படி, இந்தக் கொலை தொடர்பாக இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ள நிலையல், அவரது மூத்த சகோதரர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.

குடும்பத் தகராறு காரணமாக ஏற்பட்ட வாக்குவாதத்தில் இந்தக் கொலை இடம்பெற்றிருக்லாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

நேற்று முன்தினம் அதிகாலை 03.30 மணியளவில் 33 வயது ஆசிரியை ஒருவர் கத்தி மற்றும் இரும்பு கம்பியால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டிருந்தார்.

இது குறித்து விசாரணை நடத்திய பொலிஸார், கொலை செய்யப்பட்ட பெண்ணின் தாயார் பொலிஸாருக்கு எழுதியதாக சந்தேகிக்கப்படும் இரத்தக்கறை படிந்த கடிதத்தைக் கண்டுபிடித்தனர்.

அதில் அவர் தனது மகளைக் கொலை செய்ததாக குறிப்பிடப்பட்டிருந்தது.

அந்தக் கடிதத்தில், மகள் தனக்கு தொந்தரவாக இருந்ததாகவும், அதிகப்படியான பேராசை காரணமாக 14 ஆண்டுகளாக சொத்துக்காக சண்டையிட்டு வந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

கொலை இடம்பெற்ற நாளில் தனது கழுத்தை நெரிக்க மகள் வந்ததால் தான் இந்த கொலையை செய்ததாக அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இருப்பினும், பொலிஸார் அந்த வீட்டுக்குச் சென்றபோது, 76 வயதான தாயாரும் அதிகப்படியான மருந்தை உட்கொண்டு நாற்காலியில் மயங்கிக் கிடந்தார்.

அவர் தற்கொலைக்கு முயன்றிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இதன் காரணமாக, அவர் கம்புறுபிட்டிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ள நிலையில் நேற்றுக்காலை கைது செய்யப்பட்டுள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
25.01.2025 ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம், தை 13

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## தோற்பதற்காக சண்டையிடுபவர்கள்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து முதலில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வெளியேறினார் - அதற்கு கொள்கை சார்ந்து ஒரு விளக்கமளித்தார். கூட்டமைப்பில் தொடர்ந்தவர்கள் வேறு விளக்கமளித்தனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தவறானது என்பதை மக்கள் மத்தியில் விதைப்பதே கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தில் பிரதான அரசியல் கோஷமாக இருந்தது. பின்னர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கூட்டமைப்பிலிருந்து வெளியேறினார். அவரும் சம்பந்தன் தலைமையிலான கூட்டமைப்பில் தொடர்ந்தும் பயணிக்க முடியாது என்பதற்கான அரசியல் காரணத்தை கூறினார்.

சம்பந்தனால் அரசியலுக்கு அறிமுகம் செய்யப்பட்ட ஓய்வுபெற்ற நீதிபதி சி.வி.விக்கினேஸ்வரன், சம்பந்தன் மற்றும் சுமந்திரனோடு ஏற்பட்ட முரண்பாடுகளை முன்வைத்து. தனி வழியில் சென்றார். இவ்வாறு ஒரு கட்சிக்குள் ஏற்பட்ட முரண்பாடுகளை தொடர்ந்து வெளியேறி தனிக் கட்சியை உருவாக்கியவர் பலர். இவ்வாறானவர்கள் அனைவரும் தங்களுக்குள் அவ்வப்போது தேர்தல் கூட்டுக்களில் சந்தித்துக் கொள்கின்றனர். ஒரு கட்சியின் தலைமை பிழையானது என்று கூறி வெளியேறி தனிக்கட்சியாக இயங்குபவர்கள் பின்னர் எந்தக் கட்சி தவறானது என்று கூறினார்களோ அதே கட்சியுடன் தேர்தல் கூட்டுக்களில் பங்குகொள்ள பின்நிற்பதில்லை.

தங்களுக்குள் சண்டையிட்டுக் கொள்ளும் இந்த அரசியல் போக்கில் இப்போது அதிகம் சிக்கியிருப்பது இலங்கை தமிழ் அரசுக் கட்சியாகும். கட்சியின் மூத்த உறுப்பினர் ஒருவர் காலமாகும் போது கூட, அவரது இறுதி நிகழ்வில் ஒற்றுமையுடன் பங்குகொள்ள முடியாத நிலையிலேயே அந்தக் கட்சி இருக்கின்றது.

தமிழ் அரசுக் கட்சியின் பெருந் தலைவர் என்று வர்ணிக்கப்பட்ட இரா.சம்பந்தன் காலமானபோது, தற்போது திருகோணமலை மாவட்டத்தின் நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கின்ற சண்முகம் குகதாசன் மேடையில் பேசுவதற்கு, சம்பந்தனது குடும்ப உறுப்பினர்கள் அனுமதிக்கவில்லை. அந்தளவுக்கு கட்சியின் உட்பூசல்கள் மேலோங்கியிருந்தன. சம்பந்தனுக்கு பின்னர், தமிழ் அரசுக் கட்சியின் மூத்த தலைவர் என்று சொல்லக் கூடிய தகுதியை கொண்டிருந்த ஒரே ஒருவரான மாவை சேனாதிராசாவும், இறுதிக் காலத்தில் கட்சிக்குள் பல நெருக்குவாரங்களை சந்தித்த ஒருவராகவே மறைந்திருக்கின்றார்.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவராக சிவஞானம் சிறீதரன் தெரிவானதைத் தொடர்ந்து ஏற்பட்ட உட்கட்சி மோதல் தற்போது தமிழ் அரசு கட்சியை தமிழ் மக்களுக்கான கட்சி என்பதிலிருந்து முற்றிலுமாக அந்நியப்படுத்திவிட்டது. தமிழ் அரசு கட்சியானது தற்போது. முற்றிலும் தன்முனைப்புக் கொண்ட ஒரு சில தனிநபர்களின் சண்டைக்கான கூடாரமாகிவிட்டது. உட்கட்சிச் சண்டைகளைத் தொடர்ந்து. பலர் கட்சியிலிருந்து வெளியேறியிருக்கின்றனர். கூட்டமைப்பிற்குள் ஆரம்பித்த உட்கட்சிச் சண்டைகள் தற்போது தமிழ்த் தேசியம் பேசும் அனைத்து கட்சிகளுக்குள்ளும் பரவி, ஒருவரை ஒருவர் எதிர்க்கும் அரசியலாகவே தமிழர் அரசியல் குறுக்கப்பட்டிருக்கின்றது. பிரதான விடயத்தை விட்டுவிட்டு, தங்களது தன்முனைப்பு வாதத்திற்கே அனைவரும் முன்னுரிமையளிக்கின்றனர்.

ஆனால் இந்த சண்டைகளை உற்று நோக்கினால் ஒரு விடயம் தெளிவாகும் - அதாவது, தமிழ்த் தேசிய அரசியலை பிரதிநித்துவம் செய்யப் போவதாக தங்களை முன்னிறுத்திவரும் அனைவரும் தென்னிலங்கையிடம் தோற்பதற்காக தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டிருப்பவர்கள்தான். எழுபத்தைந்து வருட கால அரசியல் தோல்வியிலிருந்து எதனையுமே கற்றுக்கொள்ளாத இவர்கள், தொடர்ந்தும் தோற்றுக் கொண்டிருப்பதற்காக தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டிருக்கின்றனர்.

## மாவையின் புகழுடலுக்கு டக்ளஸ் அஞ்சலி



யாழ்ப்பாணம், பெப். 02

மறைந்த தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் மாவை சேனாதிராசாவின் புகழுடலுக்கு ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா மலர்வளையம் சாத்தி தனது இறுதி அஞ்சலி மரியாதையை செலுத்தியுள்ளார்.

உடல்நிலை பாதிப்பால் கடந்த 29 ஆம் திகதி யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சைப் பெற்று வந்த மாவை சேனாதிராசா சிகிச்சை பலனின்றி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் தனது 82 ஆவது வயதில் உயிரிழந்திருந்தார்.

மறைந்த மாவை சேனாதிராசாவின் புகழுடல் யாழ்.மாவிட்டபுரத்தில் உள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப் பட்டுள்ளது.

நேற்று அன்னாரது இல்லத்துக்கு சென்றிருந்த செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா அவரது புகழுடலுக்கு இறுதி அஞ்சலி மரியாதை செலுத்தியதுடன் அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் தனது ஆறுதலையும் அனுதாபத்தையும் பகிர்ந்தார்.

(அ-05)

## மலையக மக்கள் முன்னணியினர் மாவை சேனாதிராசாவுக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், பெப். 02

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மூத்த தலைவர் மாவை சேனாதிராசாவுக்கு மலையக மக்கள் முன்னணியினர் அஞ்சலி செலுத்தியுள்ளனர். மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான வே.இராதாகிருஷ்ணனின் பணிப்பின் பேரில், அதன் பொதுச் செயலாளர் புஸ்பா விஸ்வநாதன் நேற்று மாலை யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து மாவையின் புகழுடலுக்கு அஞ்சலி செலுத்தினார்.

(அ)

## யோஷித ராஜபக்ஷ வைத்திருந்த ஏழு துப்பாக்கிகளும் ஒப்படைப்பு

கொழும்பு, பெப். 02

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகன் யோஷித ராஜபக்ஷவிடம் இருந்த 7 துப்பாக்கிகளும் பாதுகாப்பு அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

அவரிடம் இருந்த 7 துப்பாக்கிகளில் 5 துப்பாக்கிகள், ஆரம்ப கட்டத்தில் ஒப்படைக்கப்பட்டன.

இந்த நிலையில், அவரிடம் இருந்த எஞ்சிய இரண்டு துப்பாக்கிகளும் தற்போது ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு உறுதிப்படுத்தியுள்ளது.

பாதுகாப்புக்காக அனுமதிப் பத்திரத்துடன் வழங்கப்பட்ட துப்பாக்கிகளை மறுபரிசீலனை செய்து மீண்டும் வழங்கப்படுதலின் கீழ் துப்பாக்கிகளை ஒப்படைக்குமாறு பாதுகாப்பு அமைச்சு அண்மையில் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## பங்களாதேஷ் கடற்படை கப்பல் கொழும்பு வந்தது

கொழும்பு, பெப். 02

பங்களாதேஷ் கடற்படைக்கு சொந்தமான 'பி என்எஸ் சமுத்திர ஜெய்' என்ற போர்க்கப்பல் உத்தியோகபூர்வ விஜயமாக நேற்றுமுன்தினம் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தது. குறித்த கப்பலை இலங்கை கடற் படையினர் கடற்படை மரபுகளுக்கமைய வரவேற்றனர்.


115.2 மீற்றர் நீளம் கொண்ட 'பி என்எஸ் சமுத்திர ஜெய்' போர்க் கப்பலில் மொத்தம் 274 உறுப்பினர்கள் பணியாற்றுகின்றனர். கப்பலின் கட்டளை அதிகாரியாக கப்டன் ஷஹ்ரியார் ஆலம் கடமையாற்றுகிறார்.

இந்த போர்க்கப்பல் நாட்டில் தங்கியிருக்கும் காலத்தில், இரு நாட்டு கடற் படைகளுக்கு இடையேயான நட்புறவை மேம் படுத்தும் வகையில் இலங்கை கடற்படை ஏற்பாடு செய்துள்ள நிகழ்ச்சிகளில் பணியாளர்கள் பங்கேற்கவுள்ளனர்.

அத்துடன், கப்பலின் செயற்பாடுகள் குறித்து இலங்கை கடற்படையினருக்கு தெளிவுபடுத்தும் நிகழ்ச்சியும் கப்பலுக்குள் நடைபெற்றது.

'பி என்எஸ் சமுத்திர ஜெய்' போர்க்கப்பல் உத்தியோகபூர்வ விஜயத்தை முடித்துக் கொண்டு இன்று நாட்டில் இருந்து புறப்படவுள்ளது. (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒப்பிடுதல் - ஒரு சரியான முறையா?

- பெ. சுப்ரமணியன்

“அஞ்சு விரலும் ஒரே மாதிரியாகவா இருக்கு” என்பது நம் சொல்வழக்கில் உள்ளது. இது எம்மாதிரியான சூழ்நிலையில் கூறப்படுகிறது என்று சிந்தித்துப் பார்த்தால் ஒருவரை மற்றொருவருடன் ஒப்பிட்டுப் பேசும்போது கூறக் கேட்கிறோம். ஒத்த வயதுடைய, ஒரே பாலினத்தைச் சேர்ந்த மற்றும் ஒரே குடும்பத்தைச் சார்ந்த இருவர் அல்லது அதற்கும் மேற்பட்டோரின் அறிவுத்திறன், செயல்பாடுகள் பற்றி பேசும்போதும் இதனைக் கூறுவர்.

பாலினம், வயது, கல்வித்தகுதி, பொருளாதாரம் மற்றும் குடும்பச் சூழ்நிலை என பல அம்சங்கள் ஒத்திருந்தாலும், தமது திறமைகளை ஒருவர் வெளிப்படுத்தும்போது ஒருவருக்கொருவர் வேறுபாடு இருக்கவே செய்யும். அனைவருக்குமான திறமைகள் ஒரே மாதிரியாக இருப்பதில்லை என்பது தான் உண்மை.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவரிடையே கூட, பெரும்பாலான செயல்பாடுகளில் வேறுபாடுகள் இருக்கின்றன. இதற்கு இரட்டைப் பிறவிக் குழந்தைகளும் விதிவிலக்கல்ல. ஆனால், நம்மில் பெரும்பாலானோர் ஏதேனும் ஒரு சூழலில் தம் வீட்டாரையோ அல்லது பிறரையோ மற்றொருவருடன் ஒப்பிட்டுப் பேசுகிறோம்.

இந்த ஒப்பீடு எங்கிருந்து, எதனால் தொடங்குகிறது? ஒரு குழந்தை முதன்முதலாகப் பள்ளிக்குச் செல்லும்போது அக்குழந்தையைக் காட்டிலும் குழந்தையின் பெற்றோர்தான் பரபரப்பாகவும், பதற்றமாகவும் இருப்பர். பள்ளிக்குச் செல்வதற்கு முன்பு வரை, சுதந்திரமாக விளையாடிக் கொண்டிருந்த குழந்தைக்கு முதன்முதலாகப் பள்ளிக்குச் செல்லும் வேளையில் இனம்புரியாத ஒரு பயம் அக்குழந்தைக்கு உண்டாகக் கூடும்.

புதிய இடத்தில் பெற்றோர் துணையில்லாமல் முற்றிலும் வேறுபட்ட முகங்களைப் பார்க்கும்போது, குழந்தைகளுக்குப் பயம் உண்டாகவே செய்யும். அதனால் வீட்டிலிருந்து பள்ளிக்குச் செல்லவும், வகுப்பறைக்குள் செல்லவும் மறுத்து குழந்தை அழக்கூடும். இதனிடையே, சில குழந்தைகள் அழாமல், ஆர்வத்துடன் பள்ளிக்குச் செல்வதையும்,



அமைதியாக வகுப்பறைக்குள் அமர்ந்திருப்பதையும் காணும் பெரும்பாலான பெற்றோர், அமைதியான அக்குழந்தையைக் காட்டி ‘அவனெல்லாம் எப்படி அமைதியாக உட்கார்ந்திருக்கிறான் அல்லவா?’ என்று கூறுவதைக் காணலாம். இங்குதான் மற்ற குழந்தைகளுடனான ஒப்பிடுதல் முதன்முதலில் தொடங்குகிறது.

பாலின பேதமின்றி நடக்கும் இந்த ஒப்பீடானது, பள்ளி தொடங்கும் நாளுடன் முடிந்துவிடுவதில்லை. வகுப்பறையில் ஒரு குழந்தையின் செயல்பாடு, கற்றல் திறன், பரீட்சையில் பெறும் மதிப்பெண் உள்ளிட்ட அனைத்து செயல்பாடுகளிலும் மற்ற குழந்தைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கப்படுகிறது. அப்போது தம் பிள்ளையைக் காட்டிலும் கூடுதல் மதிப்பெண் பெற்ற மற்ற குழந்தைகளையே பெற்றோர் எடுத்துக்காட்டாகக் கூறுகின்றனர்.

அவ்வப்போது பள்ளிகளில் நடைபெறும் கூட்டத்தில் பங்கேற்கும் பெற்றோர் வகுப்பு ஆசிரியருடனோ அல்லது ஆசிரியையுடனோ பேசும்போது, தம் குழந்தை பெற்ற மதிப்பெண் உள்ளிட்ட இதர செயல்பாடுகளை அறிந்து கொள்ள வேண்டும். ஆனால் அதற்கு மாறாக, மற்ற குழந்தைகளைப் பற்றி அறிந்துகொள்வதிலேயே ஆர்வம் காட்டுபவர்களாக உள்ளனர்.

அவ்வாறு பிற குழந்தைகளுடன் தன் குழந்தையை ஒப்பிட்டுப் பேசும்போதெல்லாம் அவனால் முடியும்போது, உன்னால் ஏன் முடியவில்லை? என்ற கேள்வியை எழுப்புகின்றனர். இவ்வாறு ஒப்பிட்டுப் பேசுவதால் யாருடன் அவர் களை ஒப்பிட்டுப் பேசுகிறார்களோ, அவர்களைக் காணும் போது மனதில் கோப உணர்வும், வெறுப்புணர்வும் குழந்தைகளுக்குத் தோன்றவே செய்யும்.

பள்ளிக்கல்வியில் இருந்து கல்லூரிக்குச் செல்லும்போதும் இந்த ஒப்பீடு தொடர்கிறது. பருவ வயதை எட்டிய நிலையில் கல்லூரிக்குச் செல்லும் பிள்ளைகளைப் பெரும்பாலான பெற்றோர் கண்காணிப்பதில்லை என்பது தான் உண்மை. நன்மை எது, தீமை எது என அறிகின்ற வயதை அவர்கள் எட்டியதால், பொறுப்புணர்வு இருக்கும் என்ற நம்பிக்கையில் சேர்க்கைக்குப் பின்னர் பெற்றோர் கல்லூரிக்கு வருவதில்லை.

ஆனால் ஏதாவதொரு பிரச்னை காரணமாக பெற்றோர் கல்லூரிக்கு வரவேண்டிய தேவை ஏற்படும்போது, தம் மகன் அல்லது மகளை தனது கிராமத்தைச் சேர்ந்த அல்லது நண்பரின் பிள்ளையுடன் ஒப்பிட்டுப் பேசவே செய்கின்றனர்.

பள்ளி, கல்லூரிகளில் மட்டுமின்றி, அரசு, தனியார் அலுவலகங்களிலும் இந்த ஒப்பீடு என்பது இருக்கவே செய்கிறது. அலுவலகத்தில் ஒரு பிரிவில் பணியாற்றிவரும் ஒருவர் வேறொரு பிரிவுக்குச் செல்லும் போது அப்பிரிவுக்கு புதிய பணியாளர் ஒருவர் வருகிறார். அவர் சிறப்பாக அல்லது தொய்வாக என எந்த நிலையில் பணிபுரிந்தாலும் முன்னவரோடு ஒப்பிடப்படுகிறார். ஒருவேளை அவரைப்போன்றே பணிபுரிந்தாலும் அவருடன் ஒப்பீடு செய்யப்படுகிறார்.

தோற்றத்தால், அறிவால், குணத்தால், மன அமைப்பால் ஒருவருக்கொருவர் வேறுபட்டிருப்பார்கள் என்பது உண்மை தான். தனிநபர் வேறுபாடுகளைக் கற்பது உளவியல் கல்வியின் அடிப்படை நோக்கங்களில் ஒன்றாகும். ஒருவரைப் போல மற்றொருவர் இருப்பதில்லை என்பது தான் உண்மை. ஆனால், ஒப்பிடுதல் என்பது ஒருவருடைய உள்ளிருக்கும் திறமைகளை வெளிக்கொணர்வதற்குப் பதிலாக, மனித உறவுகளில் பல சிக்கல்களுக்குக் காரணமாக அமைந்து விடுகிறது. ஒப்பிடுதலைத் தவிர்ப்போம். உள்ளுறைந்த திறமைகளை வெளிக்கொணர்ந்து அவற்றை வளர்க்க முயல்வோம்.

# இந்தவார ராசிபலன் 02.02.2025 - 08.02.2025

ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம் - தை 20
நல்ல நேரம்: 09.36 - 11.06 ராகு காலம் : 05.06 - 06.36 திதி : சதுர்த்தி

**மேஷம்** [ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

இந்த வாரம் வீட்டில் சுபமங்கள காரியங்கள் ஒத்தி வைக்கப்படலாம். சிலர், நோய் காரணமாக, வீட்டை விட்டு வெளியே வரமுடியாத நிலையில் இருப்பர். வரவேண்டிய புதிய தகவல்கள் தாமதமாக வரும். சிலருக்கு, பணமுடை காரணமாக, நாள் போவது யுகம் போவது போல் இருக்கும். வீட்டு வாடகை வசூல் தாமதமாகலாம். வீட்டுக்குத் தேவையான நவீன உபகரணங்களை வாங்க முடியாத நிலை உருவாகலாம். வரவுக்கு மிஞ்சிய செலவுகள் ஏற்படும். பயணங்கள் தடைப்படும்.

**ரிஷபம்** [ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இந்த வாரம் மனதிற்கினிய தகவல்கள் வந்து சேருவது தாமதப்படும். தனவரவு எதிர்பார்த்த அளவுக்கு இருக்காது. நண்பர்கள் மற்றும் உறவுகளின் வருகை முற்றிலுமாகக் குறையும். தொழிலில் எதிர்பார்த்தபடி இலாபங்கள் பெறுவதற்கான வாய்ப்புகள் குறையும். போட்டியாளர்களை காட்டிலும் அரிய சாதனைகள் புரிய முயல்வீர்கள். பயணங்கள் தவிர்க்கப்பட வேண்டியதாகும். சிலரின் உடல் நலிவுறும். இதைக்கூட கவனிக்காமல், ஏதோ நினைவில் இருப்பார்கள்.

**மிதுனம்** [ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இந்த வாரம் காய் கனிந்து பழமாவது போன்ற இனிய பயணங்களை கனவில் மட்டுமே காண முடியும். உங்கள் திறமையின் காரணமாக பொருளாதார சிக்கல்கள் சீராக்கப்படும். குடும்பத்தில் இதுவரை இருந்து வந்த பிரச்சனைகள் நீங்கி ஒற்றுமையும், உயர்வும் ஏற்படுவது தாமதப்படும். முழு மனதுடன் உங்கள் வாடிக்கையாளர்கள் உங்களுக்கும், உங்கள் நிறுவனத்துக்கும் சிறப்பான ஆதரவு நல்குவார்கள். தெய்வப் பிரார்த்தனைகள் நிறைவேற்ற முடியாத நிலை ஏற்படும்.

**கடகம்** [ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் சினிமா, டிராமா, மால் என இளைஞர்களின் கனவு மையங்களில் பொழுது இனிமையாக கழிக்கும் கனவு, கனவாகவே இருக்கும். பணிபுரியும் பெண்களுக்குத் திருமண காலம் கூடிவந்தாலும், திருமணம் தாமதமாகவே நடக்கும். வெளிநாடு செல்லும் வாய்ப்புகள் தாமதப்படும். விற்பனைப் பிரதிநிதிகள் வெளியில் சென்று தங்கள் பணிகளை செய்ய இயலாது. பயணங்களைத் தள்ளிப் போடுவது நல்லது. பயணத்தின் போது எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது.

**சிம்மம்** [ மகம், பூரம், உத்திரம் 1 ]

இந்த வாரம் நேர்மையும் கடின உழைப்பும் மட்டும் வாழ்க்கையில் நல்ல முன்னேற்றத்தை அளிக்கும். வீட்டில் சுவையான நல்ல உணவு கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத தனவரவு கிட்டும். எதிர்பார்த்த, கௌரவப் பட்டங்கள், பதவிகள் தாமதமாகும். உயர் அதிகாரிகளின் கெடுபிடியால் அதிக தொல்லைகள் ஏற்படலாம். புதிய நண்பர்களால் தொல்லைகள் எழும். சிலருக்கு இடமாற்றங்கள். வாழ்க்கையில் கௌரவத்தை தாமதமாகவே அடைவீர்கள்.

**கன்னி** [ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வாரம் விருந்து, மகிழ்ச்சி கொண்டாட்டம், ஆரவாரம், என வீட்டில் மகிழ்ச்சி பொங்கும் எனக் கனவு கூடக் கண்டு விடாதீர்கள். தாமதமானாலும், சுபச் செய்திகள் எதிர்பார்க்கலாம். இந்த நாட்களில் உங்கள் திறமை மிக்க செயல்பாடுகளால் அனைவரின் பாராட்டையும் பெறுவீர்கள். நீங்கள் எதிர்பார்த்த இடங்களில் இருந்து பணவரவு தாமதமாகும். அரசாங்கத்திடம் இருந்து அனுகூலமான செய்திகள் மற்றும் தகவல்கள் வந்து சேர தாமதமாகும். நல்ல குரு வாய்க்கப்பெற்று ஆன்மிக வழியில் அறிவுத் தெளிவு ஏற்படும். புதிய திட்டங்களில் எதிர்பாராத தடைகள் ஏற்படலாம்.

**துலாம்** [ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

இந்த வாரம் நம்பிக்கைகளும், விருப்பங்களும் மனம்போல் நிறைவேறும். நலம் விரும்பிகள் மற்றும் நண்பர்கள் ஆலோசனைகள் ஆதாயம் தரும். வழக்கு விவகாரங்கள் தள்ளிப் போகும். அனைத்திலும் வெற்றி எதிர்பார்க்க முடியாது. சிலருக்கு, வெற்றி தாமதமாகவே சித்திக்கும். சுபகாரிய நிகழ்ச்சிகள் தாமதப்படும். பயணங்கள் மேற்கொள்ள முடியாத நிலைகள் ஏற்படலாம். அரசுப் பணியாளர்களுக்கு பதவிகள் தேடி வந்தாலும், வேலைப்பளு கூடும்.

**விருச்சிகம்** [ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் பயணங்களில் தடை தாமதங்கள் ஏற்படும். செய்ய வேண்டும் என்று எண்ணிய காரியங்கள், செய்ய முடியாத நிலை ஏற்படும். மருத்துவப் பொருட்கள் வியாபாரம் மூலம் ஆதாயங்கள் ஏற்படும். விருந்துகளில் கலந்து கொள்ள நினைத்தாலும் முடியாத நிலை உருவாகும். வீட்டில் இருந்து, உண்டு, உறங்கி பொழுதை கழிப்பீர்கள். ஐ. டி பணியாளர்கள் சிறப்பான பலன்களை எதிர்பார்க்கலாம். அனுகூலங்கள் அனைத்தும் தாமதமின்றி கிடைக்கும்.

**தனுசு** [ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

இந்த வாரம் பெண்களால் இலாபம் இருந்தாலும், வீட்டில் சுப நிகழ்ச்சகள் நடத்த முடியாத சூழ்நிலை எழும். பொருளாதார நிலை எப்போதும் போல் நிலையாக இராது. ஏற்ற இறக்கமாக இருக்கும். அதன் காரணமாக சேமிப்புகளில் இருக்கும் பணத்தில் கை வைக்கவேண்டிய நிலை ஏற்படும். பழைய பொருட்களை விற்பனை செய்யும் வியாபாரிகள் நல்ல வருமானத்தை அடைவார்கள். புதிய தொழில் தொடங்க எடுக்கப்படும் முயற்சிகள் ஒத்திப் போடுவது நல்லது.

**மகரம்** [ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இந்த வாரம் வீட்டில் இருப்பதால், குடும்ப சந்தோஷம் குறைவில்லாது நிறைந்திருக்கும். தம்பதிகளிடையே அன்யோன்யம் அதிகரிக்கும். பெரியவர்கள் ஆசியால் நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி அடையும். அண்டை வீட்டார், நண்பர்கள் மற்றும் சகோதரரால் உங்கள் பிரச்சனைகளுக்கு ஒரு முடிவு வரும். பிள்ளைகள் தங்கள் இஷ்டத்துக்கு நடப்பர். சொன்ன பேச்சு கேட்க மாட்டார்கள். புதிய தொழில் வாய்ப்புகளை தள்ளிப் போடுவது நல்லது.

**கும்பம்** [ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

இந்த வாரம் திருமணமாகாத பெண்களுக்கு திருமண முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும், திருமணம் தள்ளிப் போகும். அவசியமற்ற, அலைச்சல்கள் அல்லல் தரும். அரசு ஊழியர்களுக்குக் கட்டளைகளை ஏற்று நடக்கும்படியான சூழல் உருவாகும். வேலை அதிகரிக்கும். அதிகாரம் மிக்க உயர் பதவிகளில் உள்ளவர்கள் வீட்டுக்கு கூட போக முடியாத நிலை உருவாகும். பிள்ளைகளிடம் நல்ல உயர்வான முன்னேற்றங்களை எதிர்பார்க்க முடியாது.

**மீனம்** [ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

இந்த வாரம் உங்கள் தொழில் விஷயமாக தீட்டிய முக்கியத் திட்டங்கள் அரசுத் தொல்லைகளால், தள்ளிப்போகும். புதிய நடவடிக்கைகளை ஒத்திப் போடுவது நல்லது. வியாபாரிகளுக்கு வங்கிக் கடன்கள் தாமதமாகவே கிடைக்கும். குழந்தைகளின் ஆரோக்கியத்தில் மிகுந்த கவனம் தேவை. வியாபாரிகள் தங்கள் வாக்கால் வாடிக்கையாளர்களை கவர்ந்து இலாபத்தைப் பெருக்குவர். பெண்களின் அறிவுத்திறன் கூடும். அவர்களுக்குக் கணவன்மார்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். பண விஷயங்களில் மிகவும் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அரசியல் வரலாற்றில் மகிந்த ராஜபக்ஷவின் இடம்



வீரகத்தி தனபாலசிங்கம்

இலங்கையின் காலஞ்சென்ற முன்னாள் பிரதமர்கள் அல்லது ஜனாதிபதிகளில் எவரினதும் உடல் பேணிப் பாதுகாக்கப்பட்டு நினைவாலயத்தில் வைக்கப்படவில்லை. அவர்கள் இறந்த போது உடல்கள் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற வேண்டுகோள் விடுக்கப்பட்டதாகவும் நாம் அறியவில்லை.

ஆனால், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச மறைந்த பிறகு அவரது உடலை பேணிப்பாதுகாத்து மக்களின் பார்வைக்கு வைக்கவேண்டும் என்று ஒரு வேண்டுகோளை முன்னாள் பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ச கடந்தவாரம் விடுத்திருக்கிறார்.

மூன்று தசாப்தகால உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டு வந்த மகிந்தவின் மரபை எதிர்காலச் சந்ததிகள் கௌரவிப்பதற்காக அவரது உடலைப் பேணிப்பாதுகாக்க வேண்டும் என்றும் அத்தகைய ஒரு மதிப்புமிகு அங்கீகாரத்துக்கு அவர் உரித்துடையவர் என்றும் செய்தியாளர்கள் மகாநாட்டில் அஜித் ராஜபக்ச கூறினார்.

"முன்னாள் சோவியத் தலைவர் விளாடிமிர் லெனின் மற்றும் வியட்நாமின் புரட்சிகர தலைவர் ஹோ சி மின் ஆகியோர் அவர்களின் நாடுகளின் வரலாற்று நாயகர்கள் என்பதால் உடல்கள் பேணிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அந்த நாடுகள் அவற்றின் தலைவர்களுக்கு உரிய மரியாதையைக் கொடுத்திருக்கின்றன. அதேபோன்ற மரியாதையை இலங்கையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு கொடுக்க வேண்டும். ஒரு மகத்தான தலைவர் என்ற வகையில் அவரின் முதன்மை நிலையை மலினப்படுத்தும் முயற்சிகளில் தற்போதைய அரசாங்கம் ஈடுபடுகின்றது. முன்னாள் ஜனாதிபதி தேசத்துக்கு வழங்கிய பங்களிப்புக்காக அவருக்குரிய பாதுகாப்பையும் மதிப்பையும் அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும்" என்று அவர் கூறினார்.

வெளியான செய்திகளின்படி முன்னாள் பிரதி சபாநாயகர் லெனினையும் ஹோ சி மினையும் மாத்திரமே உதாரணமாக குறிப்பிட்டிருக்கிறார். ஆனால், வேறு சில நாடுகளின் தலைவர்களின் உடல்களும் அவர்களின் மரணத்துக்கு பிறகு நினைவாலயங்களில் பேணிப்பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

1924 ஆம் ஆண்டு மரணமடைந்த லெனினின் உடல் பேணிப்பாதுகாக்கப்பட்டு மாஸ்கோவில் உள்ள செஞ்சதுக்கத்தில் நினைவாலயத்தில் 1930 ஆம் ஆண்டில் இருந்து தொடர்ச்சியாக மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கிறது. ரஷ்யர்கள் மகத்தான தேசபக்தப் போர் என்று வர்ணித்த இரண்டாவது உலகப்போரின்போது மாஸ்கோவை ஜேர்மன் படைகள் கைப்பற்றக்கூடும் என்று தோன்றியபோது 1941 ஆம் ஆண்டில் லெனினின் உடல் நினைவாலயத்தில் இருந்து அகற்றப்பட்டு பாதுகாப்புக்காக சைபீரியாவுக்கு கொண்டு செல்லப்பட்டது. போரின் முடிவுக்கு பிறகு அவரது உடல் மீண்டும் மாஸ்கோவுக்கு கொண்டு வரப்பட்டது.

சோவியத் யூனியனின் இரண்டாவது தலைவர் ஜோசப் ஸ்டாலின் 1953 ஆம் ஆண்டில் மரணமடைந்த பிறகு பதப்படுத்தப்பட்ட அவரது உடலும் மாஸ்கோ நினைவாலயத்தில் லெனினின் உடலுக்கு அருகாக வைக்கப்பட்டது. அவரின் மறைவுக்கு பிறகு பதவிக்கு வந்த நிகிட்டா குருஷேவ் ஸ்டாலினின் கொள்கைகளை நிராகரித்து முன்னெடுத்த இயக்கத்தின்போது 1961 ஆம் ஆண்டில் அவரின் உடல் நினைவாலயத்தில் இருந்து அகற்றப்பட்டு செஞ்சதுக்கத்தில் கிரெம்ளினுக்கு அருகாக இருந்த



மயானத்தில் புதைக்கப்பட்டது.

1976 செப்டெம்பரில் மரணமடைந்த சீனத்தலைவர் மாவோ சேதுங்கின் உடல் பெய்ஜிங்கின் தியனென்மென் சதுக்கத்தின் மத்தியில் அமைந்திருக்கும் நினைவு மண்டபத்தில் மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கிறது. தனது உடலை தகனம் செய்யவேண்டும் என்று மாவோ விரும்பிய போதிலும், அவரது விருப்பம் அலட்சியம் செய்யப்பட்டதாக கூறப்படுகிறது.

சோவியத் யூனியனில் ஸ்டாலினின் சடலத்தை நினைவாலயத்தில் இருந்து அகற்றி புதைத்ததன் மூலமாக அவரையும் கொள்கைகளையும் குருஷேவ் ஆட்சி நிராகரித்ததைப் போன்று தனக்கும் நேர்ந்துவிடக்கூடாது என்பதற்காக மாவோ தனது உடலை தகனம் செய்ய வேண்டும் என்று கேட்டிருக்கக்கூடும். ஆனால், இன்றைய சீனாவில் மாவோவின் கொள்கைகள் பின்பற்றப்படுவதில்லை என்றாலும், அவரது உடல் தொடர்ந்தும் நினைவாலயத்தில் வைக்கப்பட்டிருக்கிறது.

1969 ஆம் ஆண்டில் மரணமடைந்த வியட்நாமின் புரட்சிகர தலைவர் ஹோ சி மின்னின் உடல் 1975 ஆம் ஆண்டு முதல் தலைநகர் ஹனோயில் உள்ள நினைவாலயத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. அதேபோன்றே 1994 ஆம் ஆண்டில் காலமான வடகொரியாவின் தாபகத் தலைவர் கிம் இல் சுங்கின் உடலும் அவருக்கு பிறகு அதிகாரத்துக்கு வந்த அவரது மகன் கிம் ஜொங் இல்லின் உடலும் தலைநகர் யொங்யாங்கில் நினைவாலயத்தில் வைக்கப்பட்டிருக்கிறது.

இந்த தலைவர்களின் கொள்கைகள் மற்றும் ஆட்சிமுறை பற்றி பல்வேறு விமர்சனங்கள் இருக்கின்ற போதிலும், அவர்கள் சகலருமே கம்யூனிஸ்டுகள். பெரும் தியாகங்களுக்கு மத்தியில் தங்களது நாடுகளில் வெற்றிகரமான கம்யூனிஸ்ட் புரட்சிகளுக்கு தலைமை தாங்கி வழிநடத்தியவர்கள். அவர்களை உதாரணம் காட்டி இலங்கையில் மகிந்த ராஜபக்சவுக்கும் அத்தகைய கௌரவம் அளிக்கப்படவேண்டும் என்பது முன்னாள் பிரதி சபாநாயகரின் பெரு விருப்பமாக இருக்கிறது. முன்னாள் ஜனாதிபதி மீதான விசுவாச மிகுதியில் அந்த தலைவர்களின் "விக்கிரக" வரிசையில் தனது தலைவரையும் வைத்துப் பார்க்க அவர் விரும்புகிறார் போலும்.

முன்னாள் ஜனாதிபதிகள் அனுபவிக்கும் சிறப்புச் சலுகைகளையும் வசதிகளையும் குறைப்பதற்கு தேசிய மக்கள் சக்தி எடுக்கும் நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக மகிந்த ராஜபக்சவின் தற்போதைய கொழும்பு வாசஸ்தலம் மற்றும் பாதுகாப்பு குறைப்பு தொடர்பில் மூண்டிருக்கும் சர்ச்சையே அஜித் ராஜபக்சவின் வேண்டுகோளுக்கான உடனடிக்காரணம் என்று தெரிகிறது.

மகிந்த ராஜபக்சவுக்கு விசுவாசமான அரசியல்வாதிகளைப் பொறுத்தவரை, உள்நாட்டுப்போரை முடிவுக்குக் கொண்டு வந்த ஒரே காரணத்துக்காகவே



அவரையும் அவரது ஆட்சியையும் புகழ்ந்து பேசக்கூடியதாக இருக்கிறது. அந்த போர் எவ்வாறு முடிவுக்கு கொண்டுவரப்பட்டது என்பதைப் பற்றி அவர்களுக்கு அக்கறை கிடையாது. மகிந்தவும் கூட தனது கட்சியின் அரசியல் மீட்சிக்கு போர்வெற்றி மீண்டும் கைகொடுக்கும் என்று நம்புகிறார். அவரது மூத்த மகன் நாமல் ராஜபக்சவும் கூட ஜனாதிபதி தேர்தலில் போருக்கு அரசியல் தலைமைத்துவம் வழக்கிய தந்தையாரின் சாதனையையே மக்கள் மத்தியில் கூறி வாக்குக் கேட்டார்.

போர்வெற்றியை பயன்படுத்தி பெரும்பான்மையினவாத அணிதிரட்டலைச் செய்து தங்களது அதிகாரத்தை பல வருடங்களாக வலுப்படுத்திய ராஜபக்ஷக்கள் மீண்டும் அதே தந்திரோபாயத்தின் மூலமாக அரசியலில் மீட்சிபெறலாம் என்று

**மகிந்தவின் விசுவாசிகள் போர் வெற்றிக்காக அவர் வரலாற்றில் நினைவு கூரப்படவேண்டியவர் என்று கொண்டாடலாம். மீண்டும் இனவாதத்தை தூண்டுவதற்கு சந்தர்ப்பங்களுக்காக காத்திருக்கும் தேசியவாத சக்திகளின் நம்பிக்கைக்குரியவராக அவர் விளங்கக்கூடும். ஆனால் அவர் தவறான ஆட்சிமுறையின் ஒரு சின்னமாகவே நினைவு கூரப்படுவார் என்பதே உண்மை.**

இன்னமும் கூட நம்புகிறார்கள் போன்று தெரிகிறது. இனவாதத்தை தவிர அவர்களுக்கு வேறு மார்க்கம் இல்லை.

போர்வெற்றி காரணமாக குறப்பாக மகிந்த ராஜபக்சவும் பொதுவில் அவரது குடும்பத்தவர்களும் சிங்கள மக்கள் மத்தியில் அமோக ஆதரவைக் கொண்டிருந்தார்கள் என்பது உண்மையே. ஆனால், போர் வெற்றியை பயன்படுத்தி சிங்கள மக்களின் கவனத்தை திசை திருப்பி முன்னென்றும் இல்லாத வகையிலான ஊழல் ஆட்சியை நடத்திய அவர்கள் நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கு காரணமாக இருந்தார்கள் என்பதை மக்கள் புரிந்து கொண்டார்கள். ஆட்சிமுறையின் கெடுதியான போக்குகள் சகலவற்றையும் உருவகப்படுத்துபவர்களாக ராஜபக்சாக்கள் விளங்குகிறார்கள்.

இலங்கை அரசியல் கடந்த காலத்திலும் சில உயர்வர்க்க குடும்பங்களின் ஆதிக்கத்தில் இருந்திருக்கிறது. ஆனால், மகிந்த ராஜபக்ச அதிகாரத்துக்கு வந்த பிறகு அவரது குடும்பம் அரசியலிலும் ஆட்சிமுறையிலும் அருவருக்கத்தக்க முறையில் மட்டுமீறிய ஆதிக்கத்தைச் செலுத்தியதை போன்று அந்த குடும்பங்கள் செய்ததில்லை. ராஜபக்சாக்களுக்கு எதிராக மக்கள் வீதிகளில் இறங்கி கிளர்ச்சி செய்தது போன்று அந்த குடும்பங்களுக்கு எதிராக ஒரு போதும் கிளர்ச்சிகள் மூண்டதில்லை.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை அறிமுகப்படுத்தப்பட்ட பிறகு கடந்த நான்கு தசாப்தங்களுக்கும் அதிகமான காலமாக அரச நிருவாகத்தில் எதேச்சாதிகாரம் படிப்படியாக அதிகரித்துக்கொண்டே வந்திருக்கிறது. ஆனால் மகிந்த ராஜபக்ச ஆட்சிக்கு வந்த பின்னர் மாத்திரமே அந்த எதேச்சாதிகாரம் உச்சநிலைக்குப் போனது. மட்டுமீறிய அதிகாரங்களை தங்களிடம் குவித்து வைத்திருப்பது ஏதோ தங்களது பிறப்புரிமை என்ற நினைப்பில் அவர்கள் நடந்து கொண்டார்கள்.

தங்களுக்கு எதிரான எந்த நடவடிக்கையையும் ராஜபக்சாக்கள் உள்நாட்டு, வெளிநாட்டுச் சதி என்று கூறுவது வழக்கம். நாட்டு மக்கள் தங்களுக்கு கடைமைப்பட்டவர்கள் என்ற விசித்திரமான உணர்வை அவர்கள் வளர்த்துக் கொண்டார்கள். விடுதலை புலிகளை தோற்கடித்து போரை முடிவுக்கு கொண்டு வந்தமைக்காக சிங்கள மக்கள் என்றென்றைக்கும் தங்களை ஆதரிப்பார்கள் என்ற எண்ணமும் ராஜபக்சாக்களிடம் இருந்தது. தங்களது தவறுகளை சிங்கள மக்கள் பொருட்படுத்த மாட்டார்கள் என்ற நம்பிக்கையும் அவர்களிடம் இருந்தது.

எல்லாவற்றுக்கும் மேலாக, மூன்று வருடங்களுக்கு முன்னர் ஏற்பட்ட முன்னென்றும் இல்லாத படுமோசமான பொருளாதார நெருக்கடிக்கு மூன்று ராஜபக்ச சகோதரர்களும் அவர்களின் கீழ் பணியாற்றிய உயரதிகாரிகளுமே பொறுப்பு என்று உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பு முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியதாகும்.

முன்னாள் பிரதி சபாநாயகரைப் போன்ற அரசியல்வாதிகள் மீண்டும் அரசியலில் தலையெடுக்க வேண்டுமானால், மக்கள் மத்தியில் ராஜபக்சாக்களின் செல்வாக்கு அதிகரிக்க வேண்டியது அவசியமாக இருக்கலாம். மகிந்த ராஜபக்சவைப் பொறுத்த வரையிலும் கூட தனது மூத்த மகனின் எதிர்கால அரசியல் வாய்ப்புக்களை தனது காலத்தில் உறுதி செய்யவேண்டிய அவசரம் இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. ஆனால், நாட்டு மக்களின் பிரச்சினை அதுவல்ல.

மகிந்த ராஜபக்ச உரிமை கோருகின்ற

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண ஆட்சிமுறையில் அதிகாரங்களை பகிரவேண்டும்



கலாநிதி ஜெகான் பெரேரா

நீண்டகாலமாக ஒத்திவைக்கப்பட்டிருக்கும் மாகாணசபை தேர்தல்கள் நடத்தப்படுவதை உறுதிசெய்வதற்கு சட்டத் திருத்தங்களை அரசாங்கம் தயார் செய்வதாக கூறப்படுகிறது. மாகாண சபை தேர்தல்களை நடத்துவது தொடர்பிலான சட்டத்தை திருத்துவதற்கு முன்னைய அரசாங்கம் ஒன்று தீர்மானித்ததை அடுத்து 2017 ஆம் ஆண்டில் இருந்து ஒன்பது மாகாணசபைகளுக்குமான தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அந்த அரசாங்கம் சட்டத்தில் திருத்தம் கொண்டவரும் செயன்முறையை ஒருபோதும் நிறைவு செய்யவில்லை. தேர்தல்களை நடத்தாமல் இருப்பதற்கு அவர்களுக்கு அதுவே ஒரு சாக்குப்போக்காக மாறியது.

அதற்கு பிறகு மாகாணசபை தேர்தல்கள் சடடத்தை திருத்தும் செயன் முறையை நிறைவுசெய்து தேர்தல்களை நடத்துவதில் எந்த அரசாங்கமும் போதிய அக்கறையைக் கொண்டிக்கவில்லை. அதன் விளைவாக மாகாண சபைகள் முறைமை இன்று மத்திய அரசாங்கத்தினால் நியமிக்கப்படும் ஆளுநர்களினால் நிருவகிக்கப்படுகிறது. இதன் மூலமாக தாங்கள் அரசியலமைப்பை மீறுவதை அவர்கள் ஏற்றுக் கொள்வதாக இல்லை.

2016 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் கீழ் மாகாணசபை தேர்தல்களை கலப்பு தேர்தல் முறையில் நடத்துவதற்கு பாராளுமன்றம் அங்கீகாரம் வங்கியிருந்ததாக பொதுநிருவாக, மாகாண சபைகள் அமைச்சர் (பேராசிரியர்) சந்தன அபேரத்ன கூறியதாக ஊடகங்களில் செய்தி வெளியாகியது. ஆனால், கலப்பு தேர்தல் முறையின் கீழ் மாகாணசபை தேர்தல்களை நடத்துவதற்கு எல்லைநிர்ணய ஆணைக்குழுவின் அறிக்கையின் அங்கீகாரம் தேவைப்படுகிறது. அந்த அறிக்கை பாராளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்டதை அடுத்து தேர்தல்கள் தடைப்பட்டுப் போயிருக்கின்றன.

அதனால் முன்னைய தேர்தல் முறையின் (விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறை) மாகாணசபை தேர்ல்களை நடத்த வேண்டும் கோரிக்கைகள் கிளம்பின. முன்னைய முறையின் கீழ் 1988 ஆம் ஆண்டின் மாகாண சபைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க தேர்தல்கள் நடத்தப்படும். இத்தகைய சூழ்நிலையில், தேர்தல்களை மேலும் தாமதிப்பதற்கு பதிலாக தற்போதைய சட்டத்தின் கீழ் தேர்தல்களை நடத்த முடியும்.

இது விடயம் தொடர்பிலான யோசனை விரைவில் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படும் என்று அமைச்சர் அபேரத்ன தெரிவித்தார். அமைச்சரவையின் அங்கீகாரத்தை தொடர்ந்து 2025 ஆகஸ்ட் மாதமளவில் மாகாண சபை தேர்தல்களை நடத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். தேசிய தேர்தல்களில் வெற்றி பெற்ற பிறகு உள்ளூராட்சி மற்றும் மாகாண மட்ட தேர்தல்களை நடத்துவதற்கு தயக்கம் காட்டிய முன்னைய அரசாங்கங்களின் பாதையை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பின்பற்றாது என்று நம்புவோமாக.

மக்களுக்கு தாங்கள் வழங்கிய பல வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறிய காரணத்தினால் உள்ளூராட்சி மட்டத்தில் மக்கள் ஆதரவை பரீட்சித்துப் பார்ப்பதற்கு முன்னைய அரசாங்கங்கள் அஞ்சின. பொருளாதார அபிவிருத்தி, வாழ்க்கைச் செலவுக் குறைப்பு, உடனடியாக உற்பத்தியை அதிகரித்தல் ஆகிய விடயங்களில் புதியதொரு பாதையை வகுப்பது தொடர்பில் வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்றுவதில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் கஷ்டத்தை எதிர்நோக்குகிறது.

ஆனால், தேர்தல் பிரசாங்களின் போது வழங்கிய முதன்மையான வாக்குறுதியை காப்பாற்றுவதில் உண்மையாக நடந்துகொள்வதே தற்போதைய அரசாங்கத்தின் பலமாகும். ஊழலுக்கும் வளங்கள் விரயத்துக்கும் விரைவான முடிவைக் கொண்டுவருவது என்ற




வாக்குறுதியை அரசாங்கம் நடைமுறைப்படுத்துவதாக பரவலாக தெரிகிறது. தேர்தல் முடிவுகளை அடிப்படையில் நோக்கும்போது 2022 ஆண்டில் நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கு முக்கிய காரணம் ஊழலும் விரயமுமே என்று சனத்தொகையில் அதிகப்பெரும்பான்மையானவர்கள் நம்புகிறார்கள் என்பது தெளிவானது.

அரசாங்கம் அதன் வாக்குறுதிகளில் ஒன்றை உடனடியாக நடைமுறைப்படுத்துவதற்கு எடுக்கும் முயற்சிகளின் விளைவாகவே முன்னாள் ஜனாதிபதிகளும் பிரதமர்களும் பெறுகின்ற சிறப்புரிமைகள் பயன்கள் தொடர்பில் தற்போது விவாதம் மூண்டிருக்கிறது. தேர்தலில் வெற்றிபெற்ற குறுகிய காலத்திற்குள் மக்கள் செல்வாக்கை இழந்த முன்னைய அரசாங்கங்களைப் போலன்றி தற்போதைய அரசாங்கம் அதன் பிரதான வாக்குறுதியை காப்பாற்றியதன் விளைவாக மக்கள் ஆதரவை தொடர்ந்தும் கொண்டிருக்கிறது.

இந்த வருடத்தின் முதல் அரைப்பகுதிக்குள் சாத்தியமானளவு விரைவாக உள்ளூாராட்சி தேர்தல்களை நடத்துவதாக உறுதியளித்திருக்கிறது. சாத்தியமானளவு விரைவாக உள்ளூராட்சி தேர்தல்களை நடத்த வேண்டும் என்ற உயர்நீதிமன்றத்தின் உத்தரவை மதித்து அரசாங்கம் நடவடிக்கைகளில் இறங்கியிருக்கிறது. மக்கள் மத்தியில் அவற்றுக்கு இருந்த ஆதரவை பரீட்சித்துப் பார்க்க முன்னைய அரசாங்கங்கள் விரும்பாத காரணத்தால் இரு வருடங்களுக்கும் அதிகமான காலமாக உள்ளூராட்சி தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றன.

2022 பொருளாதார வீழ்சசி ஏற்பட்ட காலகட்டத்திலயே உள்ளூராட்சி தேர்தல்களை நடத்த வேண்டிய நாட்கள் வந்ததால் ஒத்திவைப்பு ஒன்றும் ஆச்சரியத்தை தரவில்லை. படுமோசமான ஒரு தோல்வியை தழுவ வேண்டிவரும் என்று அரசாங்கம் அஞ்சியது. உட் பூசல்கள் காரணமாக வடக்கு, கிழக்கில் உள்ளவை உட்பட எதிரணிக் கட்சிகள் பலவீனமடைந்திருக்கும் நிலையில், தற் போதைய சந்தர்ப்பத்தில் உள்ளூராட்சி தேர்தல்களில் அரசாங்கம் பெருவெற்றி பெறக் கூடிய வாய்ப்பு தாராளமாக இருக்கிறது

உள்ளூராட்சி தேர்தல்களைத் தொடர்ந்து மாகாணசபை தேர்தல்கள் நடத்தப்படுமானால், அரசாங்கம் ஏற்கெனவே பெற்ற வெற்றிகளின் விளைவான உத்வேகம் காரணமாக மீண்டும் பாரிய அனுகூலத்தை அடையக்கூடிய நிலையில் இருக்கும். மாகாணசபை தேர்தல்களை நடத்துவதற்கு உண்மையில் விரும்பக்கூடிய அளவுக்கு அதிகாரப் பரவலாக்கல் இலட்சியத்தின் மீது அது போதுமானளவுக்கு பற்றுறுதி கொண் டிருக்கிறதா என்பது முக்கியமான ஒரு கேள்வியாகும்.

மாகாணசபைகள் வீண்செலவை ஏற்படுத்துபவை என்றும் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையக் கூடியவை என்றும் சகல மட்டங்களில் உள்ள மக்கள் மத்தியிலும் பரவலான அபிப்பிராயம் ஒன்று இருக்கிறது. ஆனால், மாகாண சபைகள் அரசியலமைப்பின் அங்கமாக இருப்பதாலும் அரசியலமைப்பை உறுதியாகப் பின்பற்றுவதாக உறுதி அளித்திருப்பதாலும், தேர்தல்களை நடத்தப்போவதாக அரசாங்கம் திட்டவட்டமாக அறிவித்து வந்திருக்கிறது.

ஒவ்வொரு சமூகமும் அது பெரும்பான்மையாக வாழ்கின்ற பகுதிகளில் தீர்மானங்களை மேற்கொள்ளும் அதிகாரத்தைக் கொண்டிருக்க வகை செய்வதே இலங்கை மற்றும் சுவிட்சர்லாந்து போன்ற பல்லின மற்றும் பன்முக சமுகங்கள் வாழும் நாடுகளில் அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும் என்பதற்கான நியாயப்பாடாகும். ஒரு சமூகத்தின் சனத்தொகை மற்றைய சமூகங்கள் சகலவற்றினதும் கூட்டு சனத்தொகையை விடவும் மிகவும் பெரிதாக இருக்கின்ற ஒரு சூழ்நிலையில், பெரும்பான்மைச் சமூகம் அதன் கருத்துக்களையும் நிலைப்பாடுகளையும் சிறுபான்மைச் சமூகங்கள் மீது அவற்றின் நலன்களுக்கு பாதகமான முறையில் திணிப்பதையும் அதிகாரப் பரவலாக்கம் தடுக்கிறது.

> **அரசியலமைப்பின் பிரகாரம் மாகாணசபைகள் முறைமையை நடைமுறைப்படுத்துவதன் மூலமாக அரசாங்கம் அரசியலமைப்பு மீது இன, மத சிறுபான்மைச் சமூகங்களின் நம்பிக்கையையும் தேசிய ஐக்கியத்துக்கு நிச்சயமான ஒரு உத்தரவாதமாக அமையக்கூடிய தேசிய நல்லிணக்கச் செயன்முறையையும் வலுப்படுத்துவதற்கு பெரும் பணியை ஆற்றமுடியும்.**

துரதிர்ஷ்டவசமாக, சுதந்திரத்தின் பின்னரான இலங்கையின் வரலாற்றில் இந்த தோற்றப்பாட்டுக்கு பல பெருவாரியான உதாரணங்கள் இருக்கின்றன. 1948 ஆம் ஆண்டில் இலங்கை சுதந்திரம் பெற்ற கையோடு மலையக தமிழ்ச் சமூகத்தின் (இந்திய வம்சாவளி தமிழ்கள்) குடியுரிமையும் அதைத் தொடர்ந்து வாக்குரிமையும் பறிக்கப்பட்டமையும் அவற்றில் அடங்கும். மிகவும் அண்மையில் 2020 ஆண்டில் கொவிட் பெருந்தொற்றின்போது மரணமடைந்த முஸ்லிம்களின் சடலங்கள் முஸ்லிம் சமூகத்தின் ஆழமான மத உணர்வுகளை அவமதிக்கும் வகையில் கட்டாய தகனம் செய்யப்பட்டதையும் காணக்கூடியதாக இருந்தது.

நாட்டின் ஆட்சிமுறையை மேம்படுத்தும் ஓர் அம்சமாக அதிகாரப் பரவலாக்கலை அரசாங்கம் நோக்கக்கூடிய சாத்தியப்பாடு இல்லை என்றே தெரிகிறது. சகல குடிமக்களையும் சமத்துவமாக நடத்துவதில் உறுதிப்பாட்டைக் கொணடிருப்பதாக ஒரு நிலைப்பாட்டை எடுத்திருக்கிறது. இனவெறியையும் தீவிரவாதத்தையும் அவற்றின் சகல வடிவங்களிலும் உறுதியாக எதிர்க்கும் இனவெறியற்ற ஆட்சி என்று தற்போதைய அரசாங்கத்தை அதன் தலைவர்கள் கூறுகிறார்கள். அதன் விளைவாக கொள்கைகளை வகுத்து தீர்மானங்களை மேற்கொள்ளும் அமைப்புக்களில் இனத்துவ அல்லது பன்முகப் பிரதிநிதித்துவத்தை உறுதிசெய்ய வேண்டும் என்பதற்கு எந்த அழுத்தத்தையும் அரசாங்கம் கொடுக்கவில்லை.


அமைச்சர்கள் மற்றும் பிரதியமைச்சர்கள் நியமனங்களிலும் மிகவும் அண்மையில் "கிளீன் சிறிலங்கா" செயற்திட்டத்துக்கு பொறுப்பான ஜனாதிபதி செயலணியின் உறுப்பினர்கள் நியமனத்திலும் இதைக் காணக்கூடியதாக இருக்கிறது. இன, மத சிறுபான்மைச் சமூகங்களினதும் பெண்களினதும் பிரதிநிதித்துவம் பூச்சியமாக அல்லது விகிதாசார அடிப்படையில் மிகவும் தாழ்ந்த நிலையில் இருக்கிறது. தீர்மானம் மேற்கொள்ளும் அமைப்புக்களில் இன, மத மற்றும் பால்நிலைப் பிரதிநிதித்துவம் தொடர்பான பிரச்சினை மத்திய மட்டத்தில் மீள்பரிசீலனைக்கு எடுக்கப்படவேண்டியது அவசியமாகும்

இத்தகைய பின்புலத்தில், மாகாண சபை தேர்தல்களை நடத்துவதன் மூலம் தீர்மானங்களை மேற்கொள்ளும் அமைப்புக்களில் காணமுடியாமல் இருக்கும் இன, மத பிரதிநிதித்துவத்தை மாகாண மட்டத்திலாவது உறுதிசெய்யக் கூடியதாக இருக்கும். இன, மத சிறுபான்மைச் சமூகங்கள் தாங்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற பகுதிகளில் ஆட்சிமுறையில் அதிகாரப்பகிர்வு செய்யப்படவேண்டும் என்று அவசியம் குறித்து நீண்டகாலமாகவே கோரிக்கையை முன்வைத்து வந்திருக்கிறார்கள். அவர்களின் அந்த அபிலாசைக்கு இடமளிப்பதற்காக வகுக்கப்பட்டதே மாகாண சபைகள் முறையாகும். அரசியலமைப்புக்கான 13 வது திருத்தம் மாகாண சபைகளை ஜனநாயக ரீதியில் மக்களால் தெரிவு செய்யப்படுகின்ற பொறிமுறையாக அமைப்பதற்கு வகைசெய்கிறது

மாகாணசபைகள் வெறுமனே மத்திய அரசாங்கத்தினால் நிருவகிக்கப்படுவதற்கான பன்முகப்படுத்தப்பட்ட அமைப்புக்கள் அல்ல. மாகாணசபைகளுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதற்கான ஏற்பாடுகளையும் கொண்டிருக்கிறது. அரசியலமைப்பின் பிரகாரம் மாகாணசபைகள் முறைமையை நடைமுறைப்படுத்துவதன் மூலமாக அரசாங்கம் அரசியலமைப்பு மீது இன, மத சிறுபான்மைச் சமூகங்களின் நம்பிக்கையையும் தேசிய ஐக்கியத்துக்கு நிச்சயமான ஒரு உத்தரவாதமாக அமையக்கூடிய தேசிய நல்லிணக்கச் செயன்முறையையும் வலுப்படுத்துவதற்கு பெரும் பணியை ஆற்றமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு சகாப்தத்தின் முடிவு அரசியல் சாகடிப்பா?




பனங்காட்டான்

ஈழத்தமிழர் அரசியலில் மாவை என்ற ஈரெழுத்து அழிக்க முடியாத இடத்தைப் பெற்றது. சோமசுந்தரம் சேனாதிராஜா என்ற நெடிய மனிதரை அவரது பிறந்தகமான மாவிட்டபுரத்தின் சுருக்கப் பெயரால்தான் எல்லோரும் அழைப்பர். இதனால் மாவை என்பது மதிப்பார்ந்த பெயராக அனைவரது மனதிலும் பதிந்துள்ளது.

எப்போதும் எல்லோராலும் இலகுவாக அணுகக்கூடிய ஒருவராக மாவை சேனாதிராஜா இருந்தமையால் இவரை மாவை அண்ணன் என்று பலரும் பொதுவாக அழைப்பதும், இவர் அவர்களை தம்பி என்று பாசத்தோடு அழைப்பதும் தமிழ் உணர்வினது உரிமையான அடையாளமாக திகழ்கிறது.

தந்தை எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அவர்களால் இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆரம்பிக்கப்படுவதற்கு ஏழாண்டுகளுக்கு முன்னர், தந்தை செல்வா வசித்த கொல்லங்கலட்டி கிராமத்துக்கு அருகாமையிலுள்ள மாவிட்டபுரத்தில் பிறந்து, தந்தையின் கொள்கையை பற்றுறுதியாகக் கொண்டு அரசியல் பயணத்தை ஆரம்பித்தவர் மாவை சேனாதிராஜா. **1961**ல் தமிழ்மண்ணில் இடம்பெற்ற சத்தியாக்கிரகம் இவரது அரசியல் பயணத்துக்கான திறவுகோல். அடுத்தாண்டு தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணியில் இணைந்து எட்டாண்டுகள் அதன் செயலாளராகவும், அதற்கடுத்த பதினான்கு ஆண்டுகள் **(1969-1983)** தமிழின விடுதலைக்காகப் போராடி எட்டுத் தடவைகள் - மொத்தமாக ஏழாண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.



தமிழரசுக் கட்சி, தமிழர் விடுதலை முன்னணி, தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு என்னும் தமிழர் தலைமைக் கட்சிகளில் அறாத்தொடராக மையப்புள்ளியில் நின்று செயலாற்றியவர் இவர். பதவி வேண்டி இவர் அரசியலுக்கு வரவில்லை. எதனையும் களத்தில் நின்று செயலாக்க வேண்டுமென்பதால் தன்னை அதற்குள் ஆகுதியாக்கியவர். இன்று தமிழரசிலும் அதனோடிணைந்த அமைப்புகளிலும் இருப்பவர்களில் எவரும் மாவைக்கு நிகரானவர் இல்லையென்று துணிந்து கூறலாம்.

இவர் விரும்பியிருந்தால் **1970**களிலேயே ஏதாவதொரு உள்ளூராட்சிச் சபையில் தலைவராகியிருக்க முடியும். அதற்கான தகுதியும் உரிமையும் இவருக்கு இருந்தன. அது எதனையும் எதிர்பாராது விடுதலை வேட்கையில் ஒரு தொண்டனாகவே தம்மை இணைத்துச் செயற்பட்டார். **1989**க்குப் பின்னரே கட்சித் தலைவர்களின் வேண்டுதலுக்கு இணங்க தமிழ்த் தேசிய அரசியலில் போட்டியிட நேர்ந்தது. அப்போது இவருக்கு வயது **47**. அன்றிலிருந்து சுமார் மூன்று தசாப்தங்களாக நாடாளுமன்ற பிரதிநிதியாக இருந்துள்ளார். விடுதலைப் போராட்டம் உக்கிரமாக இருந்த நேரத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளை தமிழரின் ஏக பிரதிநிதிகளாக ஏற்க வேண்டுமென்ற தீர்மானத்தை கட்சியின் நாடாளுமன்றக் குழு எடுப்பதற்கு முதற்காரணமாக இருந்தவரும் இவரே.

**2014**ம் ஆண்டில் தமிழரசுக் கட்சியின் தலைவர் பதவி இவரை நாடி வந்தது. இப்பதவியை இவர் தேடிப்போகவில்லை. நீண்டகால அனுபவம், அரசியல் மூப்பு, கையாளும் தகுதி, கொள்கைப் பற்று போன்றவைகள் அனைத்தும் இவருக்கு இப்பதவியை பெற்றுக் கொடுத்தன.

**2024**ல் தமிழீழ அரசியல் காற்று திசை திரும்ப ஆரம்பித்தது. திறக்கப்பட்ட கதவால் உள்ளே வந்தவர்களின் குறி இவராகவே இருந்தது. பெருந்தலைவர் என்று அழைக்கப்பட்ட இரா.சம்பந்தனின் இயலாமை, பிணி போன்ற காரணங்களை முன்னிறுத்தி அவரை அரசியலிலிருந்து நீக்க முயற்சித்தவர்கள், சம்பந்தனின் மறைவுக்குப் பின்னர் மாவையை பதம் பார்க்க ஆரம்பித்தனர். அவர்களது உள்வரவின் அடிப்படை நோக்கமாக அதுவே இருந்தது.

மாவையர் தலைமை வகித்த பத்தாண்டுக் காலத்தில் ஒப்பேற்ற முடியாது போன அனைத்துக்கும் இவர் மீதே குறை கண்டனர். அந்தக் காய் நகர்த்தலில் புதிய தலைவர் தெரிவு இடம்பெற்றது. இத்தெரிவில் சிவஞானம் சிறீதரன் வெற்றி பெற்றதையும் தடுப்பதற்கு கட்சியை நீதிமன்றத்தின் படிகளில் ஏற்றினர். அனைவரையும் அணைத்துச் செல்ல வேண்டும், கட்சி பிளவுபடக் கூடாது என்ற மாவையரின் நல்லெண்ண முயற்சியை முறியடித்து அவர் மீது இயங்கு நிலையற்ற தலைவர் என்ற பட்டத்தையும் சூட்டி அவரை அகற்றும் நாடகம் ஆரம்பமானது.

கட்சி மிகவும் நெருக்கடிகளைச் சந்தித்த வேளையில் அதனை உடையாமல் பாதுகாப்பதற்காக இவர் மேற்கொண்ட மென்போக்கு இவரைப் பலவீனமானவராகக் காட்டியிருக்கலாம். அதற்காக அவரது கடந்தகால செயற்பாடுகளையும் அர்ப்பணிப்புகளையும் குறைத்து எடைபோட்டிருக்கக்கூடாது.

கருத்து முரண்பாடு உட்கட்சி மோதலாக முற்றிச் சென்றவேளையில் தலைவர் பதவியிலிருந்து விலகி, ஏற்கனவே அப்பதவிக்குத் தெரிவாகியிருந்து சிவஞானம் சிறீதரனிடம் தலைமைப் பதவியை கையளிக்கும் தமது விருப்பத்தை கடிதம் மூலம் தெரிவித்திருந்தார். அண்ணன் எப்போ போவான் - திண்ணை எப்போ காலியாகும் என்று காத்திருந்தவர்களுக்கு மாவையரின் இந்தக் கடிதம் பாலில் விழுந்த பழமானது. நிலைமையை சுமுகமாக்க விரும்பி தமது முன்னைய கடிதத்தை விலக்கிக் கொள்ள இவர் விரும்பியபோது அதற்கு கட்சியின் கட்டமைப்பில் இடமில்லையென்று கூறி இவரை தலைவர் பதவியிலிருந்து பிடித்துத் தள்ளாத குறையாக வெளியேற்றினர். தப்பித் தவறி மீண்டும் இவர் தலைவராகி விடக்கூடாது என்ற எண்ணத்தில் அந்தப் பதவி நிரப்பப்பட்டது.

ஏறத்தாழ 70 ஆண்டுகளாக அடிமட்டத் தொண்டனாகவிருந்து கட்சித் தலைவர் வரை மிகமிக நெருக்கடியான காலங்களில் கட்சியை உடையவோ அழியவோ விடாது காப்பாற்றிய மாவை சேனாதிராஜா அவர்களுக்கு வழங்கப்பட்ட உயரிய மரியாதை அவர் அமர்வ தற்கு கதிரை கூட இல்லையென்று மறுக்கப்பட்டதுதான். அவ்வாறான அவமானங்களால் அவர் மனஉளைச்சல், மன அழுத்தம் என்று வெளியே அடையாளம் காணமுடியாத உபாதைகளால் தடுமாற்றம் அடைந்திருந்தார். தமது வீட்டில் விழுந்ததால் தலையில் ஏற்பட்ட காயத்துக்கு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டபோதும் அது பயனின்றி அவர் உயிர் நீத்தார் என்பது இப்போது செய்தியாகிவிட்டது.

> நடிகர் திலகம் சிவாஜி கணேசனுக்கு முதலாவது மாரடைப்பு வந்தமைக்கு அவரது பேர்த்தியின் திருமண வைபவத்தின்போது அன்றைய முதலமைச்சர் ஜெயலலிதாவால் அவர் அவமானப்படுத்தப்பட்டதே காரணமென பகிரங்கமாகக் கூறப்பட்டது. ரணசிங்க பிரேமதாச ஏற்படுத்திய அரசியல் துன்புறுத்தல்களும் அநாகரிக செயற்பாடுகளுமே முன்னாள் பிரதமர் டட்லி சேனநாயக்கவுக்கு மாரடைப்பு மரணத்தை ஏற்படுத்தியது என்று அவரது கட்சியினரே அன்று குற்றஞ்சாட்டியிருந்தனர்.

தமிழரசுக் கட்சியை கொள்முதல் செய்ய நினைத்து, அதன் தலைவராகவிருந்த மாவையரை ஏளனப்படுத்தி அவமானத்துக்குள்ளாக்கியது யார் என்பதை குடும்ப உறவினர்களும் ஊடகங்களும் தெரியப்படுத்தி வருகின்றன. மாவையரின் புகழுடலுக்கு அஞ்சலி செலுத்தவே அவர்கள் போகமுடியாத நிலையிலிருப்பதாகவே ஊடகங்கள் ஊடாக அறிய முடிகிறது.



யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தமது அமைச்சர்கள் சிலருடன் மாவையர் இல்லம் சென்று அஞ்சலி செலுத்தியிருந்தார். இவரோடு இணைந்து அங்கு செல்வதற்கு முன்னாள் எம்.பி. சுமந்திரன் அணுகியபோதும் அது சாத்தியப்படவில்லை. தமிழரசுக் கட்சியின் வடபகுதி முக்கியஸ்தர்கள் பலரும் காணாமலாக்கப்பட்டவர்கள் போல் மாறியுள்ளனர். மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த முக்கியமானவர்கள் மாவையர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவுடனேயே யாழ்ப்பாணம் வந்து அவர் நலனில் அக்கறை காட்டியுள்ளனர். கட்சியின் தலையாக விளங்கியவரின் மறைவுக்கு அக்கட்சியினால் இதனை எழுதும்வரை ஓர் அனுதாப அறிக்கை கூட விட முடியாத சூழ்நிலை காணப்படுகிறது.

இவ்வேளையில் இருவேறு முன்னைய சம்பவங்கள் நினைவுக்கு வருகின்றன:

நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் பேர்த்தியை அப்போதைய தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவின் வளர்ப்பு மகன் ஒருவர் திருமணம் புரிந்தார். வெகு ஆடம்பரமாக நடைபெற்ற இத்திருமண வைபவத்தில் மணமகளின் பாட்டனாரான சிவாஜி கணேசன் மரியாதையீனமாக புறம்போக்காக நடத்தப்பட்டார். இது நடைபெற்று சில நாட்களில் அவருக்கு முதலாவது மாரடைப்பு ஏற்பட்டது. ஜெயலலிதா வீட்டுத் திருமணத்தில் அவமானப்படுத்தப்பட்டதால் ஏற்பட்ட மனஅழுத்தமே சிவாஜி கணேசனின் மாரடைப்புக்கு காரணமென தமிழ்நாட்டு ஊடகங்கள் எழுதி வந்தன. இதனை இறுதிவரை எவருமே மறுக்கவில்லை.

இலங்கையின் பிரபலமான பிரதமராகவிருந்தவர் டட்லி சேனநாயக்க. **1973**ம் ஆண்டு ஆரம்பத்தில் இவரது ஐக்கிய தேசிய கட்சியில் எம்.பி. யாகவிருந்த ரணசிங்க பிரேமதாசவுக்கும் இவருக்குமிடையில் மிக மோசமான மோதல் ஏற்பட்டது. டட்லியை விமர்சித்து பிரசுரங்களையும் பகிரங்கக் கூட்டங்களையும் பிரேமதாச நடத்தினார். அதுமட்டுமன்றி, கொழும்பு ஊடகங்களிலும் இது தொடர்பான கட்டுரைகளை பிரேமதாச எழுதி வந்தார். ஏப்ரல் **13**ம் திகதியிலன்று திடீர் மாரடைப்பு காரணமாக டட்லி சேனநாயக்க காலமானார். இவரது மரணச் சடங்குக்கு பிரேமதாச சென்றபோது ஐக்கிய தேசிய கட்சி அபிமானிகள் கூக்குரலிட்டு கூச்சலடித்து பிரேமதாசவை மரணச் சடங்கில் கலந்து கொள்ள தடையாக நின்றனர்.

மறைந்த தலைவர் மாவை சேனாதிராஜாவின் மரணத்தை நினைக்கும் பொழுது மேற்குறிப்பிட்ட இரு நிகழ்வுகளும் நினைவலையில் மோதுகின்றன.

இறுதியாக, தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் மாவையரின் மரணத்தையொட்டி ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோது, மாவையருக்கு மரியாதை வழங்கும் வகையில் தமிழரசுக் கட்சிக்குள் ஏற்பட்டிருக்கும் பிளவுகளும் பிரிவுகளும் நீக்கப்பட்டு கட்சி மீண்டும் வளர்க்கப்பட வேண்டுமென்று தெரிவித்திருந்தார். மாவையரை கட்சித் தலைவர் பதவியிலிருந்து அப்புறப்படுத்தி அவரை வீட்டுக்கு அனுப்பியபோது இந்த வேண்டுகோளை திரு. சிவஞானம் அவர்கள் விடுத்திருந்தால் இன்னும் சிலகாலம் மாவையர் வாழ்ந்திருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநுரா குமார அரசாங்கத்திடமிருந்து இலங்கை மக்கள் எதிர்பார்ப்பது என்ன?



ஜி. இராமகிருஷ்ணன்

அநுரா குமார திசாநாயக்க இலங்கையின் அதிபராகப் பதவியேற்று நான்கு மாதங்களுக்கு மேலாகிவிட்டது. தெற்காசிய நாடுகளில் நேபாளத்துக்கு அடுத்ததாக இலங்கையில் ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) தலைமையில் தேசிய மக்கள் சக்தியின் இடதுசாரி ஆட்சி அமைந்திருக்கிறது. இலங்கை வரலாற்றில் இதுவரை கண்டிராத அளவுக்கு தேசிய மக்கள் சக்தி கூட்டணிக்கு நாடாளுமன்றத்தின் 225 ஆசனங்களில் 158 ஆசனங்கள் கிடைத்ததும் மகிந்த ராஜபக்ச, ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாச போன்ற தலைவர்களின் கட்சிகளை மக்கள் நிராகரித்ததும் நாம் அறிந்ததே. இன்றைய சூழ்நிலையில் அதிபர் அநுரா குமாரவின் அரசாங்கத்தின் செயற்பாடுகள் குறித்து பேசவேண்டியது அவசியமாகிறது.

கடந்த சில வருடங்களில் வெளிநாட்டு கடன் தவணைகளை திருப்பிச் செலுத்தமுடியாமல் இலங்கை அரசின் நிதி நிலைமை வாங்குரோத்தானது உண்மை. மூச்சு முட்டும் வெளிநாட்டுக் கடன், விண்ணை முட்டும் விலைவாசி உயர்வு, தினமும் பல மணிநேரம் மின்வெட்டு, வெளிநாட்டுச் செலாவணி கையிருப்பில் வீழ்ச்சி ஏற்பட்டு உணவுப் பொருட்கள், உரவகைகள், பெட்ரோல், டீசல், மண்ணெண்ணெய் போன்ற அத்தியாவசிய பாவனைப் பொருட்களை இறக்குமதி செய்ய முடியவில்லை. காகிதாதிகள் தட்டுப்பாட்டால் பரீட்சைகளும் இரத்துச் செய்யப்பட்டன.

ராஜபக்ச அரசாங்கத்துக்கு எதிராக மக்கள் கிளர்ச்சி (அறகலய) மூண்டது. அதிகாரத்தில் இருந்த ராஜபக்ச குடும்பம் நாட்டைவிட்டே ஓடியது. இத்தகைய பின்னணியில் மூன்று வருடங்களுக்கு பிறகு நடைபெற்ற தேர்தல்களில் அநுரா குமார தலைமையிலான தேசிய மக்கள் சக்தி கூட்டணி மகத்தான வெற்றியைப் பெற்றது. அதிலும், தேசிய மக்கள் சக்திக்கு மக்கள் மதம், இனம், மொழி கடந்து வாக்களித்தார்கள்.

**மக்களின் எதிர்பார்ப்பு**

"ஒரு செழிப்பான தேசம், அழகான வாழ்க்கை" என்ற முழக்கத்தை முன்வைத்து தேசிய மக்கள் சக்தி தேர்தல்களைச் சந்தித்தது. முன்னைய அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொண்ட உடன்படிக்கை தொடரும் என்றாலும், மக்களுக்கு பாதகமான வரிகளைக் குறைத்திட முயற்சி மேற்கொள்ளப்படும் என்றும் புதிய அரசியலமைப்பை விரைவாகக் கொண்டு வந்து உள்ளூராட்சி, மாவட்டங்கள் மற்றும் மாகாணங்களுக்கு அரசியல், நிருவாக அதிகாரிகளை வழங்கி அரச நிருவாகத்தில் மக்களின் பங்கேற்பு உத்தரவாதப் படுத்தப்படும் என்று தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் அறிக்கை கூறியது.

இலங்கையின் மொத்த சனத்தொகையில் 80 சதவீதத்தினர் கிராமங்களில் வசிக்கிறார்கள். ஒரு பகுதி மக்கள் நகரங்களில் வேலை செய்தாலும், அவர்களின் வாழ்விடம் கிராமங்களே. சனத்தொகையில் பெரும் பகுதியினர் முறைசாராத் தொழிலாளர் குடும்பங்கள். மலையக தேயிலைத் தோட்டங்களில் உள்ள தமிழர்களின் வறுமை நிலை பெரும் துயரமானது. சனத்தொகையில் 25 சதவீதத்துக்கும் அதிகமானவர்கள் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்வதாக அரசாங்கத்தின் அதிகாரபூர்வ மதிப்பீடு கூறுகிறது.



ஆனால் அரசாங்கம் போட்டது வறுமைக்கோடு அல்ல, அது பட்டினிக் கோடு. வறுமையில் உள்ளோரின் தொகை அரசாங்க மதிப்பீட்டை விடவும் அதிகம் என்ற இலங்கையின் பொருளாதார நிபுணர் ஒருவர் குறிப்பிடுகிறார். இலங்கையில் ஐம்பது சதவீதத்துக்கும் அதிகமான மக்கள் வறுமையினால் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறுகிறார்.

**எதிர்நோக்கும் பிரச்சினைகள்**

இலங்கை பல தளங்களில் நெருக்கடியைச் சந்தித்துக் கொண்டிருக்கிறது. அரசாங்கம் கடைப்பிடிக்கும் அரசியல், சமூக, பொருளாதார கொள்கைகள் உள்நாட்டு வளர்ச்சிக்கு அடிப்படையானது என்றாலும், நெருக்கடிகளுக்கு அரசாங்கத்தின் வெளியுறவுக் கொள்கைக்கும் முக்கிய பங்குள்ளது.

இலங்கை அதிபர் அநுர குமார இந்தியப்பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்து இரு நாடுகளுக்கும் இடையிலான சுமுகமான உறவுகள் நீடிக்கும் என்பதை உத்தரவாதப்படுத்தினார். பல உடன்படிக்கைகளும் கைச்சாத்தாகின.

அதே போலவே, சீனாவுக்கும் சென்ற அதிபர் அநுர குமார அந்நாட்டு ஜனாதிபதி சி ஜின்பிங்கைச் சந்தித்து பேச்சுவார்த்தைகள் நடத்தினார். இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு சீன அரசாங்கம் உதவிசெய்யும் என்கிற அடிப்படையில் இருதரப்பு உடன்படிக்கைகள் பலவும் கைச்சாத்திடப்பட்டன. சீன நிறுவனங்கள் இலங்கையில் 10 பில்லியன் அமெரிக்க டொலர்கள் மதிப்பிலான முதலீட்டைச் செய்யவிருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

மக்களின் வாங்கும் சக்தி, வாழ்வாதாரம், வாழ்க்கைத்தரம் ஆகியவற்றை உயர்த்துவதற்கு தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் எத்தகைய கொள்கையைக் கடைப்பிடிக்கப் போகிறது என்பதை மக்கள் ஆவலோடு எதிர்பார்த்திருக்கிறார்கள். வறுமையில் வாடும் மக்களின் அன்றாட வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கு சில மாதங்களில் எந்த அரசாங்கத்தினாலும் தீர்வைக் காணமுடியாது என்றாலும், அதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை அரசாங்கம் தொடங்க வேண்டும் என்று மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

இலங்கை சுதந்திரம் பெற்றபோது பிரிட்டிஷ் காலனியாதிக்கவாதிகள் சுதந்திரத்துக்காக போராடிய மக்களின் கைகளுக்கு அதிகாரம் சென்றுவிடக் கூடாது என்பதில் உறுதியாக இருந்தார்கள். சமூக பொருளாதாரக் கட்டமைப்பின் அதிகாரத்தை மேல்தட்டில் இருந்தவர்களிடமே காலானியாதிக்கவாத அரசு ஒப்படைத்தது. கடந்த காலத்தில் முதலாளித்துவ அரசியல் கட்சிகள் கடைப்பிடித்த நவீன தாராளமயக் கொள்கைகளில் இருந்து விலகி, மக்கள் நலன்காக்கும் மாற்றுக் கொள்கையை இடதுசாரி தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நடைமுறைப்படுத்தும் என்பது மக்களின் எதிர்பார்ப்பாக இருக்கிறது.

**தமிழர் பிரச்சினை**

இலங்கையின் அனைத்துப் பகுதிகளுக்கும் அனைத்து இனங்களைச் சார்ந்த மக்களுக்கும் அனைத்து சமூக, பொருளாதாரப் பிரிவினர்களுக்கும் உரிய அரசியல், சமூக, பொருளாதாரக் கொள்கைகளை இதுகாலவரையில் இலங்கையை ஆட்சி செய்த எந்த அரசாங்கமும் கடைப்பிடிக்கவில்லை. உள்நாட்டுப்போர் முடிவுக்கு வந்து 15 வருடங்களுக்கும் அதிகமான காலம் கடந்துவிட்ட பின்னரும் கூட இலங்கை தமிழர் பிரச்சினைக்கு இன்னமும் முழுமையான தீர்வு காணப்படவில்லை. அதிகாரப்பரவலாக்கல் இடம்பெறவில்லை. நாடாளுமன்ற தேர்தலுக்கு முன்னதாக தமிழர் பகுதிகளில் அதிபர் அநுர குமார உரையாற்றியபோது வழங்கிய வாக்குறுதி முக்கியம் வாய்ந்தது.

"இதுவரை ஆட்சி செய்தவர்கள் தமிழர்களுக்கு போதுமான அளவில் உதவவில்லை. இராணுவத்தினாலும் பல்வேறு அரசுத் துறைகளினாலும் கைப்பற்றப்பட்ட நிலங்களை விடுவிப்பேன்" என்றும் அநுர குமார வாக்குறுதி அளித்தார். இதன் அடிப்படையால்தான் தமிழர்கள் வாழும் பகுதிகளிலும் தேசிய மக்கள் சக்தி பெருவெற்றி பெற்றது.

சமீபத்தில் தமிழ்நாட்டில் விழுப்புரத்தில் நடைபெற்ற இந்திய மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் 24 வது மாநில மகாநாட்டில் இலங்கை தமிழர் பிரச்சினைகளுக்கு தீர்வைக் காணுமாறு இலங்கை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கல்வி, சுகாதாரம், வீட்டு வசதி, நிலம் மற்றும் காவல்துறை போன்ற அம்சங்களில் மாகாண அரசுகளுக்கு அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும் என்றும் அந்த தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டது.

நெருக்கடிகள் மிகுந்த பின்னணியில் இடதுசாரி கட்சியான தேசிய மக்கள் சக்தியை இலங்கை மக்கள் ஆட்சியில் அமர்த்தியிருக்கிறார்கள். மக்களின் வாழ்வாதாரம், வாழ்க்கைத்தரம் உயர்ந்திட இனப்பிரச்சினைக்கு விரைந்து தீர்வு காணவேண்டும் என்று மக்கள் எதிர்பார்க்கிறார்கள். தாமதமானால் உலகில் பல நாடுகளில் ஏற்பட்டதைப் போன்று மக்கள் மத்தியில் உருவாகும் அதிருப்தியை, கடைந்தெடுத்த வலதுசாரிப் பிற்போக்குவாதிகள் பயன்படுத்தி மீண்டும் அதிகாரத்துக்கு வரும் ஆபத்து ஏற்படலாம். இந்த சூழ்நிலையில் புலம்பெயர்ந்த இலங்கைத் தமிழர் கவிஞர் சேரன் அண்மையில் நேர்காணல் ஒன்றில் கூறிய கருத்து பொருள் பொதிந்த ஒன்று.


"இந்த மக்களாட்சியில் நியாயமான, சமத்துவமான ஒரு தீர்வை வழங்கி எல்லோரையும் இணைத்துக் கொள்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. இந்த வாய்ப்பை இன்றைய இலங்கை அரசாங்கம் தவறவிட்டால் இது போன்ற வாய்ப்பு இனிமேல் கிடைக்காது. வராது." இந்த கவலையையும் எச்சரிக்கையையும் இலங்கையின் இடதுசாரி அரசாங்கம் கவனத்திற்கொண்டு செயற்படவேண்டும்.

(கட்டுரையாளர் இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் தலைமைக்குழு உறுப்பினர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவையின் மறைவு தமிழரசை இணைக்குமா அல்லது பிரிக்குமா?



கந்தையா அருந்தவபாலன்



> கட்சி ஒற்றுமை என்பது சுயநலன் கடந்து விட்டுக் கொடுப்பதும் ஏற்றுக்கொள்வதுமாகும். ஆயிரந்தான் விமர்சனம் இருந்தாலும் கட்சி நலனுக்காக விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கை மாவையிடம் இவர்கள் கற்கவேண்டும்.

சிறுவயதில் இலங்கைத் தமிழரசுக் கட்சிப் பாசறையில் புகுந்து இறுதி மூச்சுவரை பற்றுடன் அக்கட்சியில் அரசியல் பயணம் செய்த மாவையின் மூச்சும் அடங்கிவிட்டது. இன்னும் சில மணித்தியாலங்களில் அவரது உடலும் தீயுடன் சங்கமமாகிவிடும். எனினும் அவரது அரசியல் செயற்பாடுகள் தொடர்பில் அண்மைக்காலத்தில் அதிகளவு எதிர்மறையான விமர்சனங்கள் அவர்மீது முன்வைக்கப்பட்டாலும் தமிழரசியல் வரலாற்றில் அவருக்கும் குறிப்பிடத்தக் களவு பதிவுகளுண்டு. வீரஞ்செறிந்த எமது விடுதலைப் போராட்டங்களின் தொடக்ககால வரலாறுகள் மாவை உட்பட சில இளைஞர்களைப் பற்றியே அதிகம் எடுத்துக் கூறும். எண்பதுகளுக்குமுன் தீவிரவாதத்தில் உறுதியாகவும், அதன்பின் ஆயுதம் மௌனிக்கும் வரை தீவிரவாதத்துக்கும் மிதவாதத்துக்குமிடையில் இரண்டுங் கெட்டான் நிலையிலும், அதன்பின் அரசியல் சூழ்நிலைகளின் கைதியாகவும் அவரது அரசியல் பயணம் சென்றதைக் காண முடியும். சூழ்நிலைகளின் கைதி நிலையை உடைத்து வெளிவரக்கூடிய ஆளுமை அவரிடம் இருந்திருக்கவில்லை அல்லது அதை உடைக்க அவர் விரும்பாமலும் இருந்திருக்கக்கூடும். அதன்காரணமாகவே அண்மைக்காலத்தில் அதிகளவு விமர்சனங்களுக்குள்ளாகியதுடன் அவர் யாரை அதிகளவு நம்பினாரோ அவர்களாலேயே இறுதியில் அவர் அரசியல் அனாதையாக்கப்பட்டார் என்பது கசப்பான உண்மை.

வடக்கு கிழக்கு மக்களின் உறவுப் பாலமாக இருந்த கடைசித் தமிழரசுக் கட்சிக்காரனாகவும் ஏனைய தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் அனைவராலும் மதிக்கப்படும் கடைசித் தமிழரசுக் கட்சிக்காரனாகவும் மாவையே இருந்துள்ளார். 2009இல் கேள்விக்குறியாக இருந்த தமிழ் அரசியலை மீளவும் நிலைப்படுத்தியதில் அவரின் பங்கு அதிகமானது. வடக்கு கிழக்கில் தமிழரசுக் கட்சியை மட்டுமன்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் மீண்டும் தடத்துக்குக் கொண்டு வந்ததில் பெரும்பங்கு மாவையையே சாரும். இந்நிலையில் மாவையின் மறைவு இலங்கைத் தமிழரசுக் கட்சியில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும்? ஏலவே அக்கட்சியில் ஏற்படுத்தப்பட்டுள்ள பிளவு மறையுமா அன்றி நிரந்தரமாகுமா? மாவையின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தியபின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அக்கட்சியின் தற்போதைய பதில் தலைவர் சி.வி.கே சிவஞானம் மாவையின் கனவை நனவாக்க அனைவரும் வேறுபாடுகளை மறந்து ஒன்றாக இணையவேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளதைக் காணமுடிகிறது. அவரின் இக்கோரிக்கை நிறைவேற வாய்ப்புள்ளதா?

இக்கேள்விக்கு விடை தேடவேண்டுமானால் தமிழரசுக்கட்சியின் தற்போதைய முக்கிய பிரச்சினையையும் அதன் பின்புலத்தையும் விளங்கவேண்டும். அக்கட்சியின் தற்போதைய பிரச்சினையின் மையம் மாவை அல்லர். தற்போதைய பிரச்சினை தோன்றுவதற்கு மாவைக்கு முக்கிய பங்கு உண்டெனினும் அப்பிரச்சினை தற்போது அவரது கையை மீறிவிட்டிருந்ததுடன் அவரால் தீர்க்கக் கூடிய நிலையிலும் அது இருந்திருக்கவில்லை. அக்கட்சியின் தற்போதைய முதன்மைப் பிரச்சினை அதன் தலைவராக யார் இருப்பது என்பது. அதாவது கட்சியின் அதிகாரத்தை யார் கையில் வைத்திருப்பது என்பது. இந்தப் போட்டியில் மாவை இருந்திருக்கவில்லை. கட்சியில் மதிப்புமிக்க பதவி அல்லது தேசியப் பட்டியல் மூலமான பாராளுமன்ற உறுப்பினர் என்பதே அவரது கூடியபட்ச இறுதி விருப்பமாக இருந்தது. பிரதான வீரராகவன்றி அணியில் ஒரு வீரராக இருந்தாலே போதும் என்ற நிலைக்கே அவர் வந்திருந்தார்.

மறுபுறத்தில் கட்சியின் பிரச்சினை மட்டுமன்றி அதன் எதிர்காலமுங்கூட இப்போது இருவர் கைகளில் மட்டுமே உள்ளது. ஒருவர் சுமந்திரன். மற்றவர் சிறிதரன். இவ்விருவரில் யார் கட்சியின் அதிகாரத்தை வைத்திருப்பது என்பது. ஆனால் இது இப்போது ஆரம்பக் கட்டப் பிரச்சினையன்று. நன்றாக முற்றி வெடித்து விழும் நிலைமைக்குச் சென்றுவிட்ட ஒரு பிரச்சினை. மருந்து, மாத்திரைகளால் குணப்படுத்தும் நிலையைக் கடந்து அறுவைச் சிகிச்சைக் கட்டத்தை அடைந்துவிட்ட புற்று நோயைப் போன்ற ஒன்றாக அது மாறிவிட்டது. வீட்டுக்குள் கதைத்துப் பேசி, விட்டுக்கொடுத்து ஒத்துப் போக முடியாது நீதிமன்றுக்குப் போய்விட்ட ஒரு விவாகரத்துப் பிரச்சினை. அதற்கு மேலாக பாராளுமன்றத்திலும் பேசுமளவுக்கு முக்கியத்துவமாகிவிட்ட மக்கள் பிரச்சினை? என்றாகிவிட்டது. எல்லாங் கடந்து நீதிமன்றுக்குச் சென்றுவிட்ட விவாகரத்து வழக்குகளில் மீண்டும் தம்பதிகள் ஒற்றுமைப்பட்டுச் செல்வது அரிது. சிலவேளை ஒரு தரப்பு இணங்கினாலும் மறுதரப்பு அதனை ஏற்று இணைந்து வாழ முன்வருவதும் அரிது.

மேலும் இருவருக்கிடையிலான தலைமைத்துவப் போட்டிப் பிரச்சினை இப்போது அவர்களைக்கடந்து கட்சியை இரு அணிகளாகத் துருவப்படுத்தியிருப்பது மட்டுமன்றி நாளாந்தம் அவ்வணியினரின் செயற்பாடுகள் எதிரெதிர் முனைகளை நோக்கித் தொடர்ந்து தள்ளிய வண்ணமே உள்ளன. இரு அணியினரின் பதிவுகளால் சமூக ஊடகங்கள் நாற்றமெடுக்கின்றன. தமது பல்லழுக்கை மற்றவர் மூக்கில் திணிப்பதையிட்டு அவ்வாறு செய்து வரும் அக்கட்சியின் எந்த விசுவாசி? யும் கவலைப்பட்டதாக, படுவதாகத் தெரியவில்லை. இதன்மூலம் சென்ற பாராளுமன்றத்தேர்தலில் அக்கட்சி மட்டுமன்றி அக்கட்சி எந்த இனத்துக்காகப் போராடுவதாகக் கூறிக்கொள்கிறதோ அந்த இனத்துக்கும் பாதிப்பு ஏற்பட்டதைக் கூடக் கவனத்திற் கொள்ளாது தொடர்ந்தும் இவ்வாறான செயற்பாடுகள் முன்னெடுக்கபட்டு வருவதை அவதானிக்க முடிகிறது. இதன் ஒரு தொடர்ச்சிதான் மாவையின் இறப்பை வைத்தும் செய்யப்படுகிறது. மாவையின் இறப்புக்குச் சுமந்திரன் அணிதான் காரணம் என்றும், அவ்வணியின் முக்கியமானவர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு அவர்களை மாவையின் உடலுக்கு அஞ்சலி செலுத்த விடக்கூடாது என்றும் விடமாட்டோம் என்றும் சமூக ஊடகங்களூடாக வெறுப்புக்கள் விதைக்கப்படுகின்றன.

ஒருவரின் மரணத்தை வைத்து அரசியல் செய்வது என்பது எவ்வகையிலும் நியாயப்படுத்த முடியாததொன்று. ஒரு இழவு வீட்டுக்கு யார் செல்லவேண்டும். யார் செல்லக்கூடாது என்று சொல்வதற்கு இது ஒன்றும் அவரவர் அப்பன் வீட்டுக் காரியமல்ல. ஒரு அரசியல் தலைவருக்கு அஞ்சலி செலுத்த அவரது எதிரி வந்தாலும் அதனை ஏற்றுக் கொள்வதே பண்பு. கட்சியின் சிலரது அழுத்தத்தினாலேயேதான் ஒரு தலைவர் இறந்தார் என்று கூறுவதுகூட அந்தத் தலைவரையே இழிவுபடுத்துவது போன்றது. அரசியல் என்பது அழுத்தங்கள் நிறைந்த ஒன்றுதான். இதைவிட மோசமான அழுத்தங்களை எல்லாம் தாண்டிவந்தவர்தான் மாவை. ஒருவரது அரசியல் தொடர்பாக விமர்சனம் செய்வது ஆரோக்கியமானது. ஆனால் அவரது இறப்பை வைத்து அரசியல் செய்வது மோசமானது. இது தெரியாத சிலர்தான் இவ்வாறான கீழ்த்தரமான செயல்களைச் செய்து வருகிறார்கள். நாளைக்குப் பிரிந்து நிற்கும் தலைவர்கள் ஒன்றுபட்டால் அவர்களை அதே வாயால் புகழ்பவர்களும் இவர்கள்தான். இவர்கள் ' வருத்தப்படாத வாலிபர் சங்கம்' திரைப்படத்தில் சத்தியராஜின் பின்னால் திரியும் அந்த நான்கு பேர் போல.

இவ்வாறு உட்கட்சிப் பிரச்சினை இன்று ஊர்சிரிக்கும் நிலைக்கு மாறிய பின் வேறுபாடுகளை மறந்து அனைவரும் ஒன்றுபட்டு மாவையின் கனவை நனவாக்குவோம் என சீ.வீ.கே விடுக்கும் அழைப்பு சபைக்கேறுமா? மாவையின் கனவு என்னவென சீ.வீ.கே க்கு தெரியாதா? அந்தக் கனவைக் கலைப்பதற்காகத் தானே அதுவரை மாவையுடன் ஒட்டியிருந்த அவர் இப்போது சுமந்திரனுடன் ஒட்டிக்கொண்டுள்ளார் என்பதை ஊரறியாதா? கையால் கிழிக்கக் கூடிய பனங்கிழங்கை மரமாக வளர விட்டு விட்டு இப்போது ஆப்பும் வல்லீட்டுக் குற்றியும் தேடும் நிலையில் கட்சியின் மூத்தலைவர்கள். கட்சி ஒற்றுமை என்பது சுயநலன் கடந்து விட்டுக் கொடுப்பதும் ஏற்றுக்கொள்வதுமாகும். ஆயிரந்தான் விமர்சனம் இருந்தாலும் கட்சி நலனுக்காக விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கை மாவையிடம் இவர்கள் கற்கவேண்டும். ஒருவகையில் கட்சியின் நிரந்தரப் பிளவை மாவை சற்றுத் தாமதப்படுத்தியுள்ளார் என்றே கருதமுடியும். அதனால் மாவையின் மறைவின்பின் பிளவு ஒட்டுவதற்குப் பதிலாக வெட்டுவதற்கே வாய்ப்புகள் அதிகமாக இருக்கும். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியுக்தியார் பதில்கள்

**கந்தையா முகுந்தன்**
**சுவாமியார் வீதி, கொழும்புத்துறை.**

**கேள்வி:** தமிழ் தேசிய இனத்தின் தலைவர்களை ஒன்றிணைத்த ஒரு போராளி மாவை சேனாதிராசா என இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பதில் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்துள்ளாரே. ஆனால் அவரது மரணச்சடங்கில் கலந்துகொள்வதற்குக்கூட ஜனாதிபதியின் உதவியை அவரது கட்சிக்காரர் ஒருவரே நாடியதாக செய்திகள் வெளிவருகின்றனவே. அப்படியெனில் அண்ணர் மாவை சேனாதிராசாவால் அவரது கட்சியினரை ஒன்றிணைக்க முடியவில்லையா?



வியுக்தியார்: ஒருவர் மரணித்துவிட்டால் அவரது நல்ல பக்கங்களை மாத்திரமே பேசுவது நமது பண்பாடுகளில் ஒன்று. தமிழ் தேசிய இனத்தின் தலைவர்களை ஒன்றிணைத்த போராளி என்று அவர் பற்றி சிவஞானம் ஐயா சொல்லியிருப்பதில் எந்தச் சந்தேகமும் யாருக்கும் இருக்காது. அவர் பற்றி யாராவது குறை சொல்வார்கள் என்றால், அது அவரது தலைமையில் நடந்த சில குழறுபடிகள் பற்றியே குறைசெல்வது உண்டு. அதுகும் நியாயமானதுதான், அவர் எப்போதும் தன்னை ஒரு போராளியாகவே நினைத்துக்கொண்டிருந்தார். அவர் கடைசிவரை தமிழ்த் தேசியப் போராளியாகவே வாழ்ந்தார். இன்று வரை தமிழ் தேசியத் தலைவர்களை ஒன்றிணைக்கக்கூடிய தகுதியுடன் இருந்த தலைவர்களில் அவரே கடைசியானவர் என்றால் அதுகும் மிகையானது அல்ல. ஆனால் நீங்கள் கேட்டிருப்பதுபோல, கட்சியில் உள்ளவர்கள் அவருக்கு அஞ்சலிசெலுத்துவதற்கு கூட முடியாதவர்களாக இருக்கிறார்கள் என்றால், அது அவர்கள் தமிழ் தேசியவாதிகள் இல்லை என்பதுதான் அதன் பொருள் என்று நினைக்கின்றேன். தமிழ் அரசு கட்சியில் இருப்பவர்கள் எல்லாம் தமிழ் தேசியவாதிகள் என்று நீங்கள் நம்பினால் அதற்கு யார்தான் பொறுப்பாகமுடியும்.

---

**இரா. ஜெயருபன்,**
**பூந்தோட்டம், வவுனியா.**



**கேள்வி:** தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு இல்லாதொழிக்கப்பட்டாலும் அந்த அமைப்பின் நோக்கம் இன்றும் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் வியாபித்துள்ளது. காலி முகத்திடல் அறகலய பூமியில் புலிகளின் இலக்கு வெளிப்பட்டது. ஆகவே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படவேண்டும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளாரே. புலிகள் அமைப்பு இல்லாதொழிக்கப்பட்டு விட்டால் பிறகு எப்படி மகிந்தவுக்கு புலிகளால் பாதிப்பு வரும் என்கிறார்?

**வியுக்தியார்:** புலிகள் அமைப்பு இல்லாதொழிக்கப்பட்டுவிட்டாலும், அவர்களின் நோக்கம் இன்றும் தமிழர்கள் மத்தியில் இருந்துகொண்டுதானே இருக்கின்றது. புலிகள் அழிக்கப்பட்டுவிட்டார்கள் என்பதற்காக தமிழ் மக்கள் தமது உரிமைப் போராட்டத்தை கைவிட்டுவிட்டார்கள் என்றோ அல்லது, தமிழர்களது இனப்பிரச்சினைக்கு தீர்வு கிடைத்துவிட்டது என்றோ யாராவது சொல்லப்போவதில்லையே. யுத்தத்தை முடித்துவைத்த மகிந்தவும் பதின்மூன்று பிளஸ் என்றுதான் சொன்னார். ஆக, தமிழர் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும்வரை திசநாயக்கா சொல்வதுபோல அவர்களின் நோக்கம் வியாபித்து இருக்கத்தான் செய்யும். ஆனால் அதற்கும் மகிந்தவின் பாது காப்பிற்கும் என்ன சம்பந்தம் என்பதுதான் புரியவில்லை. ஒரு காலத்தில் இலங்கை இந்திய ஒப்பந்தத்தையே மூர்க்கத்தனமாக எதிர்த்த ஒரு அமைப்பின் தலைவர், இன்று ஜனாதிபதியாக யாழ்ப்பாணத்தில், அதுகும் வல்வெட்டித்துறையில் மக்களோடு மக்களாக இருந்து அவர்களுடன் அளவளாவவும், கட்டியணைக்கவும் முடிகின்ற அளவிற்கு நிலமை மாறிவிட்ட பின்னரும் இவர்கள் புலிப்பூச்சாண்டி காட்டிக்கொண்டே வாழ்நாள் முழுவதும் இருக்கப்போகின்றார்களோ தெரியவில்லை.




**எஸ். செந்துஜன்,**
**ராசவீதி, கோப்பாய்.**

**கேள்வி:** ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தலைமையில் யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெறவுள்ள மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்ட நிகழ்ச்சி நிரலில் சேர்ப்பதற்காக 20 முக்கிய விடயங்களை உள்ளடக்கிய விடயதானங்களை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மாவட்ட அரசாங்க அதிபருக்கு வழங்கியுள்ளாராமே?



**வியுக்தியார்:** கடந்த பாராளுமன்ற தேர்தலின் பின்னர் அவரது நடவடிக்கைகளில் இதுபோன்ற பல மாற்றங்களை காணமுடிகின்றது. நல்லதுதானே. கன்னியா வென்னீர் ஊற்று இந்து ஆலயப் பிரச்சினைகள் தொடர்பாக திருகோணமலையில் நீண்ட நாட்கள் தமிழர்கள் போராட்டம் நடத்திக்கொண்டிருந்தபோது, அந்தத் தொகுதியின் எம்.பி.யும் தமிழர் தலைவருமான இரா.சம்பந்தனிடம் சென்று போராட்டம்பற்றி சிலர் சொன்னபோது அவர் சொன்னாராம், 'அதுக்கெல்லாம் இப்போது அவசரப்படவேண்டியதில்லை. அரசியல் தீர்வு வந்த பின்னர் எல்லாம் சரியாகிவிடும்" என்று. அதுபோல, 'தேசம்' கிடைத்த பின்னர் பார்க்கலாம் என்று இருக்காமல் மக்களின் அன்றாட பிரச்னைகள் பற்றியும் அவர் கவனம் செலுத்த தொடங்கியிருப்பது காலத்தின் கட்டளை என்று நினைக்கின்றேன்.

---

**இ. கோகுலன்**
**குருமண்காடு, வவனியா.**

**கேள்வி:** 'இந்தியப் பிரதமர் மோடி, இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவோடு பேச்சுவார்த்தை நடத்தி ஒரு ஒப்பந்தத்தை போட வேண்டும். அந்த ஒப்பந்தத்தின் மூலமே தமிழக மீனவர்களின் வாழ்வாதார பிரச்னையை தீர்க்கமுடியும். இத்தகைய ஒப்பந்தத்தினால் யாழ்ப்பாண தமிழ் மீனவர்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது என்ற உறுதியை இந்திய அரசு தரவேண்டும். அந்த வகையில் பிரதமர் மோடி நடவடிக்கை எடுப்பதன் மூலமே தமிழக மீனவர்களின் பிரச்னைக்கு நிரந்தர தீர்வு காண முடியும்" என்று தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை கூறியுள்ளாரே?.

**வியுக்தியார்:** இதிலிருந்து நமக்கு ஒரு விடயம் புரிகின்றது அல்லவா?. இன்னமும் தமிழ்நாட்டு அரசியல்வாதிகள், இந்த மீனவர் பிரச்சினையை சரியாக தெரிந்து வைத்திருக்கவில்லை என்பதை புரிந்து கொள்ளள முடிகின்றது. தமிழக மீனவர்கள் இலங்கை எல்லைக்குள் அத்துமீறி நுழைவதுடன் மட்டுமல்லாது, நமது கடலில் தடைசெய்யப்பட்ட இழுவைமடி மீன்பிடியில் ஈடுபடுகின்றார்கள். அதாவது ஒரு நாட்டு எல்லைக்குள் நுழைவது சட்டவிரோதமானது. அப்படி சட்டவிரோதமாக நுழைவதுடன் நின்றுவிடாமல் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடுகின்றனர். இலங்கை அரசோடு ஒப்பந்தம் போட்டு தமிழக மீனவர்களின் வாழ்வாதார பிரச்சினையை தீர்க்கவேண்டும் என்கிறார் காங்கிரஸ் தலைவர். இலங்கைக்கு எப்படி கடல் இருக்கின்றதோ அதேபோல இந்தியாவுக்குச் சொந்தமாகவும் கடல் இருக்கின்றது. அந்தக் கடலில் மீன்பிடித்து அவர்கள் தமது வாழ்வாதாரத்தை கவனிக்கச் சொல்லாமல், இலங்கையுடன் ஒப்பந்தம் போடச் சொல்கிறார். முதலில் எல்லை தாண்டவேண்டாம் என்று தமது மீனவர்களுக்குச் சொல்லவேண்டும். இன்று நவீன தொழில்நுட்ப வசதிகள் இருக்கின்றன. ஒருவர் கடலில் எல்லையை கண்டறிய மீனவர்களை தொழில்நுட்ப ரீதியில் வளப்படுத்தி, எல்லை தாண்டாமல் இந்திய கடல் பரப்பில் மீன்பிடியை ஊக்குவிப்பதைவிடுத்து இலங்கைக்கடலில்தான் மீன்பிடிப்போம் என்று அடம்பிடிப்பதை நிறுத்த தமிழக அரசியல்வாதிகள் முதலில் முயற்சிக்கவேண்டும்.

---

**ஜி. கிருசாந்தன்,**
**டிக்கோயா, ஹட்டன்.**

கேள்வி: 'ஒற்றையாட்சி சித்தாந்தம் கொண்ட புதிய அரசமைப்பை நிறைவேற்ற அரசாங்கம் முயற்சிக்கிறது. இதனை பாராளுமன்றில் நிறைவேற்ற அரசாங்கம் முயற்சிக்கின்றது. அரசமைப்பு குறித்த சர்வஜன வாக்கெடுப்புக்கு விடப்படும்போது அதனை தமிழ் மக்கள் நிராகரிக்கவேண்டும். ஒற்றையாட்சி சித்தாந்தம் கொண்ட புதிய அரசமைப்பு தமிழரின் ஆதரவுடன் நிறைவேறினால் நாட்டில் தமிழ் மக்களுக்கு எதிர்காலம் இல்லை" என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. எச்சரித்துள்ளாரே?

வியுக்தியார்: இப்போது தமிழ் மக்களுக்கு தேவையானது என்ன என்பதை முதலில் அவர்கள் தெரிந்துகொள்ளவேண்டும். நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் முன்னெடுக்கப்பட்ட அரசியலமைப்பு முயற்சியை தொடர்ந்து முன்னெடுத்து செல்வது என்றே தேசிய மக்கள் சக்தி உறுதியளித்திருக்கின்றது. அதாவது நமது சுமந்திரன் சம்பந்தன் கூட்டணி தயாரித்த அரசியலமைப்பை, அதுதான் எக்கிய ராஜ்ய என்பது ஒற்றையாட்சி பெயர்கொண்ட சமஷ்டிக் கட்மைப்பை தானே அவர்கள் கொண்டுவருவதாக சொல்லியிருக்கிறார்கள். (இது நான் சொல்லவில்லை. அதனை தயாரித்தவர்கள் அப்போது சொன்னது.) அவர்கள் எதைக்கொண்டு வருவதாக இன்னமும் தெரியாதபோதே அவர் அதற்கு எதிராக பேசத்தொடங்குவது, ஏன் என்று தெரியவில்லை. முதலில் தமிழ் மக்கள் அவர்களை விட அநுரவை ஏன் விரும்புகின்றார்கள் என்பதை முதலில் அவர் கண்டறியவேண்டும்.

---

**எஸ். கார்த்திகேசு**
**திருக்கோவில், அம்பாறை.**


**கேள்வி:** ஓய்வூதியம் வேண்டும் என்பதற்காகப் பட்டதாரிகள் பலர் அரச துறையில் வேலைவாய்ப்பைக் கோரி நிற்கின்றனர். இதற்காகச் சில இடங்களில் பட்டதாரிகள் வீதிகளில் இறங்கிக் கூடப் போராடுகின்றனர். தம்மை வேலையற்ற பட்டதாரிகள் என்று அடையாளப்படுத்தும் அவர்கள், முதலில் தனியார் துறையில் குவிந்திருக்கும் வேலைவாய்ப்புக்களைப் பெற முன்வர வேண்டும் என்று தொழில் அமைச்சர் பேராசிரியர் அனில் ஜயந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளாரே?.

**வியுக்தியார்:** ஓய்வூதியத்திற்காகத்தான் பட்டதாரிகள் அரசதுறைகளில் வேலைவாய்ப்பு கோரி நிற்கிறார்கள் என்று அவர் சொல்வதுதான் சரியானதா என்று தெரியவில்லை. தனியார் துறையில் வேலை செய்தாலும், ஊழியர் சேமலாப நிதிமூலம் ஓய்வூதியம் பெறலாம் என்பது அவர்களுக்கு தெரியாததல்ல. ஆனால், அவர்கள் அரசவேலைகளை நாடுவது, அரச வேலை என்றால் வேலை செய்யாமலே சம்பளம் எடுக்கலாம் என்பதற்காக என்பது அவருக்கு தெரியாதல்ல. தனியார் துறையில் அவர் சொல்வது போல வேலைவாய்ப்பு குவிந்திருந்தாலும், வேலைசெய்யாமல் சம்பளம் கொடுக்கும் தனியார் துறை இருந்தால் அவரிடம் கேட்டுச் சொல்லுங்கள் என்கிறார் ஒரு வேலையற்ற பட்டதாரி. ஓர் அரச ஆசிரியர் வருடத்தில் 365 நாட்களில் எத்தனை நாட்கள் வேலைக்கு போகிறார் என்று கணக்குப் போட்டுப் பார்த்தீர்கள் என்றால், எல்லாம் புரியும்.

---

**எஸ். நிதர்சன்,**
**மிருசுவில், சாவகச்சேரி.**

கேள்வி: முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் உடல் எதிர்காலச் சந்ததியினருக்காக பாதுகாக்கப்பட்டு, பொதுமக்கள் பார்வைக்கு வைத்திருக்கப்பட வேண்டும் என்று முன்னாள் துணை சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ தெரிவித்துள்ளாரே.



**வியுக்தியார்:** அவரது உத்தியோகபூர்வ இல்லத்திலிருந்து வெளியேற்ற அரசாங்கம் எடுக்கும் முயற்சிகளை தடுக்க அவர்கள் இதுபோன்ற கருத்துக்களை சொல்லத்தான் செய்வார்கள். இத்தனை சிறப்புக்குரிய ஒருவரைத் தான் அரசாங்கம் வீட்டிலிருந்து எழுப்புகின்றது என்று சொல்லாமல் சொல்கிறார் என்று நினைக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துருக்கியால் பலமடையும் பாகிஸ்தான் ராணுவம் : துருக்கி - இந்தியா பொருளாதார உறவில் சிக்கல்?

- ஐங்கரன் விக்கினேஸ்வரா


இந்தியாவுக்கு எதிராக பாகிஸ்தானின் ராணுவத்தை வலுப்படுத்தும் வகையில் சீனா உதவி செய்து வருகிறது. இதன் தொடர்ச்சியாக சீனாவை போல் பாகிஸ்தானுக்கு ராணுவ உதவிகளை செய்ய துருக்கியும் முடிவு செய்துள்ளது.

பாகிஸ்தானின் ராணுவத்தை பலப்படுத்தும் வகையில் பல உதவிகள் செய்யப்படும் என்று துருக்கி அறிவித்துள்ளதால் இந்தியாவுக்கு பாரிய சிக்கல் ஏற்பட்டுள்ளது.

இந்திய நாட்டுக்கும், அண்டை நாடான பாகிஸ்தானுக்கும் நீண்ட காலமாக பிரச்சனை இருக்கிறது. பாகிஸ்தான் தீவிரவாதத்துக்கு துணை செய்வதோடு, இந்திய நாட்டுக்கு சொந்தமான காஷ்மீரை உரிமை கொண்டாடி வருகிறது. இது தான் இந்தியாக்கும், பாகிஸ்தானுக்கும் இடையேயான பிரச்சனைக்கு முக்கிய காரணமாகும்.

அதேபோல் இந்தியாக்கும் , சீனாவுக்கும் இடையேயும் மோதல் போக்கும் இருக்கிறது. இதனால் சீனா, பாகிஸ்தானுக்கு ஆதரவாக செயல்பட்டு வருகிறது. பாகிஸ்தானுக்கு அதிகளவில் நிதி உதவி, கடனுதவி செய்கிறது. மேலும் ராணுவ உதவிகளையும் செய்து வருகிறது.

பாகிஸ்தானில் தற்போது பொருளாதாரம் பெரும் சிக்கலில் உள்ளது. இதனை சாதகமாக்கி சீனா, அந்த நாட்டுடன் நெருக்கம் காட்டி வருகிறது.





பாகிஸ்தான் - சீனாவின் இந்த நெருக்கம் என்பது இந்தியாவுக்கு ஆபத்தாகவே பார்க்கப்படுகிறது.

இதற்கு காரணம் இருநாடுகளும் இந்திய நாட்டுடன் மோதலை கடைப்பிடிப்பது தான். இதற்கிடையே தான் தற்போது இந்தியாக்கு பெரும் தலைவலி கொடுத்தது போல பாகிஸ்தான் நாட்டின் ராணுவத்தை பலப்படுத்தும் பணியை துருக்கி கையில் எடுக்கிறது.

இதுதொடர்பாக துருக்கி நாட்டின் அதிபர் ரெஹாப் தையிப் எர்டோகன் 'பாகிஸ்தான் பாதுகாப்பு துறையின் பல்வேறு பிரிவுகளுக்கு தேவையான உதவிகளை செய்ய தாராக உள்ளோம். பாகிஸ்தானின் ராணுவ கட்டமைப்பை வலுப்படுத்தும் வகையில் இந்த உதவி செய்யப்பட உள்ளது' என தெரிவித்துள்ளார்.

அத்துடன் துருக்கி நாட்டின் பாதுகாப்பு துறையில் முக்கிய பங்கு வகிக்கும் நிறுவனங்கள், பாகிஸ்தான் நாட்டின் பாதுகாப்பு துறை நிறுவனங்களுடன் சேர்ந்து செயல்பட உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் துருக்கி நாட்டின் பாதுகாப்பு துறை சார்ந்த கம்பெனி பாகிஸ்தானில் உற்பத்தி தொடங்குவதற்கான வசதியை ஏற்படுத்த உள்ளது. அதாவது துருக்கி நாட்டின் பாதுகாப்பு துறை நிறுவனமாக 'ரெப்கான்' செயல்பட்டு வருகிறது. இந்த நிறுவனம் துருக்கியின் தலைநகர் இஸ் தான்புல்லை தலைமையிடமாக கொண்டு செயல்பட்டு வரும் நிலையில் அதன் புதிய கிளை பாகிஸ்தானில் அமைய உள்ளது.

இந்த நிறுவனம் பாகிஸ்தானில் 155 மில்லி மீட்டர் பீரங்கிகளை தயாரிக்க தொழிற்சாலையை தொடங்க உள்ளது. அதேபோல் பாகிஸ்தானில் வெடிப் பொருள் பாதுகாக்கும் வசதியும் செய்யப் பட உள்ளது. இதன்மூலம் ஆண்டுக்கு 1 லட்சத்து 20 ஆயிரம் யூனிட் வெடிப் பொருட்களை சேமித்து வைக்க முடியும்.

> இந்தியாவுடனான துருக்கியின் உறவுகளை ஒப்பிடும்போது பாகிஸ்தானுக்கும் துருக்கிக்கும் இடையிலான உறவுகள் மிகச் சிறப்பாக உள்ளன. காஷ்மீர் விவகாரத்தில் துருக்கியின் நிலைப்பாடு, இந்தியாவிடமிருந்து அது விலகி இருப்பதற்கும் இதுவே முக்கிய காரணமாகும்.

முன்னதாக இதுதொடர்பான ஒப்பந்தம் துருக்கி - அமெரிக்கா இடையே நடந்தது. இந்த ஒப்பந்தத்தின் படி 155 மில்லி மீட்டர் பீரங்கிக்கான குண்டு தயாரிக்கும் தொழிற்சாலை அமெரிக்காவின் டெக்சாஸில் அமைக்கப்பட உள்ளதாக கூறப்பட்டது.

துருக்கி - பாகிஸ்தான் இடையேயான ஒப்பந்தம் என்பது துருக்கியின் ரெப் கான் மற்றும் பாகிஸ்தானின் வா இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் இடையே நடந்துள்ளது.

பாகிஸ்தானின் வா இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் நிறுவனம் என்பது அந்த நாட்டின் ராணுவத்துக்கு தேவையான ஆயுதங்கள், குண்டுகள், இராணுவ வீரர்களுக்கான பொருட்களை ஒப்பந்த அடிப்படையில் தயாரித்து வழங்கி வருகிறது. இருநிறுவனங்களும் இணைந்து இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.

இந்த நடவடிக்கை மூலம் பாகிஸ்தான் துருக்கியேயிடம் இருந்து அதிக ராணுவ உதவிகளை பெற முடியும். இது உண்மையில் இந்தியாவுக்கு புதிய தலைவலியாக பார்க்கப்படுகிறது.

பாகிஸ்தானுக்கு காஷ்மீர் எவ்வளவு முக்கியமானதோ அந்த அளவிற்கு துருக்கிக்கும் அது முக்கியமானது என்று 2020 ஆம் ஆண்டில் பாகிஸ்தான் நாடாளு மன்றத்தில் அதிபர் எர்துவான் கூறினார்.

"எங்கள் காஷ்மீரி சகோதர சகோதரிகள் பல தசாப்தங்களாக துன்பப்பட்டு வருகின்றனர். காஷ்மீர் விவகாரத்தில் நாங்கள் மீண்டும் பாகிஸ்தானுடன் உள்ளோம். ஐநா பேரவையில் இந்த விவகாரத்தை எழுப்புவோம்" என்று துருக்கி அதிபர் பாகிஸ்தான் பாராளு மன்றில் தெரிவித்தார்.

காஷ்மீர் பிரச்னைக்கு போர் மூலம் தீர்வு காண முடியாது. இதற்கு சர்வதேச நீதி மூலமே தீர்வு காண முடியும். இந்த வகையான தீர்வுதான் அனைவருக்கும் நன்மை தரும். நீதி, அமைதி மற்றும் பேச்சுவார்த்தைக்கு துருக்கி தொடர்ந்து ஆதரவளிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் காஷ்மீர் குறித்து எர்துவான் பேச ஆரம்பித்ததும் பாகிஸ்தான் நாடாளுமன்றம் கைதட்டலால் அதிர்ந்தது. நாடாளுமன்றத்தில் பாகிஸ்தான் எம்.பி.க்கள் நீண்ட நேரம் மேசைகளை தட்டி வரவேற்றனர்.

இந்தியாவுடனான துருக்கியின் உறவுகளை ஒப்பிடும்போது பாகிஸ்தானுக்கும் துருக்கிக்கும் இடையிலான உறவுகள் மிகச் சிறப்பாக உள்ளன. இஸ்லாமிய உலகில் இரு நாடுகளுமே சுன்னி பிரிவினரின் ஆதிக்கம் உள்ளவை.

காஷ்மீர் விவகாரத்தில் துருக்கியின் நிலைப்பாடு, இந்தியாவிடமிருந்து அது விலகி இருப்பது ஒரு முக்கிய காரணமாகும். இது தவிர 2022 இல் அஜர்பைஜான் மற்றும் ஆர்மீனியா இடையேயான மோதலில் இந்தியாவும் துருக்கியும் எதிரெதிர் தரப்பில் இருந்தன.

அஜர்பைஜான் துருக்கியுடன் நெருங்கிய உறவுகளைக் கொண்டுள்ளது. 2020 ஆம் ஆண்டில், ஆர்மீனியாவிற்கும் அஜர்பைஜானுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது. அப்போது அஜர்பைஜானுக்கு துருக்கியின் ஆதரவு இருந்தது. அந்த நேரத்தில் இந்தியா ஆர்மீனியாவுக்கு ஆதரவு அளித்தது.

2023 இல் முகமது முய்சு மாலத்தீவு அதிபரானா வேளையில் இந்திய அரசுடன் பாரிய முரண்பாடுகள் எழுந்தன. குறிப்பாக முய்சுவின் "இந்தியாவே வெளியேறு" பரப்புரை பற்றி அதிகமாக பேசப்பட்டது. கடந்த ஆண்டிலும் மாலத்தீவுக்கும் இந்தியாவுக்கும் இடையேயான இடைவெளி வரலாறு காணாத அளவுக்கு அதிகரித்தது.

இருப்பினும் துருக்கிக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவுகளை மேம்படுத்துவதற்கான நோக்கத்தில் பல பொருளாதார நலன்களும் ஒளிந்திருக்கின்றன. மேலும் நீண்ட கால வர்த்தக உறவுகளை இரு நாடுகளும் பகிர்ந்து வருகின்றன என்பதும் கவனிக்கத்தக்கது. ஆயினும் இராஜதந்திர ரீதியாக இரு நாடுகளும் முரண்படாமல் இருப்பினும் துருக்கியின் இராணுவ உதவி இந்தியாவிற்கு மிகவும் அச்சுறுத்தலாகவே அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசோதனையின்றி விடுவிக்கப்பட்ட கொள்கலன்களால் வருமானம் இழப்பு

## அரசாங்கம் மீது எதிர்க்கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு, பெப்.02

இறக்குமதி செய்யப்பட்ட கொள்கலன்களில் கட்டாயம் பரிசோதனை செய்யப்பட வேண்டியவை எனக் குறிக்கப் பட்டிருக்கும் 80 சதவீத கொள் கலன்கள் அரசாங்கத்தின் உயர் மட்டத்தினரின் அறிவுறுத்தல்க ளின் பிரகாரம் விடுவிக்கப்பட் டுள்ளன.

இது நாட்டின் வரி வருமா னத்தில் பாரிய இழப்பை ஏற்பட்டுத்தியுள்ளதாக எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றஞ்சாட்டியுள் ளார்.

அண்மைய நாட்களாக எழுந்துள்ள துறைமுக கொள் கலன் நெரிசல் விவகாரம் தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் துறைமுக தொழிற் சங்க பிரதிநிதிகளுடன் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற சந்திப்பின்போதே சஜித் பிரேமதாஸ இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்,

"கொள்கலன் பரிசோதனை நடவடிக்கையில் தாமதம் காரணமாக ஏற்பட்ட நெரிச லுக்கு மத்தியில் தவறான செயல்பாடொன்று இடம்பெற் றுள்ளது.

இறக்குமதி செய்யப்பட்ட கொள்கலன்களில் கட்டாயம் பரிசோதனை செய்யப்பட வேண்டியவை எனக் குறிக்கப் பட்டிருக்கும் 80 சதவீத கொள் கலன்கள் கூட அரசாங்கத்தின் உயர்மட்டத்தினரின் அறிவுறுத் தல்களின் பிரகாரம் இடை விடாது விடுவிக்கப்பட்டுள் ளன.

இந்த விடுவிப்புகள் குறித்து சுங்கச் தொழிற்சங்கங்கள் கூட தற்போது கேள்வி எழுப்பி வருகின்றன.

இதை அரசாங்கமும் ஏற்றுக் கொண்டுள்ளது. ஆனால், இவ்வாறு விடுவிக்கப்பட்ட கொள்கலன்களில் ஆயுதங்கள், தங்கம், போதைப்பொருள் மற்றும் தரக்குறைவான மருந்து கள் இல்லை என அரசாங்கத் தால் எவ்வாறு கூற முடியும்? இது பிரச்னைக்குரிய விடய மாகும்.

இந்த செயல்முறை நாட் டுக்கு தீங்கு விளைவித்துள்ளது. வரி வருவாயில் இழப்பை ஏற்படுத்தியுள்ளது.

பரிசோதனைக்கு உட்படுத் தப்படாத பொருட்கள் நுகர் வோருக்கு விடுவிக்கப்பட்டுள் ளன. இவற்றை பரிசோத னைக்கு உட்படுத்தாமல் அரசாங்கம் எவ்வாறு பொறுப் பேற்க முடியும்?

அரசாங்கத்தின் மத்திய நரம்பு மண்டலம் செயலிழந்து போயுள்ளது. இது குறித்து அரசுக்கு எந்தப் புரிதலும் இல்லை. இந்த விவகாரத்துக்கு அரசாங்கத்திடம் இருந்து பொறுப்பான பதில் தேவை.

இந்தக் கொள்கலன்களை விடுவிக்க உத்தரவிட்டவர்கள் குறித்து அரசாங்கம் தகவல்க ளை வெளியிட வேண்டும்"- என்றார். (எ)

# கரவெட்டி வெல்லன் வீரகத்தி விநாயகர் ஆலய மஹாகும்பாபிஷேகம் இன்று

வடமராட்சி பெப்.2

வடமராட்சி கரவெட்டி அருள்மிகு ஸ்ரீ வெல்லன் வீர கத்தி சேதக விநாயகர் ஆலய மஹாகும்பாபிஷேகம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி முதல் 10.30 மணி வரை நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகத்துக்கான கிரியைகள் கடந்த 29ஆம் திகதி புதன்கிழமை முதல் ஆரம்ப மாகி நடைபெற்று வருகிறது. சிபூஜா ஈசான சிவாச்சாரியார் ஸ்ரீலஸ்ரீ சம்பந்தக் குருக்கள், ஆலய பிரதம குரு ஸ்ரீலஸ்ரீ க. வேதாரணியேஸ்வரன் குருக்க ளின் உதவியுடன் கும்பாபிஷே கத்தை நடத்தி வைப்பார். (02)

# தும்பளை லூர்து மாதா உற்சவம் கொடியேற்றத்துடன் இன்று ஆரம்பம்

வடமராட்சி ஜன.2

யாழ்.மாவட்டத்தின் கத்தோலிக்க யாத்திரை தலங்க ளில் ஒன்றான பருத்தித்துறை தும்பளை லூர்த்து மாதா திருத் தல வருடாந்த உற்சவம் இன்று ஞாயிறுக்கிழமை கொடியேற் றத்துடன் ஆரம்பமாகிறது. தினசரி நல்நாள் வழிபாடுகள் பிற்பகல் 4.30 மணிக்கு திருச் செபமாலையுடன் இடம் பெறும்.

நற்கருணை விழா எதிர்வரும் 10ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு நடை பெறும்.

பருத்தித்துறை பங்குத்தந்தை அருட்திரு கரன் அடிகளார் தலைமையில் இடம்பெறும் இத்திருத்தலப் பெருவிழா எதிர் வரும் 13 ஆம் திகதி வியாழக் கிழமை 5.30 மணிக்கு முதலாம் திருப்பலியும் காலை 7 மணிக்கு இரண்டாம் திருப்பலியும் ஒப் புக் கொடுக்கப்படும். தொடர்ந்து சுற்றுப்பிரகாரத்து டன் வருடாந்த உற்சவம் நிறைவு பெறும். (02)

# இலங்கையர் எதிர்கொள்ளும் வீசா பிரச்னையை தீர்க்கவும்

## இத்தாலி தூதுவரிடம் கோரிக்கை

கொழும்பு,பெப்.02

இலங்கை சாரதி அனுமதிப்பத்திரத்தை இத் தாலியில் அனுமதிக்கும் ஒப்பந்தத்தை விரைவில் கைச்சாத்திடவும் இத்தாலியில் தொழில் வீசா பிரச்னையை தீர்ப்பது குறித்தும் அமைச்சர் விஜித ஹேரத் இத்தாலி தூதுவருடன் கலந்துரையாடி யுள்ளார்.

வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் இலங்கைக்கான இத்தாலி தூதுவர் டெமியானோ பிரென்கோவக் ஆகியோருக்கிடை யில் வெளிவிவகார அமைச்சில் விசேட கலந்துரை யாடல் ஒன்று நடைபெற்றது.

இதன்போது, இத்தாலியில் தொழில் வீசா பெற்றுக்கொள்வதை இடை நிறுத்தியுள்ளமை தொடர்பில் அமைச்சர் கேட்டறிந்தபோது, இத்தாலி அரசாங்கம் பல நாடுகளுக்கு தொழில் வீசா வழங்குவது தொடர்பில் மீள் பரிசீலனைக்கு உட்படுத்தியுள்ளதுடன் அது தற்காலிக நடவடிக்கையாகும் என தூதுவர் கூறி னார்.

இலங்கையர்களுக்கு மீண்டும் தொழில் வீசா வழங்குவதை விரைவாக ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் கோரிக்கை விடுத்த போது, அது தொடர்பில் இத்தாலி அரசாங்கத் துக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தூதுவர் தெரிவித்தார்.

இதேபோன்று, இலங்கை வாகன சாரதி அனுமதிப்பத்திரத்தை இத்தாலியில் அனுமதிக் கும் ஒப்பந்தத்தை தாமதிக்காமல் நிறைவு செய்வ தற்கு ஒத்துழைப்பு வழங்குவதாகவும் தூதுவர் தெரிவித்தார். (எ)

# பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணம் வழங்கல்

யாழ்ப்பாணம், பெப்.02

தரம் -1 இல் இணையும் மாணவ மாணவியர் ஒவ்வொரு வருக்கும் 16, 000 ரூபாய் பெறுமதியான கற்றல் உபகர ணங்கள் வழங்கும் நிகழ்வு இணுவில் பொது நூலகத்தின் கனடா அமைப்புக்குழு ஏற் பாட்டில் இணுவில் பொது நூலக தகவல் தொழில்நுட்ப விரிவுரை மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் இணுவில் பொது நூலகப் போசகர் பேரா சிரியர் க. தேவராஜா, சிறுவர் திறன் விருத்தி மைய தலைவர் வி. உதய மோகன், இணுவில் இந்துக் கல்லூரி அதிபர் உட்பட நிர் வாக உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். (எ)

# இலங்கை அரசினால்....

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

போர் வெற்றியை அடுத்து தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்பதற் கான ஓர் அரிய வாய்ப்பை வர லாறு அவருக்கு கொடுத்தது. போர் முடிவுக்கு வந்த உடனடி யாக அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கு பெரும்பான்மை யின மக்களின் ஆதரவைப் பெறுவதற்கு அவருக்கு சகல வாய்ப்புக் களும் இருந்தன. குறைந்த பட்சம் அரசிய ல மைப்புக்கான 13 வது திருத் தத்தை யாவது சாத்தியமான அளவுக்கு நடைமுறைப்படுத்த மகிந்த ராஜபக்ச முன்வந்திருந் தால் எதிர்ப்பு கிளம்பியிருக் காது.

ஆனால், அவர் இனங்க ளுக்கு இடையில் நல்லிணக் கத்தை ஏற்படுத்துவதற்கு பதிலாக மேலும் பகைமையை வளர்க்கக்கூடிய அணுகு முறையையே கடைப்பிடித்தார். பெரும்பான்மையின மக்கள் மத்தியில் இனவாதத்தை வளர்ப்பதற்கு புதிய எதிரிகளை அவர் கண்டுபிடித்தார்.

எதிர்காலச் சந்ததிகளுக்கு இனப் பிரச்சினையை விட்டுச் செல்லாமல் இருப்பதற்கு தனக்கு இருந்த வாய்ப்புக் களை மகிந்த ராஜபக்ச தீர்க்கதரிச னத்து டன் உகந்த முறையில் பயன்படுத்தியிருந்தால் உண் மையிலேயே அந்த சந்ததிக ளின் கௌரவத்துக்கு உரிய வராக அவரைக் கொண்டாட முடியும். போர்வெற்றிக்காக மாத்திரம் அவரை எதிர்காலச் சந்ததிகள் கௌரவிக்க வேண் டும் என்று கூறுவது அடிப் படையில் இனவாதத்தை மேலும் வளர்ப் பதை நோக்க மாகக் கொண்ட கோரிக்கையே யாகும்.

அரசியலில் இருந்து தற்போ தைக்கு விலகப் போவதில்லை என்றும் உடல் ஆரோக்கியத்து டன் இருப்பதாகவும் கூறிக் கொண்டிருக்கும் மகிந்த ராஜ பக்ச தனது மரணத்துக்கு பிறகு உடலை பேணிப் பாதுகாக்க வேண்டும் என்று அஜித் ராஜபக்ச விடுத்த வேண்டு கோளை எவ்வாறு நோக்குகி றாரோ தெரிய வில்லை.

மகிந்தவின் விசுவாசிகள் போர் வெற்றிக்காக அவர் வரலாற்றில் நினைவு கூரப்பட வேண்டியவர் என்று கொண் டாடலாம். மீண்டும் இன வாதத்தை தூண்டு வதற்கு சந்தர்ப்பங்களுக்காக காத்தி ருக்கும் தேசியவாத சக்திகளின் நம்பிக்கைக்குரியவராக அவர் விளங்கக் கூடும். ஆனால் அவர் தவறான ஆட்சி முறையின் ஒரு சின்னமாகவே நினைவு கூரப் படுவார் என்பதே உண்மை. •

# சிவப்பு முத்திரை பதிக்கப்பட்ட 323 கொள்கலன்கள் விடுவிப்பு

## பாதிப்பு ஏற்பட்டால் பொறுப்பேற்க முடியாது

கொழும்பு,பெப்.02

முழுமையாக பரிசோதிக்கப்பட வேண்டும் என்று சிவப்பு முத்திரை பதிக்கப்பட்ட 323 கொள் கலன்கள் எந்தவிதமான பரிசோதனைகளுமில்லா மல் விடுவிக்கப்பட்டுள்ளன. இதனால் ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டு அந்த குற்றச்சாட்டு எம்மீது சுமத்தப்பட்டால் அதன் பொறுப்பை எம்மால் ஏற்க முடியாது.

குற்றச்சாட்டுகளுக்கு உள்ளான நிறுவனங்கள் மற்றும் நபர்களே இந்த கொள்கலன்களை இறக்கு மதி செய்துள்ளனர் என சுங்க தொழிற்சங்க கூட்ட ணியின் தலைவர் அமல் சஞ்ஜீவ தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள சுங்கத் திணைக்கள தொழிற்சங்க கூட்டணியின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"சுங்கத்தில் கொள்கலன்களை பரிசோதனை செய்யும் முறைமையில் கணினி தரவு கட்டமைப் பின் ஊடாக தெரிவு செய்யப்படும் 35 சதவீதமள விலான கொள்கலன்கள் மாத்திரமே பரிசோத னைக்கு உட்படுத்தப்படுகிறது.

மிகுதி 65 சதவீதமளவிலான கொள்கலன்கள் பரிசோதிக்கப்படாமல் விடுவிக்கப்படுகின்றன.

பரிசோதனை செய்வதற்கு தீர்மானிக்கப்பட் டிருந்த 300 இற்கும் அதிகமான கொள்கலன்கள் எவ்விதமான பரிசோதனைகளுமில்லாமல் விடுவிக்கப்பட்டுள்ளமை பிரச்னைக்குரியதாகும்.

இவ்வாறு விடுவிக்கப்பட்ட கொள்கலன்களில் பெரும்பாலானவை அதி அவதானத்துக்குரியதாக கருதப்பட்டு பரிசோதனை செய்யப்பட வேண்டும் என்று சிவப்பு முத்திரை பதிக்கப்பட்டதாகும்.

சுங்கத்தின் உள்ளக பரிசோதனை அலகுக்கு இவ்விடயம் தொடர்பான அனைத்து தரவு கட்ட மைப்பின் தகவல்களையும் வழங்கியுள்ளோம்.

உரிய விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சுங்கத் திணைக் களத்தால் ஏனைய தரப்புக்கும் முறைப்பாடளிக் கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் முறையான விசார ணைகளை மேற்கொள்வதாக அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது.

ஒரு தனிநபருக்கு 300 இற்கும் அதிகமான கொள்கலன்களை இறக்குமதி செய்ய முடியாது. பரிசோதனைகள் ஏதுமில்லாமல் விடுவிக்கப்பட்ட கொள்கலன்களில் பெரும்பாலானவை பல குற்றச் சாட்டுக்களுடன் தொடர்புடைய நிறுவனங்கள் மற்றும் நபர்களுக்கு சொந்தமானது.

சுங்கத்தில் அவதானத்துக்குரிய பட்டியலில் குறித்த நிறுவனம் மற்றும் நபர்களின் பெயர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன" - என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசினால்...

தொடங்க நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சு முடிவு செய்துள்ளது.

மாவட்ட நீதிமன்றங்களில் 33,000 இற்கும் அதிகமான காணி வழக்குகள் இருப்பதாக, அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார குறிப்பிட்டார்.

பல தரப்பினரின் பங்கேற்புடன் இது தொடர்பில் ஆராய குழுவொன்று நியமிக்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார். (அ)

## இந்திய...

மீனவர்கள் துப்பாக்கியை பறிக்க முற்பட்டனர் எனக் கடற்படைத் தளபதி கூறியுள்ளார். இதனை நம்பும் வகையில் விடயங்களை முன்வைக்க வேண்டும்.

கடற்றொழிலுக்காக வருபவர்கள் எல்லை மீறி இருந்தால் அவர்களை கைது செய்து, நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். அதை விடுத்து துப்பாக்கிச்சூடு நடத்துவது பாரதூரமான விடயமாகும். கட்டாய சூழ்நிலை ஏற்பட்டால் மாத்திரமே துப் பாக்கியை பயன்படுத்த வேண்டும் - என்றார். (அ)

## 76 வேலைத்...

ஏற்கனவே பெற்றுக் கொண்ட கடனை திருப்பி செலுத்தவும் இல்லை எனவும் தெரிவித்தார்.

அதனால் நாட்டை தொடர்ந்து முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியாத நிலை காணப்பட்டதால் கடன் மறுசீரமைப்பு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டதாகவும் அவர் கூறினார்.

புதிய கால அட்டவணையின் கீழ் கடனைச் செலுத்துவதற்காக நிறைவு செய்யப்படாமல் இருந்த கலந்துரையாடல்களைத் தொடர்ந்தும் நடத்தி ஒரு இணக்கப்பாட்டுக்கு வந்ததாக அவர் தெரிவித்தார்.

மேலும் கடனை மீளச் செலுத்தாத காரணத்தால் ஜப்பான் அரசாங்கமும், சீன அரசாங்கமும் நாட்டில் முன்னெடுத்த அபிவிருத்தி வேலைத்திட்டங்களை இடை நடுவில் நிறுத்தி வைத்ததாக அவர் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உதாரணமாக எடுத்துக்கொண்டால் நாம் ஜப்பானில் கடனை பெற்றுச் செலுத்தாமல் விட்டிருந்தோம். அதனால் ஜப்பான் அரசாங்கம் மேற்கொண்ட 11 வேலைத் திட்டங்களை நிறுத்தி வைத்தது. சீன அரசாங்கம் சுமார் 30 வேலைத்திட்டங்களை நிறுத்தி விட்டது.

தொடர்ந்தும் கடனை செலுத்தாமல் விடுவதா அல்லது கடன் செலுத்தக் கூடிய வகையிலான ஒரு தீர்வை எட்டுவதா என்பதே எங்களுக்குச் சவாலாகக் காணப்பட்டது.

அதனால் நாங்கள் ஏற்கனவே இருந்த கலந்துரையாடல்களை நிறைவு செய்து டிசெம்பர் 21 ஆம் திகதி ஆகுகையில் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டோம். 2028 ஆம் ஆண்டுக்குப் பின்னர் கடனை செலுத்துகிறோம் என நாங்கள் ஒரு தீர்மானத்திற்கு வந்தோம். கடனை கொஞ்சம் கொஞ்சமாக 2042 ஆம் ஆண்டு வரை செலுத்துவதற்கான காலத்தை நீடித்தோம். அந்த வகையிலேயே நாங்கள் கடன் மறுசீரமைப்பு செய்தோம்.

ஆட்சி அமைத்து ஒரு மாதத்தில் கடனை செலுத்துவதற்கான ஒரு தீர்மானத்திற்கு வர முடிந்தது. டிசம்பர் மாதம் 21 ஆம் திகதி எமது நாடு வங்குரோத்து நிலையிலிருந்து விடுவிக்கப்பட்டது.

அதன் பின்னர் ஜப்பான் அரசாங்கம் நிறுத்தப்பட்ட வேலைத்திட்டங்களை மீண்டும் ஆரம்பிப்பதாகத் தெரிவித்தது. அவை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இடையில் நிறுத்தப்பட்டிருந்த வேலைத்திட்டங்கள் உட்பட புதிய வேலைத்திட்டங்களையும் சேர்த்து 76 வேலைத்திட்டங்களை ஆரம்பிப்பதாகச் சீன அரசாங்கம் அறிவித்துள்ளது. கடன் மறுசீரமைப்பு செய்திருக்காவிட்டால் இது எமக்குச் சாத்தியமாகியிருக்காது- என்றார். (அ)

# சமாதானத்துக்கான கரங்களை பற்றியவர் மாவை சேனாதிராசா

## மகிந்த ராஜபக்ஷ அனுதாபம்

கொழும்பு, பெப். 02

எதிர் அரசியலில் ஈடுபட்டிருந்தாலும் சமாதானத்துக்கான கரங்களை நாங்கள் நீட்டியபோது மாவை சேனாதிராசா சமாதானத்துக்கு ஒத்துழைப்பு வழங்கினார் என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மாவை சேனாதிராசாவின் மறைவையொட்டி வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதான உறுப்பு கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முன்னாள் தலைவரும், யாழ் மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசாவின் மரண செய்தியை கேட்டு அதிர்ச்சியடைந்தேன்.

1942 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 27 ஆம் திகதியன்று யாழ்ப்பாணம் மாவிட்டபுரத்தில் பிறந்த மாவை சேனாதிராசா, பேராதனை பல்கலைக்கழகத்தில் வெளியாரி பட்டத்தை பெற்று தமிழ் தேசியவாதத்துக்காக அரசியலுக்கு பிரவேசித்தார்.

விடுதலை புலிகள் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தை படுகொலை செய்தன் பின்னர் ஏற்பட்ட தேசியப் பட்டியல் உறுப்பினர் வெற்றிடத்துக்கு திராவிட ஐக்கிய விடுதலை முன்னணியை பிரதிநிதித்துவப்படுத்தி முதல் தடவையாக 1989 ஆம் ஆண்டு பாராளுமன்றத்துக்கு தெரிவானார்.

1999 ஆம் ஆண்டு நீலன் திருச்செல்வம் படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து மீண்டும் அக்கட்சியின் தேசிய பட்டியல் உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டு பாராளுமன்றத்துக்கு பிரவேசித்தார்.

2000 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் யாழ்.மாவட்டத்தில் போட்டியிட்டு பாராளுமன்றத்துக்கு தெரிவானார். 2020 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்த பின்னரும் யாழ் மக்களின் பிரதிநிதியாகவே மக்களுக்கு சேவையாற்றினார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவராக 2014 ஆம் ஆண்டு தெரிவு செய்யப்பட்ட மாவை. சேனாதிராஜா 2024 ஆம் ஆண்டு சுய விருப்பின் அடிப்படையில் தலைவர் பதவியை இராஜினாமா செய்தார்.

எமக்கு எதிர் அரசியலில் ஈடுபட்டிருந்தாலும் பாராளுமன்றத்தில் சந்திக்கையில் இணக்கமாகவே செயற்படுவார். சமாதானத்துக்கான கரங்களை நாங்கள் நீட்டிய போது மாவை சேனாதிராஜா சமாதானத்துக்கு ஒத்துழைப்பு வழங்கினார்.

காலஞ்சென்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராஜாவின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கிறேன். அவரது குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறேன் - என்றுள்ளது. (அ)

## மாவைக்கு...

மாவையின் புகழுடலுக்கு அஞ்சலி செலுத்தியதுடன் அவரது குடும்பத்தினருடன் தனது அனுதாபத்தை பகிர்ந்து கொண்டார். (அ-05)

## மக்களால்...

வாழ் மக்கள் புதிய வரலொன்றை எழுத ஆரம்பித்துள்ளனர். புதிய மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக ஒன்றுப்பட்ட இந்த மக்களுக்கு நாம் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

எமது மக்கள் வடக்கு - கிழக்கு - தெற்கு - மேற்கு - மலையகம் என அனைத்தையும் ஒன்றிணைத்துள்ளனர். சிங்கள தமிழ் முஸ்லிம் மக்கள் ஒன்று என்பதை கடந்த இரண்டு பிரதான தேர்தலிகளின்போது காண்பித்துள்ளனர்.

செப்ரெம்பர் 21 ஆம் திகதி இலங்கை ஒரே இலங்கை உருவானது என நினைக்கிறேன். இலங்கை முன்னோக்கிப் பயணிக்க ஆரம்பித்துள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கத்தினால் இந்த இலக்கை அடைய முடிந்துள்ளது.

ஆனால் நாட்டின் சாதாரண மக்கள் ஒன்றாக ஒன்றிணையும்போது எதிர்க் கட்சியினர் கூட்டு சேர முயற்சிக்கின்றனர்.

பிரிந்து செயற்பட்ட சஜித் பிரேமதாஸ, ரணில் விக்கிரமசிங்க, மகிந்த ராஜபக்ஷ, ரவி கருணாநாயக்க, விமல் வீரவன்ஸ, மனோ கணேசன் ஆகியோர் ஒன்றிணைந்துள்ளனர்.

எதிரிகளாக செயற்பட்டவர்கள் மீண்டும் நண்பர்களாக மாறியுள்ளனர். அன்று ரணில் விக்கிரமசிங்க மகிந்தவுக்கு எதிராக வாக்களிக்குமாறு கோரினார்.

சஜித் பிரேமதாஸ, சுமந்திரன் ஆகியோர் மகிந்தவுக்கும் ரணிலுக்கு எதிராக வாக்களிக்குமாறு கோரினார்கள். இந்த நாட்டை வங்குரோத்து அடைய செய்த குழுவினர் இன்று மீண்டும் கூட்டுச் சேர்ந்துள்ளனர்- என்றார். (அ)

# கிளிநொச்சியில் குடிதண்ணீர் துண்டிப்பால் மக்கள் பாதிப்பு

கிளிநொச்சி, பெப். 02

கிளிநொச்சி மாவட்டத்தில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் விநியோகிக்கப்பட்ட குடிதண்ணீர் விநியோகம் திடீரென முன்னறிவித்தல் இன்றி சில நாட்களாக துண்டிக்கப்பட்டமையால் தாம் கடும் நெருக்கடிக்குள்ளாகியுள்ளனர் என பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சியில் பல பகுதிகளுக்கு குழாய் வழி குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பூநகரி போன்ற கடும் நீர் நெருக்கடியுள்ள பிரதேசங்களில் வாழ்கின்ற மக்கள் முற்று முழுதாக குழாய் வழி நீரையே அனைத்து தேவைகளுக்கும் நம்பியிருந்த நிலையில் சில நாட்களாக நீர் விநியோகம் மேற்கொள்படவில்லை. இதனால் தாம் கடும் நெருக்கடியை சந்தித்தாகவும், பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள் உத்தியோகத்தர்கள் பலரும் நீர் இன்மையால் மிகமோசமாக பாதிப்புக்கு முகம் கொடுக்க நேரிட்டதாகவும் தெரிவிக்கும் பொதுமக்கள் இது தொடர்பில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையுடன் தொடர்பு கொண்டு வினவிய போது-

கிளிநொச்சியில் அமைந்துள்ள தங்களது நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் உற்பத்தி திறனை விட மக்களின நீர் பாவனை அதிகமாக காணப்படுவதனால் சம நேரத்தில் எல்லா பிரதேசங்களுக்கும் நீரை வழங்க முடியாதுள்ளது. இதன் காரணமாக மட்டுப்படுத்த அளவில் நீர் விநியோகம் மேற்கொள்ளப்படுகிறது என தெரிவிக்கின்றனர்.

ஆனால் முற்றுமுழுதாக இந்த நீரையே நம்பியுள்ள எங்களுக்கு சீரான நீர் விநியோகத்தை மேற்கொள்ள வேண்டும் எனவும் அதற்கான நடவடிக்கைகளை சம்மந்தப்பட்ட அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும் என்றும் மக்கள் தெரிவித்துள்ளனர். (அ)

## எங்கள்...

அளிக்கப்பட்டது. மக்களுடன் கலந்துரையாடிய அமைச்சர், அவர்களின் குறை நிறைகளையும் கேட்டறிந்துகொண்டார்.

இதன்போது தமது பகுதியில் கடல் அரிப்பை தடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு மக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டது.

அத்துடன், மீனவர்கள் இளைப்பாறுவதற்கு உரிய வசதிகள் இல்லை எனவும், உரிய வகையில் நங்கூரமிடும் ஏற்பாடு உட்பட கடற்றொழிலை உரிய வகையில் முன்னெடுப்பதற்குரிய ஏற்பாடுகளை செய்துதருமாறு அமைச்சரிடம் கடற்றொழிலாளர்கள் கோரிக்கை விடுத்தனர்.

அத்துடன், இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கை, ரோலர் படகு பயன்பாடு உள்ளிட்டவற்றால் தமக்கு ஏற்படும் வாழ்வாதார பாதிப்புகள் பற்றியும் மக்கள் எடுத்துரைத்தனர்.

மக்கள் மற்றும் கடற்றொழிலாளர்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் கூறினார்.

அத்துடன், இலங்கையின் கடல் வளத்தை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுப்பது தமது அரசாங்கத்தின் முதன்மை நோக்கங்களுள் ஒன்றாகும் எனவும், அதற்குரிய பொறிமுறை உருவாக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

தனக்கான வரவேற்பு நிகழ்வை மிகவும் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்த வெண்புரவி புனித அந்தோனியார் கடற்றொழில் கிராமிய அமைப்பினருக்கு அமைச்சர் நன்றிகளையும் தெரிவித்தார். (அ)

## சட்டத்துக்கு...

அதனை அண்மித்த பகுதியில் பொது மக்களுடன் ஒன்றிணைந்து துப்பரவுப் பணியில் ஈடுபட்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (அ)

## மாவை...

மயானத்தில் உடல் தகனம் செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் சகலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்துமாறு இலங்கை தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார். (அ)

## பல...

எவ்வாறு போட்டியிடுவது என்பது குறித்து பல சுற்று கலந்துரையாடல்கள் நடைபெற்றன.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த சஷீந்திர,

பல கட்சிகளுடன் கூட்டணி அமைத்து வரவிருக்கும் தேர்தலில் போட்டியிடுவது குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளதாகவும், ஆனால் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை.

கட்சியின் எதிர்கால வேலைத்திட்டம், மறுசீரமைப்பு நடவடிக்கைகள் மற்றும் மே தினம் குறித்து விவாதித்தோம்.

உழைக்கும் மக்களாக மே தினத்தை கொண்டாட முடிவு செய்தோம்.

எதிர்வரும், பிரதேச சபைத் தேர்தலில் நாங்கள் பொதுஜன பெரமுனவாக போட்டியிட வேண்டும் என்பதே பெரும்பான்மையானவர்களின் கருத்து- என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

## ஐ.தே.க. - சஜித் தரப்பு இணைந்து உள்ளூராட்சி தேர்தலில் போட்டி!

### திஸ்ஸ அத்தநாயக்க தகவல்

கொழும்பு, பெப். 02

ஐக்கிய தேசிய கட்சியும், ஐக்கிய மக்கள் சக்தியும் இணைந்து எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் போட்டியிடுவது தொடர்பாக இணக்கப்பாடு கிட்டியுள்ளதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கீழ்மட்டத்தில் இருந்து பிழைகளை திருத்திக் கொண்டு ஒன்றாக போட்டியிட தீர்மானித்திருக்கிறார்கள். அதுதொடர்பான பேச்சு வார்த்தைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன.

பொது சின்னத்தில் போட்டியிடுவதா என்ற இறுதி முடிவு இதுவரை எடுக்கவில்லை.

இந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலில் வெற்றி பெறுவதல்ல எமது குறிக்கோள். எதிர்வரும் காலங்களில் இடம்பெறும் ஜனாதிபதி மற்றும் பொது தேர்தலில் வெற்றி பெறுவதே எமது இலக்காகும். எனவே அந்த முயற்சியில் ஈடுபட்டு கொண்டிருக்கிறோம் - என்றார். (அ)

பொலிஸ் ஆணைக்குழு அனுமதியுடன்

## பொலிஸ் அதிகாரிகள் நால்வருக்கு இடமாற்றம்

கொழும்பு, பெப். 02

எதிர்வரும் 5 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில், நான்கு சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அனுமதிக்குட்பட்டு இந்த இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன.

சப்ரகமுவ மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் பி.பி.எஸ்.எம்.தர்மரத்ன, மேல் மாகாணத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

மேல் மாகாணத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் கே.பி.எம்.குணரத்ன, சப்ரகமுவ மாகாணத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

களுத்துறைக்கு பொறுப்பாக கடமையாற்றிய பிரதி பொலிஸ்மா பி.ஏ.என்.எல்.விஜேசேன, நலன்புரி பிரிவுக்கு பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபராக இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் கடமைகளை நிறைவேற்றும் பெண் பிரதி பொலிஸ்மா அதிபர் பத்மினி நலன்புரி பிரிவுக்கு பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் பதவியில் இருந்து களுத்துறைக்கு பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (அ)

## பழுதடைந்த பழவகைகள் கைப்பற்றப்பட்டு அழிப்பு

கல்முனை, பெப்.02

அம்பாறை மாவட்டம் கல்முனை மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் பழுதடைந்த திராட்சை, தோடம் பழங்கள் உள்ளிட்ட பழவகைகள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன.

மனிதனுக்கு தீங்கு விளைவிக்கும் பங்கசு படர்ந்த திராட்சை பழங்கள், அழுகிய தோடம்பழங்கள் உள்ளிட்ட பழவகைகள் யாவும் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன.

நேற்று முற்பகல் அம்பாறை மாவட்டத்தில் கல்முனை மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் பழுதடைந்த பழங்கள் வீதியோரங்களில் விற்பனை செய்யப்படுவதாக கல்முனை பிராந்திய சுகாதார சேவை பணிமனையின் பணிப்பாளருக்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளது.

குறித்த முறைப்பாட்டிற்கமைய செயல்பட்ட பணிப்பாளர் சகீலா இஸ்ஸதீனின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலில் சென்ற பொதுச்சுகாதார உத்தியோகத்தர்கள் பெருந்தொகையான பழுதடைந்த திராட்சை, தோடம் பழங்கள் உள்ளிட்ட பழங்களை பறிமுதல் செய்து அழித்தனர்.

குறைந்த விலையில் பழங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளதுடன் வெளிமாவட்டங்களில் இருந்து விற்பனைக்காக இங்கு கொண்டுவரப்பட்டுள்ளன என விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (எ)

# நெல்லுக்கு உத்தரவாத விலை அரசால் வழங்க முடியவில்லை

### எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு



கொழும்பு, பெப். 02

**கிழக்கில் நெல் அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ளபோதிலும் அரசாங்கத்தினால் நெல்லுக்கான உத்தரவாத விலையை வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

குருநாகல், ஹிரியால தேர்தல் தொகுதியில், கனேவத்த பிரதேசத்தில் அமைந்துள்ள இலுக்வத்த கிராமத்தில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நெல் அறுவடை பணிகள் ஆரம்பமாகிவிட்டபோதிலும் அரசாங்கத்தினால் நெல்லுக்கான உத்தரவாத விலையை வழங்க முடியாதுபோயுள்ளது. கிழக்கு மாகாணத்தில் நெல் அறுவடை செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையிலும் இன்னமும் உத்தரவாத விலையை வழங்கப்படவில்லை.

3 இலட்சம் மெற்றிக் தொன் நெல் கொள்வனவுக்கு திறைசேரி 5 பில்லியன் ரூபாக்களை ஒதுக்கியுள்ளதாக அறியமுடிகிறது. இருந்த போதிலும் நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு நெல் கொள்வனவு செய்வதற்கு இன்னும் பணம் தேவை என்ற கோரிக்கை திறைசேரிக்கு சமர்ப்பிக்கப்படாத காரணத்தினால் பெயருக்கு மாத்திரம் பணம் ஒதுக்கப்பட்டுள்ளது. இது அரசாங்கத்தின் பலவீனமாகும். இது ஆட்சியில் காணப்படும் குறைபாடுகளாக அமைந்துள்ளன.

நெல் கொள்முதல் செய்ய பணம் ஒதுக்கப்பட்டாலும், ஒதுக்கப்பட்ட பணத்தில் நெல் கொள்முதல் செய்யப்படவில்லை. கடந்த காலங்களில் தற்போதைய அமைச்சர்கள் சிலர் வயல்வெளிகளுக்குச் சென்று உர மானியம் மற்றும் நெல்லுக்கான உத்தரவாத விலை தொடர்பில் அதிகம் பேசினர். விவசாயத்துக்கு உயிர் கொடுக்கத் தயாராக இருந்த அரச பிரதிநிதிகளால் நெல்லுக்கான உத்தரவாத விலையைக் கூட வழங்க முடியவில்லை.

நெல்லுக்கான விலை 80 ரூபாக காணப்படுகின்றது. ஆனால் தேர்தல் காலத்தில் 150 ரூபா உத்தரவாத விலையைத் தருவோம் என அரச பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

தாம் கூறிய பேச்சுக்களை இணையத்தில் இருந்தும் நீக்கி விட்டு, அனைத்தையும் மறந்து விட்டுள்ளனர். இது மிகவும் நியாயமற்ற செயலாகும். 2025 பெரும் போகத்தில் 2.5 மெற்றிக் தொன் மற்றும் சிறு போகத்தில் 1.7 மெற்றிக் தொன் என்றவாறு அரசாங்கம் நெல் அறுவடையை மதிப்பிட்டுள்ளது .

இது தவிர, பயிர் சேத நிவாரணம், காட்டு யானை - மனித மோதலால் ஏற்படும் பயிர் சேதம், கனமழை மற்றும் வெள்ளத்தால் ஏற்பட்ட பயிர் சேதங்களுக்கான நிவாரணங்களை வழங்க அரசு தவறிவிட்டது. விவசாயிக்காக எந்த தியாகத்தையும் செய்யத் தயாரான அரசு இன்று மௌனம் காக்கிறது. இதே கதி அடுத்த போகத்திலும் தொடரக் கூடாது - என்றார். (அ)

# தொற்று நோய்கள், தொற்றா நோய்கள் சுகாதார கட்டமைப்பு மீது பெரும் சுமை

### அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ

கொழும்பு, பெப். 02

நாட்டில் அதிகரித்துள்ள தொற்று நோய்கள் மற்றும் தொற்றா நோய்கள் சுகாதார கட்டமைப்பின் மீது பெரும் சுமையாக மாறியுள்ளதாக, சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

இலங்கை போஷாக்கு சங்கத்தினால் ஒழுங்கமைக்கப்பட்ட 2025 ஆம் ஆண்டுக்கான வருடாந்த ஆய்வறிக்கை வெளியீட்டு நிகழ்வில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டின் போசாக்கு நிலையை உயர்த்துவதன் மூலம், சுகாதாரத்தை பேணவேண்டும்.

உடலியல் செயற்பாடுகளை மேற்கொண்டால், தொற்றா நோயகளில் இருந்து பாதுகாப்பு பெற முடியும்.

இவை, தனிநபர் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதுடன், நாட்டின் சுகாதார கட்டமைப்பு மீதான தேவையற்ற செலவுகளை குறைக்கவும் உதவும்.

இந்த இலக்கை அடைய, மருத்துவ வல்லுநர்கள், போசாக்கு நிபுணர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் ஏனைய சமூகம் சார்ந்த பல பங்குதாரர்களின் பங்களிப்புடன், தடுப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பது அவசியம்.

நாட்டில் அதிகரித்துள்ள தொற்று நோய்கள் மற்றும் தொற்றா நோய்கள் சுகாதார கட்டமைப்பின் மீது பெரும் சுமையாக மாறியுள்ளன.

அதனால் நோய்களுக்கான சிகிச்சைகளை வழங்குவதுடன், நோய்த்தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும் - என்றார். (அ)

# எலிக்காய்ச்சல் தொடர்பில் விழிப்புணர்வு நடைபவனி

நாவிதன்வெளி, பெப். 02

அம்பாறை , நாவிதன்வெளியில் எலிக்காய்ச்சல் தொடர்பான விழிப்புணர்வு நடைபவனி நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மத்திய முகாம் நகரில் ஆரம்பமானது

குறித்த நடைபவனியானது சமுர்த்தி வங்கி அருகில் ஆரம்பித்து மத்திய முகாம் பிரதேச மருத்துவ மனையில் வரை இடம்பெற்றதுடன் எலிக் காய்ச்சல் தொடர்பிலான விழிப்புணர்வு உரையுடன் நிறைவு பெற்றது.

நாவிதன்வெளி பிரதேச செயலகத்தின் அனுசரணையுடன் நாவிதன்வெளி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தால் முன்னெடுக்கப்பட்ட இந்த விழிப்புணர்வு நடைபவனியில்

சுகாதார வைத்திய அதிகாரி ஐ. எம். முஜீப் உள்ளிட்ட ஊழியர்கள், நாவிதன்வெளி பிரதேச சபை செயலாளர் பி. சதீஸ்கரன் உள்ளிட்ட ஊழியர்கள், மத்திய முகாம் பிரதேச மருத்துவமனையின் மாவட்ட வைத்திய அதிகாரி இசுரு கொடிகார, நாவிதன்வெளி பிரதேச செயலகத்தின் அதிகாரிகள், மத்திய முகாம் ஜீ. எம். எம். எஸ். பாடசாலை அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்கள் மற்றும் உயர்தர வகுப்பு மாணவர்கள், மற்றும் மத்திய முகாம் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள், அன்னமலை இராணுவ முகாம் பொறுப்பதிகாரி உள்ளிட்டவர்களும், பொது மக்களும் கலந்து கொண்டனர்.




தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் எலிக்காய்ச்சல் நோய் தொடர்பில் தெளிவூட்டல்கள் வழங்கப்பட்டன. (எ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 02.02.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org